ஏப்ரல் 22, 2001 ~~ரூபா 14.00~~ அறிமுக விலை ரூபா 12.00

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI
සුඩර් ඔළි
வார மலர்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நூலகத்துறைப் படிப்பகம்







## தமிழகத்தில் தேர்தல் விளையாட்டு




## பேச்சுவார்த்தை இன்னும் ஒரே கேள்விக்குறி!

## பெண்கள் மீது முறைகேடுகள் மூடி மறைப்பா?

## திருமலையில் இப்படியும் ஓர் அட்டூழியம்

## சோனியாவுக்கு அனிதா போட்டி!

# உளவு விமானங்களால் மட்டக்களப்பில் அச்சம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் மீது தற்போது உளவு விமானங்கள் நோட்டம் விட்டு வருகின்றன. அத்துடன் விடுதலைப் புலிகளின் முகாம் பகுதிகள் எனக் கூறிக் கொண்டு விமானத் தாக்குதல்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

இவை மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினர் பாரிய தாக்குதலுக்கு தயாராகும் முஸ்தீபுகளே என்பது நன்கு புலனாகிறது.

விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான கரிகாலன், படைத்தளபதி கருணா, விசு ஆகியோர் வடபுலத்தில் இருந்து மட்டக்களப்பு மாவட்டத்திற்கு ஐநூறுக்கும் மேற்பட்ட உறுப்பினர்களுடன் வந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

விடுதலைப் புலிகள் தாம் அறிவித்திருக்கும் ஒருதலைப்பட்ச போர் நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் பட்சத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிரேஷ்ட தலைவர்களின் வழிகாட்டலின் கீழ் பாரிய தாக்குதலில் இவர்கள் ஈடுபடுவார்கள் என படைத்தரப்பு தெரிவிக்கிறது.

கரிகாலன், கருணா, விசு ஆகியோர் கிழக்கு மாகாணத்துக்கு வந்ததாக விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து உத்தியோக பூர்வமாக எதுவித தகவலும் வெளியாகவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொக்கட்டிச்சோலை மற்றும் பழுகாமம் தொடக்கம் வாகரை வரை உள்ள பரந்த வயற் பிரதேசம் ஆகியவை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளன.

விடுதலைப் புலிகளின் தலைவர்கள் வந்திருப்பதாக செய்திகள் கசியத் தொடங்கியதையடுத்து இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களுக்கான போக்குவரத்துப் பாதைகளில் கடுமையான கட்டுப்பாடுகளை பாதுகாப்பு தரப்பினர் விதித்துள்ளனர்.

அரச அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள் அப்பிரதேசத்துக்கு செல்லும் போது அனுமதி பெற்றுச் செல்ல வேண்டும் என்ற உத்தரவையும் படையினர்



படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள மட்டு. நகர் அரசடிச் சந்தியில் ஒட்டப்பட்டிருந்த அன்னை பூபதியின் வர்ணச்சுவரொட்டிகளையே படத்தில் காண்கிறீர்கள். இதேபோன்ற சுவரொட்டிகள் புளியந்தீவு புனித மைக்கல் கல்லூரிச் சந்தி, பொதுச்சந்தை, கல்லியங்காடு சேமக் காலை, தாண்டவன் வெளி, கல்லடி ஆகிய இடங்களிலும் ஒட்டப் பட்டிருந்தன. அன்னை பூபதியின் 13ஆவது நினைவுதின நிகழ்வுகள் மார்ச் 19ஆம் திகதி தொடக்கம் மட்டக்களப்பில் புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதிகளில் நடைபெற்று வருகின்றன.

விதித்துள்ளனர்.

''மட்டக்களப்பு மாவட்டத்தில் நவீன போர் விமானங்களின் உதவியுடன் விடுதலைப் புலிகளின் முகாம் பகுதிகளில் படையினர் தாக்குதல் நடத்தத்திட்டமிட்டிருக்கிறார்கள். எனவே அப்பிரதேசத்திலிருந்து நான்கு கிலோ மீற்றர் தூரத்திற்கு விலகியிருக்க வேண்டும்'' இவ்வாறு படைத் தரப்பினரால், அண்மையில் பொதுமக்களுக்கு வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து கடந்த 22ஆம் திகதி மட்டக்களப்பு தொப்பிக்கல காட்டுப் பகுதியில் படையினரின் கிபீர் ரகபோர் விமானங்கள் தாக்குதல் நடத்தின. காலை தொடக்கம் பகல் 12 மணி வரை நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் பல முகாம்கள் சேதப் படுத்தப்பட்டன என்று படைத்தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

இதே சமயம் விவசாயிகளின் வயல் வாடிகளைக் குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், விவசாயிகள் அச்சமடைந்து ஓடியதாகவும் அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தத் தாக்குதல்களைத் தொடர்ந்து தற்போது உளவு விமானங்கள் அடிக்கடி நோட்டம் விடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

விடுதலைப் புலிகள் பாரிய தாக்குதலுக்குத் தயாராகி வருகின்றனர். தாக்குதலுக்கு தேவையான முன்னேற்பாட்டுப் பயிற்சிகள், ஆலோசனைகள் என்பன தற்போதைய தலைவர்களின் வழிகாட்டலில் வழங்கப்படுகின்றன — இவ்வாறு கூறும் அரசு, ஐநூறுக்கு மேற்பட்ட சடலங்களை வைக்கத் தேவையான பிரேதப் பெட்டிகளையும் விடுதலைப் புலிகள் சேகரித்து வருகிறார்கள் என்றும் கூறுகிறது.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் படை முகாம்களைப் பலப்படுத்தும் நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் படைத் தரப்பினரின் சகல செயற்பாடுகளும் கிழக்கு மாகாணத்தில், குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பாரிய படை நகர்வு ஒன்றுக்கான அறிகுறியாகவே கருதப்படுகிறது.

— சத்துருக்கன்

# வாழைச்சேனைப் பகுதியில் கெடுபிடி அதிகரிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாழைச்சேனை நகரில் இரவு 7.00 மணிக்குப் பின் பொதுமக்கள் நடமாடக் கூடாது எனப் படையினர் அறிவித்துள்ளனர்.

கடந்த 3ஆம் திகதி இரவு 8.30 மணியளவில் பதுங்கியிருந்த படையினர் விடுதலைப்புலிகள் என சந்தேகிக்கப்படும் சிலர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

அதனைத் தொடர்ந்து பதிலுக்குத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்தத் துப்பாக்கிப்பிரயோகத்தால் வாழைச்சேனை நகரிலுள்ள பல வர்த்தக நிலையங்களின் கண்ணாடி அலுமாரிகள் பலத்த சேதமடைந்தன. அத்துடன் பொருட்களும் சேதமாகின.

இச் சம்பவத்தையடுத்து மறுநாள் காலை அப்பகுதிக்கு வந்த படையினர் கடைகளை நேரகாலத்துடன் மூடி விடுமாறு கேட்டனர். இரவு 7.00 மணிக்குப்பின் எவரும் நடமாடக்கூடாது என்றும் அவ்வாறு நடமாடினால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் படும் எனவும் எச்சரித்துச் சென்றனர்.

மட்டக்களப்புக்கு வடக்கே 32 கிலோ மீற்றர் தொலைவில் வாழைச்சேனை நகரில் தமிழ், முஸ்லிம் வர்த்தகர்களின் வியாபார நிலையங்கள் உள்ளன.

அத்துடன் வாகரை, கிரான் பகுதிகளில் இருந்து பெண்கள் மரக்கறி, பழவகைகளை இப்பகுதியில் கொண்டு வந்து விற்று வருகின்றனர்.

வாழைச்சேனை பிரதேச மக்களதும் வாகரைப்பகுதி மக்களதும் வைத்தியசேவை உட்பட பல்வேறு தேவைகளை பூர்த்தி செய்யுமிடமாகவும் வாழைச்சேனை விளங்குகிறது. வாழைச்சேனையின் கல்குடா, பேத்தாளை, கண்ணன் கிராமம், விநாயக புரம் என தொலைதூரத்து மக்கள் அவசர தேவைகளுக்காக குப்பி விளக்குடன் கூட நகருக்கு வந்து தேவைகளைப் பூர்த்தி செய்யும் நிலை. அப்படியிருக்க படையினர் இவ்வாறு அறிவித்துள்ளதால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.

இதே வேளை வாழைச்சேனை நகரில் படையினர் பாதுகாப்புக் கடமையில் இருந்தும் கூட இரவு நேரங்களில் மக்கள் வங்கி உட்பட பல கடைகள் உடைக்கப்பட்டு திருடப்பட்ட சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

தற்போது வர்த்தகர்களுக்கு இரவு நேரங்களில் கடைகளில் தங்க வேண்டாம் என படையினர் அறிவித்துள்ளதால் இரவில் கடைகள் உடைக்கப் பட்டு களவு போகும் அபாயம் அதிகரித்துள்ளதாக வர்த்தகர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்

# சந்திவெளியில் குடும்பஸ்தர் கொலை!

தாயாரின் வீட்டுக்குச் சென்று வருவதாகக் கூறிச் சென்ற இளம் குடும்பஸ்தர் ஒருவர் மறுநாள் வாவிக்கரையில் சடலமாகக் காணப்பட்டார்.

மட்டக்களப்புச் சந்திவெளியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வைத்திய பரிசோதனை நடத்தப்படாமல் சடலம் அடக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஏறாவூர் பொலிசாரின் உத்தரவையடுத்து சடலம் மீண்டும் தோண்டப்பட்டு ஏறாவூர் மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

அங்கு சட்ட வைத்திய அதிகாரி பிரேத பரிசோதனை நடத்தி அறிக்கை சமர்ப்பித்தார்.

தலையில் ஏற்பட்ட வெட்டுக் காயத்தினால் மூளை பாதிக்கப்பட்டு மரணம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இக்கொலை தொடர்பான விசாரணைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

முன்னாள் தமிழ்க்குழு ஒன்றில் இணைந்து செயற்பட்டார் என்று கூறப்படும் இவரை சம்பவதினம் சில இளைஞர்கள் அழைத்துச் சென்றனர் என்று சொல்லப்படுகிறது.

# படுவான்கரை ஆசிரியர்களின் பிரச்சினைக்குத் தீர்வு வராதா?

மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினரின் கட்டுப் பாட்டில் இல்லாத படுவான்கரைப் பகுதி பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் பல கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

ஆனால் கல்வித்திணைக்களமோ, சம்பந்தப்பட்டவர்களோ இவர்களது பிரச்சினைகளைத் தீர்க்க முன்வரவில்லை என்று குறை கூறப்படுகிறது.

* மாணவர்களுக்கான இலவச சீருடைகளை மட்டுநகர்ப் பகுதியில் இருந்து சைக்கிளில் அல்லது சொந்த மோட்டார் சைக்கிளில் ஆசிரியர்கள் எடுத்துச் செல்ல வேண்டும்.
* இடர் உதவிக் கடனுக்கு விண்ணப்பித்தவர்களுக்கு பல வருடங்கள் கடந்தும் கடன் இல்லை.
* பதில் அதிபராகக் கடமையாற்றும் சிலருக்கு நிரந்தர அதிபர் நியமனம் இன்னும் வழங்கப்படவில்லை.
* ஆசிரியர்கள் பலர் பல வருடங்களாக இடமாற்றம் இல்லாமல் தொடர்ந்து படுவான்கரைப்பகுதியில் கடமையாற்றுகின்றனர்.
* கல்வி அமைச்சின் 17:99 இலக்க சுற்றறிக்கையின் படி ஆசிரியர் ஒருவர் கஷ்டப் பிரதேசம் ஒன்றில் தொடர்ச்சியாக 3 வருடங்கள் கடமையாற்றினால் அவரது சேவைக்காலத்தில் மேலதிகமாக ஒரு வருடம் கணிக்கப்பட்டு அவருக்கு சம்பள உயர்வும் வழங்கப்பட வேண்டும். ஆனால் இதுவரையும் இவ்வாறு எவருக்கும் வழங்கப்படவில்லை.
* நகரப்புறங்களில் இருந்து படுவான்கரைப் பகுதிக்குத் தினமும் செல்பவர்கள் அம்மினாந்துறை, மண்முனை வாவியைக் கடந்தும் வவுணதீவுப் பாலத்தைக் கடந்தும் செல்ல வேண்டி உள்ளது.
* எழுவான் கரைப்பகுதியில் உள்ள இராணுவத்தினரின் சோதனைச் சாவடிகளில் பல கேள்விகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஆசிரியர்களுக்கு ஏற்படுகிறது.

தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்குமா என்று ஆசிரியர்கள் அங்கலாய்க்கிறார்கள்.

— நேரன்



''என்னப்பா! அந்தக் கள்ளன் என்னை அடிச்சுப்போட்டுட்டு சங்கிலியையும் அறுத்துக்கொண்டு ஓடுறான். விறைச்சுப் போய் நிற்கிறியள்!''

''அவன்ரை துணிச்சலைப் பார்த்து மெய் மறந்து போனன்!''

# போர் நிறுத்த அறிவிப்பும் முல்லைக் கடல் மோதலும்

அரசும் விடுதலைப்புலிகளும் தனித்தனியாக ஒருதலைப்பட்சயுத்த நிறுத்தத்தை அறிவித்து அதனை கடைப்பிடித்து வந்த வேளையில் முல்லைத்தீவுக் கடற்பரப்பில் கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்கும் இடையில் கடும் சமர் இடம்பெற்றிருக்கிறது.

கடந்த மூன்று வாரங்களுக்குள் முல்லைக் கடற்பரப்பில் நிகழ்ந்த இரண்டாவது பெரிய கடற்சமர் இதுவாகும்.

விடுதலைப்புலிகள் கடந்த டிசம்பர் 24ஆம் திகதி நள்ளிரவு முதல் தாம் ஒரு தலைப்பட்சமான யுத்தநிறுத்தத்தை ஒரு மாதத்துக்குக் கடைப்பிடிக்கப்போவதாக அறிவித்தனர்.

நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் யுத்தநிறுத்தத்தை நான்காவது மாதமாக அவர்கள் நீடித்து வருகின்றனர்.

அரசும் சிங்கள — தமிழ் புத்தாண்டை முன்னிட்டு ஏப்பிரல் 13 நள்ளிரவு தொடக்கம் ஏப்பிரல் 17 வரையான ஐந்து நாட்களுக்கு தானாக வலிந்து தாக்குதலில் ஈடுபடப்போவதில்லை என்று அறிவித்தது.

இவ்வாறு அரசினால் கடைப்பிடிக்கப் பட்டு வந்த யுத்தநிறுத்தம் முடிவடைய சுமார் 28 மணித்தியாலங்கள் இருந்தவேளையிலேயே கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்கும் இடையிலான இந்த கடற்சமர் கடந்த திங்கள் அதிகாலை முல்லைத்தீவுக்கடலில் வெடித்திருக்கிறது.

திங்கள் அதிகாலை 1.45 மணியளவில் வழமையான காவல் ரோந்துக் கடமையில் ஈடுபட்டிருந்த கடற்படையினரின் டோரா அதிவேக தாக்குதல் படகுகள் முல்லைத்தீவு சாலை கடற்பரப்பில் ஒரு தொகுதிக் கண்ணாடி இழைப்படகுகளை அவதானித்த பின்னர் அவற்றை நோக்கிச் சென்றன.

இவ்வேளையில் விடுதலைப்புலிகள் கடற்படையினரின் டோராப் படகுகள் மீது மோட்டார் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலின்போது B-490, B460, B-471 இலக்கங்களையுடைய கடற்படையினரின் மூன்று டோராப் படகுகள் பலத்த சேதமடைந்து செயற்படும் தன்மையை இழந்தன.

கடற்படை அதிகாரிகளின் தகவல்களின்படி B-490 இலக்க டோராப் படகின் இயந்திரம் கடற்புலிகளின் குறிதவறாத தாக்குதலினால் முற்றாக செயலிழந்தது.

அதேவேளை B-461,B-470 ஆகிய டோராப் படகுகளின் ராடர்களும், இரவு நேரப் பார்வைக் கருவிகளும் சேதமடைந்தன.

கடற்புலிகளின் அதிரடித்தாக்குதலை கடற்படையினர் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

காங்கேசன்துறைக் கடற்படைத்தளத்தில் இருந்தும் திருமலைக் கடற்படைத்தளத்தில் இருந்தும் மேலதிக துருப்புக்களை அனுப்பும்படி கடற்படையினர் ரேடியோத் தகவல் அனுப்பினர்.

இந்தத் தகவலை அடுத்து எதிர்பாராத தாக்குதல்களை சமாளிக்கவென திருமலையில் தயார் நிலையில் வைக்கப் பட்டிருந்த டோராத் தாக்குதல் படகுகளும் வோட்டர் ஜெட் படகுகளும் சண்டை நடந்த இடத்துக்கு விரைந்தன.

அதேவேளை வடமராட்சி நாகர்கோயில் கடற்பரப்பில் ஏற்கனவே ரோந்துக் கடமையில் ஈடுபட்டிருந்த இரு டோராப் படகுகளும் களத்துக்கு அனுப்பப்பட்டன.

அங்கு சென்ற மேலதிக உதவிப் படையினரின் தாக்குதலுக்கு உள்ளாகி புலிகளின் 7 படகுகளில் சரக்குகள் ஏற்றிவந்த இரு படகுகள் முற்றாகக் கடலில் மூழ்கடிக்கப்பட்டன என்று கடற்படை கூறுகின்றது.

அத்துடன் புலிகள் தரப்பில் இருவர் இந்த மோதலில் கொல்லப்பட்டும் மற்றும் பலர் காயமடைந்தும் உள்ளனர் என்று கடற்படை உயர் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மோதலைத் தொடர்ந்து சண்டை இடம்பெற்ற பகுதியில் எண்ணெய் பரல்கள் மிதந்து கொண்டிருந்தன என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

மேலதிக உதவிக்கு அனுப்பப்பட்ட படையினர் தாக்குதலில் செயலிழந்த டோராப் படகுகளை விமானப் படையினரின் பாதுகாப்புக்கு மத்தியில் காங்கேசன்துறைக் கடற்படைத்தளத்துக்கு இழுத்து வந்தனர்.

ஆனாலும் அவற்றை மீளப் பாவனையில் ஈடுபடுத்தப்படுவது சந்தேகமே?




அண்மைக் காலமாக கடற்படையினருக்கு எதிரான தாக்குதல்களின் போது கடற்புலிகள் தமது கடற்கரும்புலிகளைப் பயன் படுத்தவில்லை.

நவீனரக குறுந்தூர மோட்டார் பீரங்கிகளின் உதவியுடனேயே கடற்படை யினரின் அதிவேக தாக்குதல் படகு களை தாக்கி வந்தனர்.

இது கடற் படையினரின் படைக்கலங்களுக்கு எதிராக புலிகள் புதிய உத்திகளைச் செயற்படுத்துவதையே காட்டுகிறது. அத்துடன் புலிகள் நவீன ரக ஆயுதங்களையும் அறிமுகப்படுத்தியிருக்கின்றார்கள்.

இத்தாக்குதல் சம்பந்தமாக கருத்து வெளியிட்ட உயர் படைத் தரப்பு அதிகாரியொருவர், "புலிகள் அரச படைகளுக்கு எதிராக பெரிய அளவில் தயார்ப்படுத்தலில் ஈடுபடுவதை இத்தாக்குதல் உறுதிசெய்து விட்டது" என்கிறார்.

"அவர்கள் ஏன் யுத்த நிறுத்தம் செய்யுமாறு அரசை நிர்ப்பந்திக்கிறார்கள் என நாம் சந்தேகப்பட்டது தற்போது சரியாகிவிட்டது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் புலிகள் பெருமளவு ஆயுதங்களை, விசேடமாக விமானப்படை விமானங்களை இலகுவாக இலக்கு வைத்துத் தாக்கக்கூடிய நவீன விமான எதிர்ப்பு ஏவுகணைகளைக் கொள்வனவு செய்திருப்பதாக இராணுவப் புலனாய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

அதே சமயம் அண்மையில் கிழக்கு மாகாணத்தின் கொக்கட்டிச்சோலை பகுதிகளுக்கு விடுதலைப் புலிகளின் விசேட தாக்குதல் தளபதி கருணா சென்றிருந்தார். அவரது வருகையைத் தொடர்ந்து புலிகளின் ஆட்சேர்ப்பு நடவடிக்கையும் முடுக்கிவிடப் பட்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடற் சமர் குறித்து புலிகளின் குரல் வானொலி தனது திங்கள் இரவுச் செய்தி அறிக்கையில் விடுதலைப் புலிகள் போர் நிறுத்தத்தை அறிவித்துள்ள காலப்பகுதியில், கடற்படையினர் மூன்றாவது தடவையாக தாக்குதல் நடத்தி இருப்பதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் வழமையான ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்புலிகளின் படகுகள் மீது புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அத்துமீறி நுழைந்த டோராப் படகுகள் தாக்குதலை நடத்தியிருப்பதாகவும் — இது புலிகளின் யுத்த நிறுத்தத்தை உதாசீனம் செய்யும் அரசின் போக்கை தெளிவாக எடுத்துக் காட்டுவ தாகவும் — புலி களின் குரல் வானொலி மேலும் தெரிவித்தது.

தமிழ்ப் புலிகளின் லெப். தமிழ் மறவன் (சிவலிங்கம்— இராஜேந்திரன், கிளிநொச்சி) 2ஆம் லெப்.கவிமகள் (லோகநாயகி செல்வபதி, அம்பாறை) ஆகியோர் இச்சண்டையில் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

இது இவ்வாறிருக்க செக் குடியரசில் இருந்து சுமார் 25 லட்சம் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான போர்த் தளவாடங்கள் திங்கட்கிழமை கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தன.

தற்போது கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்திருக்கும் ஆயுத தளவாடங்கள் மற்றும் யுத்த தாங்கிகள் பற்றிய விவரங்களை "சுடர் ஒளி" தனது டிசம்பர் 17 ஆம்திகதி "கள நிலைமை" கண்ணோட்டத்தில் விலாவாரியாக வெளியிட்டிருந்தது.

அதாவது ஆனையிறவு படைத்தள வீழ்ச்சியினைத் தொடர்ந்து பலகோடி ரூபாவைக் கொட்டி ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. பல பெறுமதிவாய்ந்த ஆயுத தளவாடங்களில் செக்குடியரசிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரி—55 ரக யுத்த தாங்கிகளும் அடங்கும். சுமார் 50 வருடங்கள் பழைமை வாய்ந்த இந்த ரி—55 கொள்வனவு கடும் விமர்சனங்களுக்கு உள்ளானது.

இவை புலிகளிடம் உள்ள ஆர்.பி.ஜி — 7 தாக்குதலுக்கே நின்று பிடிக்க முடியாதவை. புலிகளிடம் தாங்கி எதிர்ப்பு ஏவுகணைகள் உண்டு என்பதை நன்கு உணர்ந்த இராணுவம் ரி—55 ரக யுத்தத் தாங்கிகளை கொள்வனவு செய்தது ஏன் என்று கேள்வி எழுப்பப்படுகிறது.

இதற்கு முன்னர் சுமார் எட்டுக்கும் குறையாத 120 மி.மீ பல்குழல் ராக்கட் பீரங்கிகளை செக்குடி யரசு இலங்கை இராணுவத்துக்கு அன்பளிப்பாக வழங்கியிருந்தது.

இந்த ஆயுதக் கப்பலின் வருகை சம்பந்தமாக ராய்ட்டர் செய்தி சேவைக்கு இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் கருணாரட்ண கருத்துத் தெரிவித்திருந்தார். இந்த ஆயுதக் கப்பலின் வருகை நோர்வே அனுசரணையுடன் இலங்கை அரசும் விடுதலைப்புலிகளும் நடத்தவுள்ள சமாதானப் பேச்சுக்களுக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது என்று கூறியிருந்தார். கடந்த வருடம் கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதங் களில் ஒரு பகுதியே இவை என்று கூறியிருக்கின்றார்.

இராணுவப் பேச்சாளர் கூறியது போல இவை சமாதானப் பேச்சுக்களைப் பாதிக்காது விடக்கூடும். ஆனால் பேச்சுக்கள் முறிவடையும் சந்தர்ப்பத்தில் அதனைத் தொடர்ந்து ஏற்படக்கூடிய சூழ் நிலையில் மிகவும் பாதிப்புக்களை ஏற் படுத்தும் என்பதில் சந்தேகம் இல்லை.

நாளுக்கு நாள் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் இரு தரப்பினரும் சமாதானப் பேச்சுக்களில் இருந்து விலகிச் செல்லும் தன்மையை வெளிப்படையாகவே அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

இருதரப்பும் தத்தமது தாக்குதல்களை தற்காப்பு என்றும் தயார்ப் படுத்தல்களை வருமுன் காப்பு என்றும் நியாயப் படுத்து கின்றன.

அப்படியாயின் நோர்வே முயற்சியின் இறுதி முடிவை இவை இப்போதே படம் பிடித்துக்காட்டுகின்றனவா?

## எரிபொருள் விலை உயர்வுகள் கட்டண அதிகரிப்புகள்

சித்திரைப் புத்தாண்டோடு எரிபொருள் களின் விலைகளை அரசாங்கம் உயர்த்தியிருக்கிறது. அதன் விளைவாகப் பல கட்டண உயர்வுகள் வரவிருக்கின்றன.

ஒரு லீட்டர் டீசலுக்கு ரூபா 3/— அதிகரிப்பு. மண்ணெண்ணெய் ஒரு லீட்டருக்கு ரூபா 1/— அதிகரிப்பு.

எரிபொருளுக்கு ஆறு மாதங்களில் மூன்று தடவைகள் விலைகள் அதிகரிக்கப் பட்டுள்ளன.

உலக வங்கியின் வற்புறுத்தலின் பேரிலேயே அரசாங்கம் எரிபொருள்களின் விலைகளை உயர்த்தி வருவதாக அரசின் மீது ஜே.வி.பி. குற்றம் சுமத்துகிறது.

மண்ணெண்ணெய் விலை உயர்வால் கிராம மக்களுக்குப் பெரும் பாதிப்பு.

டீசல் விலை உயர்வால் ரயில், பஸ், லொறிக் கட்டணங்கள் அதிகரிக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

ரயில், பஸ், லொறிக் கட்டணங்கள் அதிகரித்தால் உணவுப் பொருட்களின் விலைகளும் உயர்ந்துவிடும். பிரயாணிகளும் கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டி வரும்.

ஏற்கனவே வாழ்க்கைச் செலவு உயர்வால் அவதிப்படும் பொதுமக்கள் எப்படிப் புதுச் சுமையைத் தாங்கிக்கொள்ளப் போகிறார்கள் என்ற ஐ.தே.க. நெருப்பு எடுக்கிறது.

## அமெரிக்கப் பத்திரிகையாளர் வன்னிப் பகுதியில் காயம்!

வன்னிப் பகுதியில் செய்திகள், தகவல்கள் சேகரிப்பதில் ஈடுபட்டிருந்து துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான அமெரிக்கப் பத்திரிகையாளர் மேரி கத்தலின் கொல்வின் கொழும்பில் சிகிச்சை பெற்று வருகிறார்.

44 வயதுடைய இப் பத்திரிகையாளர் வவுனியா பகுதியில் வைத்து திங்கள் இரவு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்.

விடுதலைப் புலிகளது கட்டுப்பாட்டுப் பகுதியில் இவர் செய்திகள் சேகரிப்பதில் ஈடுபட்டிருந்தார். அப்பகுதியிலிருந்து புலி உறுப்பினர்களால் அழைத்துவரப்பட்ட பத்திரிகையாளர் மேரி கத்தலின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வர முற்பட்ட போதே காயங்களுக்கு உள்ளானார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அப்பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே மோதல் இடம் பெற்றதாகவும் இம் மோதலில் இடையில் சிக்கியே அவர் காயமடைந்ததாகவும் கூறப்படுகிறது.

உடனடியாக அவர் வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டு அங்கிருந்து கொழும்பு வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இவரது உடலில் நான்கு காயங்கள் ஏற்பட்டிருப்பதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.

1995 ஆம் ஆண்டுக்குப்பின் வன்னி சென்று விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்களைச் சந்தித்து மேரி கத்தலின் பேட்டிகளைப் பெற்றுள்ளார். வன்னி நிலைமைகளை நேரில் அறிந்த முதலாவது வெளிநாட்டுப் பத்திரிகையாளர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

லண்டன், 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையின் பத்திரிகையாளரான இவர் புலிகளின் அரசியல் தலைவர் தமிழ்ச் செல்வனை அண்மையில் பேட்டி கண்டிருந்தார். அப்பேட்டி கடந்த ஞாயிற்றுக் கிழமை அப்பத்திரிகையில் முன்பக்கச் செய்தியாக வெளியாகி இருந்தது.

மேரி கத்தலின் பல்வேறு நாடுகளின் யுத்தப் பிரதேசங்களுக்குச் சென்று துணிவாக செய்திகளைச் சேகரித்தமைக்காகப் பல விருதுகளைப் பெற்றுள்ளார்.


மலைநாட்டில்

Maths / Science & Technology
O/L 2001, O/L 2002, Grade 9

| Subject | O/L 2001 | O/L 2002 | Grade 9 |
|---|---|---|---|
| Maths | Sat 1.30-330 | Sun 10.30-12.30 | Mon / Tue 4.45-5.30 |
| Science | Sat 11.30-130 | Sun 8.30-10.30 | Mon / Tue 4.45-5.30 |

விரிவுரை W.L.Rajaratnam

EPI

87/1A, கட்டுகஸ்தோட்ட வீதி, கண்டி. தொலைபேசி:072 500475
(வித்தியார்த்த கல்லூரி முன்னால்)



தலைநகரில்

Maths / Science & Technology
O/L 2001, O/L 2002

| Subject | O/L 2001 | Grade 10 |
|---|---|---|
| Maths | Fri 5.00-7.00 | Fri 3.00-5.00 |
| Science | Thu 5.00-7.00 | Thu 3.00-5.00 |

விரிவுரை W.L.Rajaratnam

EPI

316, காலி வீதி, கொழும்பு -04.
தொலைபேசி:075-516790
(St. Peters பஸ்தரிப்பு முன்னால்)

சுடர் ஒளி

22 ஏப்ரல், 2001

36/2, பிரெட்றிக்கா வீதி, கொழும்பு-06
டெலிபோன் - பாக்ஸ் : 501409/ 599834
E-mail: sudar@uthayan.com

## சட்டமும் மக்களும்

வடக்கு, கிழக்கு போர் முனைக்குச் செல்லும் பாதுகாப்புப் படையினருக்கு அரசாங்கம் ஓர் உபதேசத்தைச் செய்வது வழக்கம்.

அதாவது புலிகளுடனான போரில் வெற்றி பெறுவதற்கு முதற்படியாக வடக்கு, கிழக்கில் உள்ள பொதுமக்களின் மனங்களை வெல்லுங்கள் என்பதுதான் அந்த உபதேசம்.

பதினெட்டு வருடங்களாகப் போர் நடக்கிறது. இன்னும் வெற்றி இல்லை. மக்களின் மனங்களையாவது பாதுகாப்புப் படையினர் வென்றார்களா? அதுவும் இல்லை என்றே சொல்லலாம்.

அதற்கு மட்டக்களப்பில் கடந்த உயிர்த்தெழுந்த ஞாயிறன்று நடந்த ஒரு சம்பவம் நல்லதோர் உதாரணம்.

இது பொலிஸார் சம்பந்தப்பட்ட சம்பவம். இன்று யுத்தக் கடமைகளில் பொலிஸாரும் பங்குகொள்கிறார்கள்.

மட்டக்களப்பு நகரின் கோட்டைமுனை மெதடிஸ்த தேவாலய முற்றத்தில் உயிர்த்தெழுந்த ஞாயிறு ஆராதனை நடந்து கொண்டு இருந்தது. பெருந்திரளானோர் அதில் கலந்துகொண்டனர்.

தேவாலயப் பொறுப்புக் குரு அருட்திரு. வி.பால்ராஜ் அருளுரை வழங்கிக் கொண்டிருந்தார்.

துப்பாக்கிகள் சகிதம் பொலிஸார் வந்தனர். தேவாலய கேற்றைத் தாமே திறந்து திபு திபுவென்று உள்ளே நுழைந்தனர். தேடுதல் நடத்தினர்.

ஆராதனையில் கலந்துகொண்டிருந்த முக்கிய பிரமுகர் ஒருவர் மனம் பொறுக்காமல் வாய் திறந்தார்.

இன்று உயிர்த்த ஞாயிறு. புனித நாள். ஆராதனை நடந்துகொண்டிருக்கிறது. இருதரப்பினரும் யுத்த நிறுத்தம் வேறு அறிவித்திருக்கிறார்கள். இந்த நிலையில் ஆலய வளவினுள் அனுமதியின்றி ஆயுதங்களுடன் நுழைவது முறையா? அது நாகரிகமான செயலா என்று கேட்டார்.

அது பொலிஸாரின் காதில் ஏறவில்லை. தேடுதலை முடித்துக்கொண்டே வெளியேறினார்கள். எவரும் கைது செய்யப் படவில்லை.

இதுதான் மக்கள் மனங்களை வெல்லும் இலட்சணமா?

இது மக்களை அவமதிப்பதாகவும் அவர்களை அந்நியப்படுத்துவதாகவுமே அமைகிறது! மேலும் மக்களின் பகை உணர்வுகளையும் பொலிஸார் இவ்விதமான வேண்டாத செயல்களின் மூலம் சம்பாதித்துக் கொள்கிறார்கள்.

இறை இல்லங்களில் படுகொலைகள் நடந்த சம்பவங்களும் உண்டு. அவை நிச்சயம் கண்டிக்கப்படவேண்டியவை. கண்டிக்கப்பட்டன.

அவற்றைப்போலத்தான் உயிர்த்த ஞாயிறு ஆராதனையின்போது கிறிஸ்தவ தேவாலய வளவினுள் பொலிஸார் துப்பாக்கிகள் சகிதம் அனுமதியின்றிச் சென்று தேடுதல் நடத்திய சம்பவமும் கண்டிக்கப்படவேண்டியதாகும்.

இன்றைய கொடூரமான அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் ஆகியவை பாதுகாப்புப் படையினருக்கும் பொலிஸாருக்கும் எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் சந்தேகத்தின் பேரில் தேடுதல் நடத்த அதிகாரம் அளிப்பது உண்மைதான்.

சட்டம் இடம் அளிக்கிறது என்பதால் மனிதாபிமானமோ மனிதப் பண்போ அற்ற நடவடிக்கைகளில் ஈடுபடலாமா?

வீதி நடைபாதையில் எவரும் நிறுத்து நிற்கக்கூடாது; நடந்து செல்லவேண்டும் என்பது சட்டம்.

சட்டப்படி காரியம் நடக்கிறதா? சட்டத்தை மீறுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறதா? பொலிஸார் கண்டும் காணாதவர்கள் போல் இருந்து வருகிறார்கள்.

அது சரி?

சட்டம் இருப்பது மக்களின் பாதுகாப்புக்கும் நல்வாழ்வுக்கும் வழி செய்வதற்குத்தான்.

சட்டத்தைவைத்துக் கொண்டு மக்களை அச்சுறுத்துவதிலோ பழிவாங்குவதிலோ அதிகாரத்தில் உள்ளவர்கள் ஈடுபடக்கூடாது.

இன உணர்வுகள் மிதமிஞ்சியுள்ள இந்நாட்களில் இந்த உண்மையைப் பலரும் மறந்துவிடுகிறார்கள்.

சட்டம் மக்களுக்காகவே தவிர, சட்டத்துக்காக மக்கள் அல்லர்.

# சமாதானமா, போரா? தயார் நிலையில் புலிகள்!

சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாகக் குழம்பிப்போய் இருக்கும் அரசாங்கம் இன்னும் முற்றாகத் தெளிவு அடையவில்லை.

இந்த மாத முடிவுக்குள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான திகதியையும் இடத்தையும் அறிவித்துவிடலாம் என்று அரசாங்கம் எதிர்பார்த்தது.

அதை வெளி நாட்டு அலுவல்கள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நாடாளு மன்றத்தில் தெரிவித்தார்.


சந்திரிகா

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் கலந்து பேசித்தானே நாளையும் இடத்தையும் நிர்ணயிக்கவேண்டும்.

நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்முக்குப் பதிலாக இலங்கையில் உள்ள நோர்வே தூதுவர் ஜொன் வெஸ்ட்போக் தூதரக உயர் அதிகாரி ஒருவர் சகிதம் புலிகளிடம் சென்றார்.

அரசாங்கத்தின் ஆதரவுடனும் அனுமதியுடனுமே சென்றார். வன்னி மல்லாவியில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க அரசியல் பிரிவின் தலைவர் எஸ்.பி. தமிழ்ச்செல்வனையும் மற்றும் இயக்க முக்கியஸ்தர்கள் மூவரையும் சந்தித்துப் பேசினார்.

கடந்த ஆறாம், ஏழாம் திகதிகளில் பத்து மணி நேரம் பேச்சுவார்த்தை நடந்தது.


அரசு சில தவறுகளைச் செய்து விட்டதாகப் புலித் தலைவர்கள் நோர்வேத் தூதுவரிடம் குற்றம் சாட்டினார்கள்.

சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கு வேண்டிய முன்தேவைகளை அரசு இன்னும் நிறைவேற்றத் தொடங்கக் கூடவில்லை என்று குறை கூறினார்கள்.

## நிலைப்பாடு

இந்த நிலையில் தமது நிலைப்பாடு என்ன என்பதையும் விளக்கினார்கள்.

யுத்தம் ஓய்ந்து பேச்சுவார்த்தைக்கான புறச்சூழல் ஏற்படவேண்டும். அத்துடன் மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு அவர்கள் அச்சமின்றி, அவலமின்றி வாழும் சகஜ நிலையும் தோன்ற வேண்டும். இவற்றை எல்லாம் உறுதி செய்வதற்கு புரிந்துணர்வு உடன்படிக்கை இருக்க வேண்டும்.


ஜொன் வெஸ்ட்போக்

இவற்றுடன் தாம் தடை செய்யப்பட்ட ஒரு பயங்கரவாத இயக்கத்தினர் என்ற தாழ்ந்த நிலையில் இருந்து அரசுடன் பேச முடியாது. மாறாகத் தாம் தன்மானத்துடன் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக அரசினருக்குச் சமனாக இருந்து பேசவேண்டும். ஆண்டானும் அடிமையும் ஒப்புக்குப் பேசுவது போன்ற நிலைமை இருக்கக்கூடாது. அப்படியான பேச்சால் எதிர்பார்க்கப்படும் பலன் ஏற்படாது. அதற்கு இணங்கவும் முடியாது.

ஆகவே பேச்சுவார்த்தைக்கு முன் தேவையாக அரசு தமது இயக்கத்தின் மீது விதித்துள்ள தடையை நீக்கவேண்டும். தாம் யுத்தநிறுத்தம் செய்து வருவதுபோல் அரசாங்கமும் யுத்தநிறுத்தம் செய்யவேண்டும்.

தமிழ்ப்பகுதிகளுக்கான பொருளாதாரத் தடையை அரசாங்கம் முற்றாக நீக்கவேண்டும். எரிபொருள், சீமெந்து போன்ற பொருட்களும் வேண்டியளவு கிடைக்கச் செய்ய வேண்டும்.

அரசாங்கம் மாற்றம் செய்துள்ளபடி அல்லாமல் பழைய நிலையில் புரிந்துணர்வு உடன்படிக்கையும் நடைமுறைக்கு வரவேண்டும்.

இப்படியெல்லாம் நோர்வேத் தூதுவரிடம் தமிழ்ச்செல்வன் எடுத்துக்கூறினார்.

அதனால்தான் அரச மட்டத்தில் குழப்பம் ஏற்பட்டது.

## இக்கட்டான நிலை

சமாதானத்தின் பேரால் வேறு எதைச் செய்ய முன்வந்தாலும் புலிகள் இயக்கம் மீதான தடையை அரசாங்கம் விரும்பினாலும்கூட நீக்கமுடியாது. அப்படியான ஓர் இக்கட்டான நிலை அரசுக்கு.

பௌத்தர்களின் அதி புனித ஸ்தலமான கண்டி தலதா மாளிகை மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதை அடுத்து புலிகள் இயக்கத்தை அரசாங்கம் தடை செய்தது. அந்தத் தடையை நீக்குவதற்கு பௌத்தர்கள் சம்மதிப்பார்களா? பேரினவாத இயக்கங்கள் சும்மா இருக்குமா?

தவிரவும் புலிகள் இயக்கத்தை உலக நாடுகள் அனைத்தும் பயங்கரவாத இயக்கம் என்று ஏற்றுக்கொண்டு அதைத் தடை செய்ய வேண்டும். அதன் மூலம் அந்த இயக்கம் பெருந்தொகை பணத்தை வசூலித்து யுத்த தளவாடங்கள் வாங்குவதை நிறுத்தவேண்டும். அந்த இயக்கத்தின் சர்வதேச பிரசாரத்துக்கும் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். இப்படி அரசாங்கம் விரும்புகிறது.

ஜனாதிபதியும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் உலக நாடுகளுக்கு எல்லாம் பறந்து சென்று வேண்டுகோளும் விடுத்து வருகிறார்கள்.

இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன், மலேசியா ஆகிய நாடுகள் புலிகள் இயக்கத்தைத் தமது நாடுகளில் தடைசெய்து விட்டன.

அப்படியிருக்க இலங்கை அரசு புலிகள் இயக்கம் மீது, தான் விதித்த தடையை நீக்குவது என்றால் எப்படி?

மற்ற நாடுகளும் அதையே செய்யத் தொடங்கினால் என்ன ஆகும்?

அரசுக்குக் குழப்பம் ஏற்படாதா என்ன?

## அறிக்கை

குழப்பத்துக்கு இன்னொரு காரணம் அதாவது நோர்வேத் தூதுவர் புலிகள் இயக்கத் தலைவர்களுடன் பேசிவிட்டுக் கொழும்பு வந்து நடந்தவற்றை ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறினார். தமிழ்ச்செல்வன் பேச்சோடு பேச்சாகத் தமது இயக்கத்தின் மீதான தடையை அரசு நீக்க வேண்டும், தம்மைப் போல் அரசும் யுத்த நிறுத்தம் செய்ய வேண்டும் என்றெல்லாம் சொன்னாரே தவிர, பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கு அவற்றை நிபந்தனைகளாக அவர் விதிக்கவில்லை என்றார்.

ஆனால் நோர்வேத் தூதுவர் மல்லாவியிலிருந்து கொழும்புக்குப் புறப்பட்ட கையோடு புலிகள் இயக்கம் நோர்வேத் தூதுவருடனான பேச்சுவார்த்தை பற்றி இன்டர்நெட் மூலம் அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

அந்த அறிக்கையில் இயக்கத் தடை நீக்கம், யுத்தநிறுத்தம் இரண்டும் இல்லாமல் புலிகள் அரசுடன் பேச்சுவார்த்தைக்குப் போக மாட்டார்கள் என்று தமிழ்ச்செல்வன் நோர்வேத் தூதுவரிடம் தெரிவித்து விட்டார் என்று கூறப்பட்டு இருந்தது.

காண்டீபம்

இதை வன்னியில் இருந்து இயங்கும் புலிகளின் குரல் வானொலி தனது ஒலிப்பரப்பில் ஊர்ஜிதம் செய்தது.

இதனால் அரசுக்கு மிகப் பெரிய குழப்பம். நோர்வேத் தூதுவர் ஜனாதிபதியிடம் சொன்னது சரியா, அல்லது புலிகளின் அறிக்கையிலும் அவர்களுடைய வானொலி ஒலிபரப்பிலும் கூறப்பட்டது சரியா?

உண்மையை அறிய நோர்வேத் தூதுவர் ஜொன் வெஸ்ட்போக் மீண்டும் புலிகளிடம் செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டு விட்டது.

புலிகள் இயக்கம் பற்றி அரசு இதுவரை கொண்டிருந்த கருத்துக்கு நேர் மாறாக அமைந்து விட்டது, புலிகளின் அறிக்கையும் வானொலிச் செய்தியும்.

புலிகள் இயக்கம் 24.12.2000 திகதியிலிருந்து ஒரு தலைப்பட்சமாக யுத்த நிறுத்தத்தை அறிவித்தது சமாதானத்தை விரும்பியா? இல்லை.

## சர்வதேச அழுத்தம்

புலிகள் பலவீனமடைந்து விட்டார்கள். அவர்களிடம் தொடர்ந்து போராடுவதற்கு வேண்டிய ஆயுதங்களோ ஆட்களோ இல்லை. படையினர் தற்போது நவீன ஆயுதங்களுடன் மேற் கொண்டுவரும் தாக்குதல்களுக்கு அவர்களால் நின்று பிடிக்க முடியவில்லை. ஓட்டம் பிடிக்கிறார்கள். அதை மறைக்கவே அவர்கள் யுத்த நிறுத்தத்தை அறிவித்தார்கள்.

சர்வதேச சமூகமும் இன்று புலிகளுக்கு எதிராகவே இருக்கிறது. உலக நாடுகள் பலவும் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்யும் நடவடிக்கையில் தீவிரமாக இருக்கின்றன. யுத்தத்தை விடுத்து சமாதானத் தீர்வுக்குப் போகுமாறு அவை புலிகள் இயக்கத்துக்கு அழுத்தம் கொடுக்கத் தொடங்கி விட்டன.

சர்வதேச சமூகத்தை எதிர்த்து, புலிகளால் ஒன்றும் செய்ய முடியாது. அதுவும் அவர்களுடைய யுத்த நிறுத்தத்துக்கு ஒரு காரணம்.

பலநாடுகள் தடை விதித்ததோடு புலிகளின் பண வருவாய் வெகுவாகக் குறைந்து விட்டது.

அப்படியானால் எப்படி யுத்தத்தைத் தொடர்வது? அதனால் தான் ஒவ்வொரு மாதமும் அவர்கள் யுத்த நிறுத்தத்தை நீடித்து வருகிறார்கள்.

அரசும் யுத்த நிறுத்தம் செய்ய வேண்டும் என்று கோருகிறார்கள். முந்திய சந்தர்ப்பங்களில் செய்தது போல் இப்போதும் தம்மை எல்லா வகைகளிலும் பலப்படுத்திக் கொள்வதற்கே அவர்கள் அரசையும் யுத்த நிறுத்தம் செய்யும்படி கேட்கிறார்கள்.


பிரபாகரன்

இப்படித்தான் அரசு நினைத்து வந்தது. ஆனால் இப்போது புதிதாகச் சிந்திக்க வேண்டியிருக்கிறது. செய்ய வேண்டியதை எல்லாம் செய்து அரசாங்கம் சமாதானப் பேச்சுக்கு வராவிட்டால் தாம் எந்த நேரத்திலும் சண்டைக்குத் தயார் என்று திட்டவட்டமாக அறிவித்த மாதிரி அல்லவா புலிகளின் அறிக்கை இருக்கிறது.


புலிகள் தம்மைப் பலப்படுத்திக் கொண்டு விட்டார்களா? புதிதாக ஆயுதங்கள், தளவாடங்கள் ஆகியவற்றைக் கொண்டு வந்து சேர்த்து விட்டார்களா? ஆனையிறவைப் போல யாழ்ப்பாணத்தையும் புலிகள் கைப்பற்றி விடுவார்களா? குழப்பத்தோடு குலைநடுக்கம் வேறு.

இதற்கு அரசிடமிருந்து உத்தியோகபூர்வ தகவல் எதுவும் இந்தக் கட்டுரை அச்சுக்குப் போகும் வரை இல்லை. ஜனாதிபதியும் வெளிநாடு சென்று விட்டார். அமைச்சர் கதிர்காமர் சும்மா இருப்பாரா? அவரும் எந்த நேரத்திலும் பறக்கலாம்.

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரையில் அவர்கள் திடமாகவே இருக்கிறார்கள்.

ஆண்ட பரம்பரையினர் இரண்டாம் தரப் பிரஜைகளாக மற்றவர்களுக்குச் சாமரை வீசிக்கொண்டு இருக்க முடியாது.

தமிழ் ஈழமே இலட்சியம் என்றாலும் வடக்குக் கிழக்கில் தமிழ் மக்கள் தம்மைத் தாமே ஆளும் ஆட்சி அதிகாரம் பெற்று மாநில சுயாட்சியில் சுயநிர்ணய உரிமை உட்பட அனைத்து உரிமைகளையும் உடையவர்களாச் சுதந்திரமாகவும் சுபிட்சமாகவும் வாழவேண்டும். அப்படியான ஒரு நிலைமையாவது வேண்டாமா?


தமிழ்ச்செல்வன்

தருவதை ஏற்றுக் கொண்டு திருப்திப்படு, பணிந்து நட என்றால் அது ஒரு போதும் முடியாத காரியம்.

பேசித் தீர்க்கலாம் என்றால் அதற்கு ஏற்ற சூழலை ஏற்படுத்த அரசு ஒத்துழைப்பு வழங்குவதாக இல்லை. சுமார் நான்கு மாதங்கள் பார்த்தாகி விட்டது.

சித்திரைப் புது வருடத்தையொட்டி 5 நாட்கள் தாக்குதல் நிறுத்தத்தை அறிவித்த அரசு சமாதானத்துக்காக ஏன் யுத்த நிறுத்தத்தை அறிவிக்கக்கூடாது? வன்னிக்கு ஜீஸையும் ஜெலட்டினும் அனுப்ப முன்வரும் அரசு ஏன் எரிபொருளும் சீமெந்தும் அனுப்பக்கூடாது? அரசு சமாதானத்தை விரும்பவில்லை என்பது தானே அர்த்தம்?

போர் என்று வந்தால், அதனால் மக்களுக்குத்தான் பெரும் கஷ்டம். அது தெரியும். அதனால் தான் இவ்வளவு கால அவகாசம். ஆனால் அரசு போரையே விரும்புகிறது என்பதை அதன் நடவடிக்கைகள் காட்டுகின்றன. பேச்சு மட்டும் சமாதானத்தைத் தொட்டு நிற்கிறது. அதைக் கேட்டுச் சர்வதேச சமூகம் ஏமாந்து போகிறது என்கிறார்கள் புலிகள்.

## இரண்டில் ஒன்று

குட்டக் குட்டக் குனிபவனும் மடயன், குனியக் குனியக் குட்டுபவனும் மடயன். பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு. இனி இரண்டில் ஒன்று கண்டே ஆக வேண்டும் என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள் புலிகள்.

அதன் வெளிப்பாடாகத்தான் புலிகளின் இன்டர்நெட் அறிக்கையும் புலிகளின் குரல் வானொலிச் செய்தியும் அமைந்தன என்று கருதப்படுகிறது.

இந்தச் சூழ்நிலையில் நோர்வே எப்படிப் புகுந்து விளையாடப் போகிறதோ, பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# பின்லேடன் பெயர் கேட்டாலே அமெரிக்காவுக்கு குலைநடுக்கம்!

## மனித வெடிகுண்டுகளால் தூதரகங்கள் தகர்ப்பு

சவுதி அரேபியாவின் கோடீஸ்வரர்களில் அவரும் ஒருவர். அவர் உலக வல்லரசாகிய அமெரிக்காவை கடந்த பல ஆண்டுகளாக மிரட்டிக்கொண்டு இருக்கிறார். அவர் தான் பின்லேடன்.

புராதன காலத்து புத்தர் சிலைகளைத் தகர்த்துத் தரை மட்டமாக்கிக் கொண்டிருக்கும் ஆப்கானிஸ்தான் நாட்டில் எங்கேயோ ஒரு மூலையில் ஒளிந்திருக்கிறார் அவர்.

எந்த நேரத்திலும் அவர் களத்தில் இறங்கலாம் என்ற திகிலுடன் காத்திருக்கும் அமெரிக்காவுக்கு அவர் தொடர்ந்து 'தண்ணி' காட்டிக்கொண்டிருக்கிறார்.

1998ஆம் ஆண்டு ஆபிரிக்காவில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தை குண்டு வைத்துத் தகர்த்தார் என்றும்,

பலநாடுகளில் உள்ள அமெரிக்கத் தூதரகங்களைத் தகர்க்க மனித வெடிகுண்டுகளை அனுப்பினார் என்றும் அவர் மீது அமெரிக்கா குற்றம் சாட்டி உள்ளது.

தற்போது செச்னியாவில் ரஷ்யாவுக்கு எதிரான சண்டையின் பின்னணியில் பின்லேடன் இருப்பதாக அமெரிக்கா கருதுகிறது.

பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் அவரது கைவரிசை மீண்டும் தொடரக் கூடும் என்று அமெரிக்கா அஞ்சுகிறது.

வன்முறையை எதிர்க்கும் இஸ்லாமிய மதத்தில் ஒரு வன்முறையாளரா என உலகமே வியந்து நோக்கினாலும் அமெரிக்காவை எப்படி இவரால் மிரட்ட முடிகிறது என எல்லோரும் ஒரு கணம் சிந்திக்கிறார்கள்.

அதற்குக் காரணம் உலகம் முழுவதும் பின்லேடனின் ஆட்கள் பரவி இருப்பதுதான்.

எங்கெங்கு இவரது மதத்துக்கு எதிரான பிரசாரங்கள் நடைபெறுகின்றனவோ அங்கெல்லாம் இவரது ஆட்கள் இயங்கி வருகிறார்கள்.

மேற்கத்திய கலாசாரம், இஸ்லாமிய நாடுகளில் தலை தூக்கினால் தங்களது பாரம்பரியம் தகர்ந்து விடும் என எண்ணுகிறார் பின்லேடன்.

ஒரு அமெரிக்கரை, அவர் சாதாரண பிரஜையாக இருந்தாலும் சரி, இராணுவத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் சரி அவரை ஒழித்துக்கட்டுவதே தனது வேலை என்கிறார் பின்லேடன்.

குவைத் – ஈராக் போரின் போது அரபு நாடுகளில் தனது மூக்கை நுழைத்த அமெரிக்கா, அங்கேயே நிரந்தரமாகத் தங்கிவிட்டது.

அரபு நாடுகளில் இருந்து அமெரிக்காவை முழுவதும் விரட்டி அடிக்கும் வரை உலகெங்கும் அமெரிக்காவுக்கு எதிரான தனது தாக்குதல்களை பின்லேடன் நிறுத்த மாட்டார் என்கிறார்கள் அமெரிக்க உளவு அதிகாரிகள்.

அரபு மண்ணில் இருந்து அமெரிக்காவை விரட்டிய பின்னர் சில முஸ்லிம் நாடுகளில் பழைமை வாதத்தைப் புகுத்தி இஸ்லாமிய கலாசாரத்தை நிலைநிறுத்த அவர் திட்டமிட்டு வருகிறார்.

இன்னும் நூறு ஆண்டுகளில் உலகின் பல நாடுகளில் பச்சைக் கொடிகளை மட்டுமே பறக்க வைக்க அவர் திட்டமிட்டிருப்பதாக அவரது எதிரிகள் சொல்லுகிறார்கள்.'

இதற்காகத் தனி இணையவலை (இன்டர்நெட்) களையும் தொடங்கி விட்டார்.



இஸ்ரேலின் மேற்குக் கரை செச்னியா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் உள்ள தீவிரவாதிகள் பின்லேடனுடன் கைகோத்து இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

உலகம் முழுவதும் தனது தீவிரவாத வலையை வீசி இருக்கும் பின்லேடனுக்கு, முன்பே 1980களில் ஈரான் நாடு வன்முறையைக் கட்டவிழ்த்து விடத் தொடங்கியது.

இந்த வன் முறைகள் 1990இல் ஆப்கானிஸ்தானில் இருந்து எகிப்து, அல்ஜீரியா போன்ற நாடுகளுக்கும் பரவின. அவர்களுக்குள் நடந்த மோதலில் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் பலியாகின.

இதனால் எங்கும் செல்ல முடியாமல் தலைமறைவு வாழ்க்கை வாழ்கிறார் பின்லேடன். ஏனென்றால் தீவிரவாதிகளுக்கு பயிற்சியும், பலமும் தந்தது அவர் தான். 1996இல் அமெரிக்காவுக்கு எதிராக புனிதப் போர் தொடங்கிய அவர், பின்னர் நைரோபி, தாருஸ்ஸலாம் ஆகிய இடங்களில் உள்ள அமெரிக்க தூதரகங்களைத் தகர்த்தார்.

பின்லேடனால் தனியொரு மனிதனாக இருந்து இப்படித் திட்டங்களைச் செயற்படுத்த முடியுமா என்பதை ஆராய்ந்து பார்த்தபோது உலகெங்கும், அவரது கைக்குள் சிலர் இருப்பது தெரியவந்தது.

கனடாவில் உள்ள வன்கூவர் நகரைச் சேர்ந்த அகமது ரசீம் என்பவர் அமெரிக்காவுக்குள் வெடி பொருட்களைக் கொண்டு செல்ல உதவுகிறார்.

மான்ட்ரீல் நகரில் உள்ள அல்ஜீரியர்களில் ஒரு சிலர் பின்லேடனின் கைப்பொம்மைகளாக இருக்கின்றனர் என்றும் புதிய நூற்றாண்டில் தங்கள் பணிகளை முடிக்க உறுதி பூண்டு உள்ளனர் என்றும் கூறுகிறார்கள்.

ஐரோப்பிய நாடுகளில் பின்லாந்து, அயர்லாந்து ஆகிய நாடுகளிலும் ஆபிரிக்காவில் கென்யா, தான்சானியா ஆகிய நாடுகளிலும் மற்றும் அமெரிக்காவில் டெக்ஸாஸ் மாநிலத்திலும், நியூயோர்க் நகரிலும் பின்லேடனின் ஆட்கள் உலாவி வருகிறார்கள்.

ஏற்கனவே கோடீஸ்வரரான பின்லேடனுக்கு பல நாடுகளில் இருந்தும் பொருளாதார உதவி கிடைத்து வருகிறது.

அவரது அல்–கய்தா இயக்கம் இன்னும் சுறுசுறுப்பாக இயங்கி வருகிறது. சர்வதேச ஆயுதக் கிடங்கில் பின்லேடனின் ஆயுத விற்பனை மிகச் செழிப்புடன் நடந்து வருகிறது. தனது ஆட்களுக்கு இன்டர்நெட் மூலம் வரை படங்களையும் தகவல்களையும் அவர் அனுப்பி வருகிறார்.

வெளிநாடுகளில் இராணுவத்தில் பணியாற்றியவர்களைத் தனது இயக்கத்துக்குத் தேர்ந்தெடுத்து முக்கிய பொறுப்புகளை ஒப்படைக்கிறார்.

என்னதான் பின்லேடன் தீவிர முயற்சி எடுத்தாலும் சக முஸ்லிம்களிடம் அவரது செல்வாக்கு உயரவில்லை.

அணு ஆயுதம் தயாரிக்க, தொழில் நுட்பம் மிகுந்த ஆயுதங்களை வாங்க அவர் கோடி கோடியாகப் பணம் கொட்டினாலும் மக்களின் ஆதரவு வேண்டுமே. ஆனால் தனது யுத்தத்துக்கு போதிய ஆதரவு கிட்டும் என்ற நம்பிக்கையில் அணுகுண்டு தயாரிக்கிறார் பின்லேடன் என்கிறார்கள் அமெரிக்க அதிகாரிகள்.

---

# கவிதைப் பூங்கா

## சமாதானம் வேண்டும்

புது வாழ்வு தேடிப் புறப்பட்ட வெண்புறாவே
மறு வாழ்வு வாழ மறந்து விட்டாயோ?
எத்தனை தூதுவர்கள் வந்திங்கு போகிறார்கள்
அத்தனையும் பொய்யான வேஷம் தானோ?

பிணம் பிணமாகும் மனித வளம் நிலைத்திட
உயிர்ப் பிச்சை கேட்கின்றார் தழைத்திடவே
பணமென்னும் பூதத்தால் ஆயுதம் குவியுதம்மா
நம்நாட்டு வளமெல்லாம் வீணாகி அழியுதம்மா

கொலை, கொள்ளை, விபசாரம் மலியுதம்மா
அகதிகள் பிரச்சினை நாட்டையே குழப்புதம்மா
இனப்படுகொலைகள் ஏணிபோல் உயருதம்மா
தர்மத்தைப்போதித்து உயிரை அழிக்கலாமா?

எத்தனை ஆட்சியாளர் வந்து போகிறார்கள்
அவர்கள் விதைத்த விஷம் ஒன்று திரளுதம்மா
தாய்க் குலத்தின் வயிறெல்லாம் பற்றி எரியுதம்மா
கண்ணீர் சிந்திக் கடல் பொங்குதம்மா

மானிட ஜீவனெல்லாம் அநியாய அழிவு
தெய்வநீதி, அரச நீதி, மனுஷ நீதி மறையுதம்மா
அயல் நாட்டுத் தலையீடுகள் அஞ்சி நடக்குதம்மா
எம்மவரைக் காக்க அமைதி வேண்டும்மம்மா!

—தெட்சணாமூர்த்தி திலீவ்

## இராச்சமர்!

[illegible]

## எங்கள் தேசம்

பசுமை நிறைந்த எங்கள் தேசம்—இன்று
பசியால் வாடி நிற்கும் சோகம்
ஊருடன் கூடி வாழ்ந்த மக்கள்—இன்று
வாழ்விடம் இன்றி அலையும் காலம்
வற்றாத வளங்களைக் கொண்ட— மண்
குண்டு வீசாதே என்கிறது.
யாரறிவார் எங்கள் நிலையினை?—ஆனால்
தேசம் ஒரு நாள் எழுந்து நிற்பது உறுதி.

—ஆர். வன்னிமகன்

## மீண்டும் குழந்தையாக

கடந்து சென்ற பாதையினில்
மண்டை ஓடுகளும்
அசுத்தத்துடன் சுவாசித்திடும்
உயிரற்ற உடலின்
வாசனைகளும்
இன்னிசையை விகாரத்து
செய்து விட்ட
செவிப்பறையின் முகவரியெல்லாம்
வேட்டுச் சத்தங்களே...!

திடுக்கிட்டெழும் தூக்கமும்
சந்தோஷமில்லாத கனவுகளும்
கண்ணீரால் கதை எழுதும் விழிகளும்
சுகமான இரவுகளை காயப்படுத்தும்...
ஓ உலகமே!
இத்தீவில் சமாதானம்
உதித்திடுமென்றால்
மீண்டும் குழந்தையாக பிறந்திட
ஆசை கொள்வேன்...

—இ.லெ. சுப்ஹான்

## உண்மை நிலை


கூடுகிறார்கள்
பேசுகிறார்கள்
பிரிகிறார்கள்
இரு சாராரிலும்—இல்லை
நம்பிக்கை
வந்த பாடாயில்லை
சமாதானம்
புலர்வதாய்—இல்லை
விடிவு
சமாதானம் வருமா?
எதிர் பார்ப்பே
எமது— வாழ்க்கை
சொந்த பந்தங்களும்—எமக்கு
உடன்— பாடில்லை
சொந்தவீடும் — சொத்து
சுகமும்—நம்மிடமில்லை
பேசிப் பேசியே
ஒற்றுமை சமாதியாகி
விட்டது என்பது—தான்
உண்மைநிலை

—தெல்தெனிய ஜே.எம்.பாரீஸ்

## எல்லோரும் இந்நாட்டு பிரஜைகள்

எல்லோருக்கும் வேண்டும்
இயல்பான வாழ்க்கை நிலை
எடுக்கப்பட வேண்டும்
இனப் பிரச்சினைக்குத் தீர்வு
எதிர்க்கப்பட வேண்டும்
மனித உரிமை மீறல்கள்
பொசுக்கப்பட வேண்டும்
இனத் துவேஷ கோஷங்கள்
இசைக்கப்பட வேண்டும்
இன ஒற்றுமைக் கீதங்கள்.

—கவிக்குயிலன்




# சுற்றிச் சுழன்று வந்து படம் ஓடும் தியேட்டர்

வீடியோ தொழில்நுட்பம் உலகில் விரிவடைந்து போய் விட்டதனால் படமாளிகைகளில் சினிமாப் படம் பார்க்கும் கூட்டம் குறைந்து வருகிறது. இதனை அடுத்து சினிமாத் திரைகளுக்கு ரசிகர்களைக் கவர்ந்து இழுப்பதற்காக மேல் நாடுகளில் நவீன யுக்திகளைப் பின்பற்றுகிறார்கள். கனடாவில் 'மூவிங் தியேட்டர்' என்னும் பெயரில் சுற்றிச் சுழன்று வந்து படம் ஓடும் தியேட்டர் உருவாக்கியிருக்கிறார்கள். நயாகரா நீர்வீழ்ச்சிக்கு அருகிலுள்ள இந்தத் தியேட்டரில் படம் பார்க்கும் போது திரையும் பார்வையாளர்கள் அரங்கமும் சுழன்று கொண்டே இருக்கும். தியேட்டர் வாசலில் பார்வையாளர்கள் கூடியிருக்கும் காட்சி.

# கோவில் சிற்பங்கள் உருவாகும் கலைநயம்

தமிழ் நாட்டின் தஞ்சாவூர் பகுதியிலுள்ள சுவாமிமலையில் பஞ்சலோக கோவில் சிற்பங்கள் உருவாக்கப்படுகின்றன. இந்தியாவிலுள்ள ஆலயங்களுக்கு இங்கிருந்துதான் பஞ்சலோக சுவாமி சிலைகள் செல்லுகின்றன. அண்மைக் காலமாக மேல் நாட்டவர்களும் சுவாமிமலையில் தேவசேனாபதி ஸ்தபதி உருவாக்கும் கலைநயம் மிக்க சுவாமி சிலைகளைத் தருவித்துக் கொள்வது அதிகரித்திருக்கிறது. இதனால் கோவில்களில் சிற்பங்ளைத் திருடிக் கள்ளமாக வெளிநாடுகளுக்குக் கடத்துவோரின் கொட்டம் அடங்கியிருக்கிறதாம்.



# செழிப்பாக வளரும் கஞ்சாச் செடிகள்



புராதன புத்தர் சிலைகளை அழித்து அட்டூழியம் பண்ணிய ஆப்கானிஸ்தானில் செழிப்பான பூமி வளம் இருக்கவே செய்கிறது. ஆயினும் அந்தச் சோலை வனங்களில் உணவுப் பயிர்களைவிட கஞ்சாச் செடிகளே செழித்து வளருகின்றன. நவீன விவசாய உபகரணங்களைக் கொண்டு அரசாங்க அதிகாரிகளே கஞ்சாப் பயிர்களை வளர்க்கிறார்கள் என்றால் கேட்கவா வேண்டும்.



# தற்காப்புக் கலைக்கு கராத்தே பயிற்சி

பாலியல் வல்லுறவுக்கு குழந்தைகள் இலக்காவது மேல்நாடுகளில் அதிகரித்திருக்கிறது. இளம் சிறார்கள் பாடசாலைக்குப் புத்தகக் கட்டுடன் துப்பாக்கியையும் கொண்டு செல்கிறார்கள். கோபம் வந்தால் சக மாணவர்களையே சுட்டுத்தள்ளி விடுகிறார்கள். இதன் காரணமாக அமெரிக்க பெற்றோர் தமது குழந்தைகளுக்குத் தற்காப்புக் கலையைக் கற்றுக் கொடுக்கிறார்கள்.
அமெரிக்காவில் ஒரு கராத்தே வீரர் தமது 6 வயது மகளுக்கு கராத்தே பயிற்சி அளிக்கும் காட்சி இது.

# மசாலா mix



# ஒளிந்திருக்கும் முகம் எது?

ஏப்ரல் 8 'சுடர் ஒளி' மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகை ஷாலினியினுடையது. சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதியனுப்பிய வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு.

01. ரா. சேகர், கம்பளை.
02. ந. புவனேஸ்வரி, தலவாக்கலை.
03. எஸ். பஞ்சலிங்கம், வட்டகொடை.

சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதியனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள். அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

கடந்த வாரம் (15-04-2001) மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த நடிகர் யார்? சரியான விடையைத் தபால் அட்டையில் எழுதி அனுப்பும் வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர், விவரம் அடுத்த வாரம் இப்பகுதியில் வெளியிடப்படும்.

இந்த வாரம் பிரசுரமாகியிருக்கும் இந்த உருவம் யாருடையது? முத்தான நடிகர் ஒருவரின் மகனாக இருந்து நடிகரானவர். தனக்கென ஒரு ரசிகர் கூட்டத்தைக் கொண்ட காத்திரமான நடிகர்.



இந்த முகத்திற்குரிய நடிகரைக் கண்டு பிடித்து அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதிப் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

'சுடர் ஒளி'
36/2, பிரெட்றிக்கா வீதி,
கொழும்பு -06.

# கட்டுக்கடங்காத கள்ளக் குடியேற்றம்



சர்க்கஸ் விளையாட்டில் இவர் ஈடுபட்டிருக்கிறாரா? இல்லை. வேலிபாய முயன்றவர்களை வளைத்துப் பிடித்துவிட்ட குதூகலத்தில் இருக்கிறார் இந்தப் பிரான்ஸ் நாட்டு சுங்க அதிகாரி. சரக்குக் கப்பல் ஒன்றில் பிளாஸ்டிக் வளையங்களுக்குள் பதுங்கி பிரான்ஸுக்குள் கள்ளமாகப் புகுந்து விட முயன்றார்கள் 4 ருமேனியா நாட்டினர். அவர்கள் கையும் மெய்யுமாகப் பிடிபட்ட காட்சி இது.

யாழ்ப்பாணம்
ஆவணத்துறைப் படிப்பகம்

# கிழக்கில் மலையகக் கலை பண்பாட்டு நிகழ்வுகள்


அருச்சுனன் தபசிலிருந்து ஒரு காட்சி

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறை தனது வருடாந்த உலக நாடக விழாவைப் பயன்படுத்தி மலையகத்துடனான ஓர் இறுக்கமான கலை, பண்பாட்டுத் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டது.

**கிழக்குப் பல்கலைக்கழக நாடக தின விழா பற்றிய செய்தி 22ஆம் பக்கத்தில்**

இந்த நட்புறவுக் கரத்தை மலையகத்தின் புதிய பண்பாட்டு இயக்கம் பற்றிக்கொண்டது. மலையக மக்களின் பண்பாட்டின் மணிமகுடங்களாக விளங்கும் ''காமன் கூத்து'', ''அருச்சுனன் தபசு'', ''பொன்னர் சங்கர்'', 'நாட்டறிக்கை நடனம்' சமகால பிரச்சினைகளை சித்திரிக்கும் "இன்றைய நிழல்" நாடகம் என்பனவற்றை பொகவந்தலாவ புதிய பண்பாட்டு அளிக்கை குழுவினூடாக இரண்டு தினங்கள் கிழக்குப் பல்கலைக்கழக வளாகத்தில் மேடையேற்றியது. பெரும் எண்ணிக்கையான பார்வையாளர்கள் நிகழ்ச்சிகளுக்குச் சமுகமளித்து அவற்றை வெகுவாக ரசித்தனர்.

காமன் கூத்தை, பம்பையன் தங்கமயில், பம்பையன் கணேசன் சகோதரர்கள் நெறியாள்கை செய்தனர், அருச்சுனன் தபசு, ஆ.ஹரி சந்திரனாலும், பொன்னர் சங்கர், அ.ஜெகன் தாசனாலும், நாட்டறிக்கை நடனம், டல்சி பிரிடாவெனும் நாடகம் ஆகியவை — கிருஸ்டி நேசகுமாரனாலும் நெறியாள்கை செய்யப் பட்டிருந்தன.

மேலும் கிழக்குப் பல்கலைக்கழக மொழித் துறைப் பேராசிரியர் சித்ரலேகா மௌனகுரு தலைமையில் பயன்மிக்கதொரு கலை இலக்கிய உரையாடலையும், புதிய பண்பாட்டுக் குழு ஒழுங்கு செய்திருந்தது.

சூரியா பெண்கள் குழுவுடன் புதிய பண்பாட்டு அளிக்கைக்குழு ஒரு பயன்மிக்க உரையாடலை நடத்தியது. இவ்வாறு அனைத்து மட்டத்து சமூகத்தினரதும் கவனத்தை ஈர்த்துக் கொண்ட புதிய பண்பாட்டு இயக்கத்தின் கலை பண்பாட்டுப் பயணம் ஒரு வரலாற்று முக்கியத்துவமிக்க நட்புறவுப் பயணம் எனக் குறிப்பிடுவதில் தவறேதும் இல்லை.

— நேரன்


காமன் கூத்திலிருந்து ஒரு காட்சி

# 'அபத்த நாடகம்'

ஜோர்ஜ் சந்திரசேகரன் ஒரு வானொலி அறிவிப்பாளர் மட்டும் அல்லர். கலை இலக்கியத்துறையின் சிறுகதை, நாடகம் ஆகிய துறைகளிலும் முத்திரை பதித்தவர் என்று இந்து கலாசார அமைச்சின் ஊடகத் தொடர்பாளர் திருஞானசுந்தரம் தெரிவித்தார்.

ஜோர்ஜ் சந்திரசேகரன் எழுதிய 'அபத்த நாடகம்' என்ற நூலின் வெளியீட்டு விழா கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் சமீபத்தில் வெளியிடப்பட்டது. வைபவத்திற்குத் தலைமை வகித்த திருஞானசுந்தரம் தமது தலைமை உரையின் போதே இதனைத் தெரிவித்தார்.

இலங்கை வானொலியைச் சேர்ந்த இளையதம்பி தயானந்தா, விமர்சகர் கே. எஸ். சிவகுமாரன், சி. சிவகுமார், சக்தி வானொலியைச் சேர்ந்த எஸ். எழில்வேந்தன், எழுத்தாளர் காவலூர் ராசதுரை ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இலங்கை வானொலியில் பல்வேறு மட்டங்களிலும் 28 வருடங்கள் பணியாற்றியவர் ஜோர்ஜ் சந்திரசேகரன்.

இவருடைய சிறுகதைத் தொகுதியொன்று ஜோர்ஜ் சந்திரசேகரன் சிறுகதைகள் என்ற பெயரில் 1994 ஆம் ஆண்டில் வெளியானது.

ஜோர்ஜ் சந்திரசேகரம் நாவல்களும் எழுதியுள்ளார்.

1950—60 களில் ஈழத்து கலாசார வாழ்வில் தனக்குக் கிடைத்த அனுபவங்களைத் தொகுத்து, ஒரு சருகுக்குள்ளே கசியும் ஈரங்கள்' எனும் நூலை எழுதினார்.

'ஒரு சருகுக்குள்ளே கசியும் ஈரங்கள்' பல சுவையான அனுபவங்களை வெளிப்படுத்திய நூலாகும். இலங்கை வானொலியில் நாடகப் பொறுப்பாளராக அவர் பணியாற்றிய காலம் வானொலி நாடக உலகின் பொன்னான காலம் என்றே கூறவேண்டும்.

தமிழ்ச் சங்க மண்டபம் வெறுமையாகவே காட்சியளித்தது. இலங்கை வானொலியில் அவருடன் பணியாற்றிய சக கலைஞர்களும் பயிற்சி பெற்றவர்களும் வந்திருந்தாலே மண்டபம் நிறைந்துவிடும்.

நல்ல கலைஞர்களை, எழுத்தாளர்களை மனம் திறந்து பாராட்டும் பண்பு நம்மிடையே குறைந்து வருவது வருந்துதற்குரியதாகும். எனினும் சில சிரேஷ்ட எழுத்தாளர்களும், அவரிடம் பயிற்சி பெற்ற இளங்கலைஞர்களும் வந்திருந்து புத்தகங்களை வாங்கிச் சென்றமை மனநிறைவு தருவதாகும்.

— முதல்வன்

# உலக சாதனையாளர் பிரபாவுக்கும் பாராட்டு

**கலையமுதம்**

கே. விஜயன்

புலம்பெயர்ந்து அவுஸ்திரேலியாவில் வாழும் பாலசிங்கம் — பிரபாகரன் உலக சாதனை ஒன்றைப் புரிந்து கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்துப் பொதுவாக உலகத்தமிழ் மக்கள் அனைவருக்கும் குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழருக்கும் பெருமை தேடித்தந்திருக்கிறார். இவர் 85 மணித்தியாலங்கள் வானொலியிலே தமிழில் அறிவிப்புச் செய்தே இந்தச் சாதனையைப் புரிந்துள்ளார். கண்விழித்தும் உணவை விடுத்தும் இந்த அற்புத சாதனையை இவர் செய்திருக்கிறார்.



கின்னஸ் சாதனை புரிந்த பாலசிங்கம் பிரபாகரனுக்கு சக்தி வலை சார்பாக உங்கள் பாக்கியராஜ் பாராட்டுப்பத்திரம் வழங்குகிறார்

இந்த சாதனையாளரைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு சமீபத்தில் சுகததாஸ ஸ்போட்ஸ் ஹோட்டலில் சக்தி எப்.எம் பணிப்பாளர் எஸ்.எழில்வேந்தன் தலைமையில் நடைபெற்றது.

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த எஸ். விஸ்வநாதன் தனது உரையில் ஒலிபரப்பாளர்கள் பாராட்டப்பட வேண்டும். அவர்களுக்கு காசோ பொருளோ முக்கியமில்லை. நேயர்களது பாராட்டே அதாவது இரண்டு கைதட்டல்களே போதும் என்றார்.

சக்தி எப்.எம் பணிப்பாளர் எஸ்.எழில்வேந்தன் தனது பாராட்டுரையில்; பிரபாவுடன் தாம் பழகிய அனுபவங்களையும் தாம் சில காலம் அவுஸ்ரேலிய இன்பத் தமிழ் ஒலியுடன் இருந்ததையும் பிரபா சக்தியுடன் இணைந்து பணியாற்றியதையும் குறிப்பிட்டார்.

சூரியன் எப்.எம். பணிப்பாளர் நடராஜசிவம் தனதுரையில்; வேதனைகளையும், சோதனைகளையும் அவர் சாதனையாக்கியுள்ளார். சுமார் 2 மணி நேரம் நிகழ்ச்சி படைப்பதே எமக்குச் சிரமமாக இருக்கிறது. பிரபா 85 மணித்தியாலமாக, எப்படி இதைச் செய்தார் என்பது நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை என்றார்.

திரைகடலோடியும் திரவியம் தேடு என்றுபாரதியார் கூறியதுக்கிணங்க இன்று தமிழர்கள் நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளார்கள். அப்படித் திரவியம் தேடச் சென்றவர்கள் திக்கெட்டும் புகழ் பரப்புபவர்களாக விளங்குகிறார்கள். திக்கெட்டும் இலங்கைத் தமிழர்களுக்கு புகழைத் தேடித் தந்த பிரபாவை வாழ்த்துகிறேன் என ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் மேல் மாகாண சபை உறுப்பினருமான மனோகணேசன் தனது பாராட்டுரையில் தெரிவித்தார்.

அறிவிப்புத் துறையில் அண்மையில் பொன் விழாக் கண்ட இராஜேஸ்வரி சண்முகம் தனதுரையில், இவர் 50 ஆண்டுகளுக்குள் இன்னும் பல சாதனைகளை நிகழ்த்த வேண்டும் என்றார்.

ஏற்புரை வழங்கிய பாலசிங்கம் பிரபாகரன் தன்னை வளர்த்தெடுத்த வானொலியையும் சக நண்பர்களையும், நேயர்களையும் நினைவுகூர்ந்து இந்த வெற்றிக்கு அவர்களே காரணம் எனக்குறிப்பிட்டார்.

அவுஸ்திரேலிய நேயர்களே தனக்கு உறுதுணையாக இருந்ததாகவும், ஏற்கனவே பல உலகசாதனைகள் புரிந்த சுரேஸ் ஜோக்கிமுடன் இணைந்து இந்தச் சாதனையை ஏற்படுத்த முடிந்தமைக்காக அவருக்கும் நன்றி தெரிவித்தார்.

**மட்டக்களப்பு மண்ணில் தடம் பதித்த முத்தமிழ் விழாக்கள் பற்றிய ஒரு பார்வை படங்களுடன் அடுத்தவாரம்.**

சக்தி எப்.எம் வானொலி நேயர்கள் சக்தி வலை என்ற அமைப்பு சார்பில் பிரபாவுக்கு பொன்னாடை போர்த்து, மாலை அணிவித்து பாராட்டுப் பத்திரம் ஒன்றையும் வழங்கினர். பல கலைஞர்களும் பொன்னாடை போர்த்து பிரபாவை கௌரவப்படுத்தினர்.

திரு. பாலசிங்கம். பிரபாகரன் அவுஸ்திரேலிய இன்பத்தமிழ் ஒலி வானொலி நிலையத்தை ஆரம்பித்து 24 மணி நேரமும் தமிழ் நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார்.

இலங்கையின் சக்தி எப்.எம் வானொலியுடன் இணைந்து "சிட்னி சின்னப்புவுடன் சில நிமிடங்கள்" எனும் நிகழ்ச்சியைத் தொடர்ந்துச் செய்து வருகிறார்.

—சீ. கே. மயூரன்

# 'காவிய நாயகன்'

## — தவக்கால நாடகம்

திருமறைக் கலாமன்றத்தின் ''காவிய நாயகன்'' தவக்கால நாடகம் ஏப்ரல் 5,6,7,8ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் மேடையேற்றப் பட்டது. யாழ். திருமறை திறந்த வெளி அரங்கில் நடைபெற்ற இந்நாடகத்தில் 250க்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்குபற்றினர்.

யேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பை சித்திரிக்கும் காவியநாயகன் ஆற்றுகை அருட்தந்தை நீ. மரியசேவியர் அடிகளாரினால் எழுதி நெறியாள்கை செய்யப்பட்டது.

இறைவா நீ இருக்கின்றாயா? மனிதா நீ இருக்கின்றாயா? மனிதமே நீ எங்கே? என்று குரல் ஒலிக்க நாடகம் ஆரம்பமாகின்றது.

இன்றைய உலகில் அதிகம் பேசப்படும் நடப்பியல் பிரச்சினைகளாகிய பெண்ணிய விடுதலை, சிறுவர் உரிமைகள், மனித விடுதலை என்பன எல்லாம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இறைமகன் யேசுவால் எந்த வகையில் பேசப்பட்டது, பேணப்பட்டது, பரிகாரம் காணப்பட்டது என்பதை, வேதாகம வரலாற்றுச் சாட்சிகளினூடாக மிகத் தத்ரூபமாக எடுத்துக்காட்டியுள்ளார் நெறியாளர் மரியசேவியர் அடிகளார்.

கலையினூடாக எழுந்த ஒரு கடவுள் பணியாக இப்பெரும் கலைப்படைப்பு அமைந்தது ஒருபுறமிருக்க, இந்த மண்ணின் இன்றைய சூழலில் சமூகத்தின் சமகாலப் பிரச்சினைகளுக்கு பரிகாரம் காணும் ஒரு விடுதலை அரங்கு என்றும் கூறலாம்.

அரங்கச் சூழலே ஒரு ஜெருசலேமாக மாற்றப்பட்டிருந்தது. மைதான வாயிலில் நின்றுகொண்டிருந்த ரோமானியப் போர் வீரர்கள் பார்வையாளர்கள் மனதில் யூத நாடு ஒன்றுக்குள் நுழைவது போன்ற ஒரு படிமத்தை உருவாக்கிவிட்டமை மிக நுட்பமான நவீன அரங்கியல் உத்தியேதான்.

பிரமாண்டமான மேடையமைப்பும்


இயேசு முதன் முறையாக தரையில் விழுகிறார்.

தொடராக வந்துகொண்டிருந்த காட்சிகளும் காட்சிக்கு ஏற்றவாறு ஒன்றித்து நின்ற ஒளி, ஒலி அமைப்புகளும் இந்த நாடகத்தில் குறிப்பிடத்தக்க விஷேட அம்சங்களில் சிலவாகும்.

ஒரு கட்டத்தில் ஜெருசலேமே நகர்ந்து வந்துவிட்டதோ என்று எண்ணுமளவுக்கு பிரமையூட்டும் வகையில் மேடை நிறைய நடிகர்கள் காணப்பட்டார்கள். யாழ். நகர் இதுவரை காணாத அரங்கச் செயற்பாடாக இந்நிகழ்வேதான் இருக்க முடியும் என்பதை இவை எடுத்துக்காட்டின. ''பெருங்காட்சிப் பண்பு'' என்ற அரங்கியல் இலக்கணத்தை இம்மேடை சற்றே புரியவைத்தது.

— செபாலி









## இந்தியாவில் இத்தாலி Vs ஆஸ்திரியா

# சோனியாவுக்குப் போட்டி சுபாஷின் மகள் அனிதா!


சோனியா காந்தி

இந்திய சுதந்திரப்போராட்ட வரலாற்றில் மறக்க முடியாத பெயர்களில் ஒன்று சுபாஷ் சந்திரபோஸ். நேதாஜி என அன்புடன் அழைக்கப்பட்ட அவர் அன்று செயலிலும் சொல்லிலும் ஆங்கிலேய ஆட்சியை எதிர்த்து வந்தார்.

சுதந்திரம் கிடைப்பதற்கு முன் இந்திய காங்கிரஸ் கட்சியில் அவர் ஒரு முக்கிய பிரமுகராக விளங்கினார். 1927ஆம் ஆண்டு அகில இந்திய காங்கிரஸ் மாநாடு சென்னையில் நடைபெற்றது. அதில் காந்தி, மோதிலால் நேரு, நேருஜி ஆகியோரும் கலந்துகொண்டனர். இம்மாநாட்டில் இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்து எனப்படும் குடியேற்ற நாட்டு உரிமைபோதுமானது என்று முக்கிய தலைவர்கள் உட்படப் பெரும்பாலானவர்கள் கருத்துக்கூறினர். ஆனால் நேதாஜியோ அதனை முற்றாக எதிர்த்தார்.

அன்று ஐ.சி.எஸ் (இந்தியன் சிவில் சேவை) பரீட்சை ஒரு முக்கிய பரீட்சையாக இருந்தது. அதில் நான்காவது இடத்தில் நேதாஜி தேறினார். அரச பதவியும் கிடைத்தது. பதவி ஏற்பவர்கள் ''நான் இங்கிலாந்து தேசத்துக்கு விசுவாசமாக இருப்பேன்'' என்ற உறுதி மொழி எடுக்கவேண்டும்.

நேதாஜியோ உறுதிமொழி எடுக்க மறுத்து ஐ.சி.எஸ் பதவியை உதறித் தள்ளினார். ''என் தாய்நாட்டுக்கு வேண்டுமானால் விசுவாசமாக இருப்பேன். எங்களை அடிமைப்படுத்தும் ஆங்கிலேய நாட்டிடம் எப்படி விசுவாசமாக இருப்பது'' என்று அவர் அப்பொழுது கூறினார்.

சென்னை காங்கிரஸ் மாநாட்டுக்குப் பின் வார்தாவில் காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு விட்டுத் திரும்பும் வழியில் நேதாஜி ஆங்கிலேய அரசினால் கைதுசெய்யப்பட்டார்.

பல சிறைகளில் அடைக்கப்பட்ட அவர் இறுதியாக 1932ஆம் ஆண்டு ஜுலை 13ஆம் திகதி சென்னைச் சிறைக்குக் கொண்டுவரப்பட்டார்.

கல்கத்தா நகரசபை கமிஷனராகவும் நேதாஜி இருந்துள்ளார். இந்தியாவுக்கு வேல்ஸ் இளவரசர் வந்தபொழுது வரவேற்புக் கொடுக்கக்கூடாது என்று எதிர்த்துப்போராடி இருக்கிறார். இதனால் ஆறு மாதங்கள் சிறைத் தண்டனை கிடைத்தது.

சிறைத்தண்டனையாக வீட்டுக்காவலில் இருந்த பொழுதுதான் நேதாஜி இந்தியாவிலிருந்து தப்பிச் சென்றார். ஆப்கானிஸ்தான் வழியாக அவர் ஜெர்மனியைச் சென்றடைந்தார். அங்குதான் ஐ.என்.வி எனப்படும் இந்திய தேசிய தொண்டர்கள் என்ற அமைப்பில் அவர் இணைந்தார்.

இந்திய தேசிய இராணுவத்தை ராஷ்பிஹாரி போஸ் என்பவர் ஜப்பானில் தொடங்கி வைத்தார். நேதாஜி அந்த இராணுவத்தை வழி நடத்தினார்.

பின்னர் சிங்கப்பூருக்கு வந்து இந்திய தேசிய இராணுவத்தின் பொறுப்பை ஏற்றார். அதையடுத்து பர்மாவுக்கு தனது தலைமையகத்தை மாற்றிக்கொண்டார்.

அங்கிருந்து தனது படையை இந்தியா நோக்கி நகர்த்தினார். இந்திய எல்லையில் உள்ள மொய்ராங் என்ற இடம்வரை அப்படை முன்னேறியது.

பின்னர் நேதாஜி மங்கோலியாவில் இருந்து ஜப்பானிய விமானத்தில் பயணம் செய்கையில் விமானம் விபத்துக்குள்ளாகிக் கொல்லப் பட்டார்.

நேதாஜியின் மரணம் குறித்து பல்வேறு சந்தேகங்கள் எழுப்பப்பட்டு வந்தன.

ஆனால் இச்சந்தேகங் கள் எல்லாவற்றுக்கும் அவரது மகள் அனிதா போஸ் அண்மையில் முற்றுப்புள்ளி வைத்திருக்கிறார்.

"எனது தந்தை இன்று உயிரோடு இருந்தால் அவரது வயது 104 ஆக இருக்கும். ஆகவே அவர் விமான விபத் தில் கொல்லப்படவில்லை என்று வைத்துக்கொண்டாலும் அவர் உயிரோடு இருக்க வாய்ப் பில்லை என்று அனிதா போஸ் கூறியிருக்கிறார்.


சுபாஷ் சந்திரபோஸ்

நேதாஜியின் மகள் அனிதாவுக்கு இப்பொழுது வயது 54. கணவர் மற்றும் மூன்று பிள்ளைகளோடு ஜெர்மனியில் வசிக்கிறார். மார்ச் மாத ஆரம்பத்தில் சென்னை வந்திருந்தார். நான்கு நாட்கள் சென்னையில் தங்கியிருந்தார்.

''1941ஆம் ஆண்டு என் பெற்றோர்களின் திருமணம் நடந்தது. அம்மாவின் பெயர் எமிலி ஷெங்கால். ஆஸ்திரியாவில் பிறந்தவர். என்னுடைய தந்தையின் செயலாளராகப் பணியாற்றியவர். 43ஆம் ஆண்டு நான் நான்கு மாதக் குழந்தை யாக இருந்தபோது அப்பா ஜெர்மனியை விட்டுப் புறப்பட்டுச் சென்று விட்டார்.


அனிதா போஸ்

''அம்மா ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் மொழிகளைத் தெரிந்து வைத்திருந்தார். அதனால் ஜெர்மனியில் தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தில் தொழில் செய்து என்னை வளர்த்தார்'' என்று தனது குழந்தைப் பருவத்தை அனிதா நினைவு கூருகிறார்.

'அனிதா' என்ற இந்தியப் பெயர் இவருக்கு எவ்வாறு சூட்டப்பட்டது? 19ஆம் நூற்றாண்டில் இத்தாலியை ஒருமைப்படுத்திய மிக முக்கிய தலைவரான கரிபால்டியின் மனைவியின் பெயர் அனிதா. இடுப்பில் கைக்குழந்தை, கையில் துப்பாக்கி ஏந்தி அனிதா குதிரை மீது வீற்றிருப்பது போல சிலை கூட வைத்திருக்கிறார்கள்.

அனிதா என்ற பெயர் இந்தியப் பெயர் போலவும் இருக்கவே தாயாரான எமிலியே அதைத் தெரிவு செய்துள்ளார். நேதாஜியும் சம்மதம் தெரிவித்துள்ளார்.

அனிதா போஸ் இந்தியாவுக்கு வந்த காரணம் என்ன? இந்தியாவிலேயே நிரந்தரமாகத் தங்கிவிடும் எண்ணம் உண்டா? என்ற கேள்விகள் எல்லாம் எழுப்பப்படுகின்றன.

அனிதா போஸ் ஜெர்மனியில் ஒரு பல்கலைக் கழகத்தில் பணி புரிகிறார். அவரது கணவர் ஒரு எம்.பி. எனவே அரசியல் நாட்டம் இருக்கவே செய்யும். இந்திய அரசியலிலும் அவருக்கு நாட்டம் ஏற்பட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை. சென்னையில் அவரை வரவேற்றவர்களில் ஒருவர் குமரி அனந்தன்.

அவ்வப்போது இந்தியாவுக்கு வரத் தயங்கமாட்டேன், தவறமாட்டேன் என்றும் அனிதா போஸ் சென்னையில் கூறியுள்ளார்.

சில குடும்பப் பொறுப்புகள் முடிந்த பின்னர் இந்தியாவில் நிரந்தரமாக இருக்கத் தாம் எண்ணியிருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்தியாவில் சும்மாவா இருப்பார்? நேதாஜியின் இரத்தம் அல்லவா? நிச்சயமாக அவர் அரசியலில் சோனியாவுக்குச் சவாலாகவே இருப்பார் என்று இப்போதே பேசிக்கொள்ளப்படுகிறது.

ராஜீவ் காந்தியின் அரசியல் சோனியாவுக்கு கை கொடுப்பது போல நேதாஜியின் அரசியல் அனிதாவுக்கு கைகொடுக்கலாம் அல்லவா?

— அவதானி


## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

சக்தி TV

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 11.00-11.30 | | | | | | குட்டிச் சுட்டி | காலைக்கதிர் (நேரடிஒளிபரப்பு) |
| 11.30-12.00 | | | | | | | |
| 12.00-12.30 | | | | | | பொலிஸ் டயரி | குட்டிச் சுட்டி |
| 12.30-13.00 | | | | | | ஸ்டார் சமையல் | இசைக்கோலம் |
| 13.00-13.30 | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சக்தி வீக்கென்ட் மெட்னி | சக்தி வீக்கென்ட் மெட்னி |
| 13.30-14.00 | குலவிளக்கு | குலவிளக்கு | குலவிளக்கு | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | | |
| 14.00-14.30 | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | | |
| 14.30-15.00 | | | | | | | |
| 15.30-16.00 | | | | | | நலந்தானா | வசந்த நிலா |
| 16.00-16.30 | | | | | | டொப் 10 மூவிஸ் | கோபி |
| 16.30-17.00 | சுப்பர் 10 | கலைச்சோலை | நம்மநேரம் | மீண்டும் மீண்டும் சிரிப்பு | திரை விமர்சனம் | அரட்டை அரங்கம் | ஸ்டார் ஷோ |
| 17.00-17.30 | தமிழ் கார்ட்டூன் | தில்லானா தில்லானா | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | தமிழ் கார்ட்டூன் | பூஞ்சோலை | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 17.30-18.00 | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | இளமை புதுமை | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 18.00-18.30 | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | பெப்ஸி உங்கள் சாய்ஸ் | காற்றாய் வருவேன் | கேள்வியின் நாயகனே | இப்படிக்கு நீங்கள் |
| 18.30-19.00 | அம்மா | அம்மா | அம்மா | அம்மா | அம்மா | புதுப்பாடல் | ஆனந்தபவன் |
| 19.00-19.30 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | சாவித்ரி | சப்தஸ்வரம் |
| 19.30-20.00 | கதைநேரம் | தித்திக்கும் ஓசை | சத்யா | சீமான்களே சீமாட்டிகளே | பணம், பெண் பாசம் | இளையகானம் | பஞ்சவர்ணம் |
| 20.00-20.30 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் |
| 20.30-21.00 | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | நிம்மதி உங்கள்.... | ஜன்னல் |

# பெயரளவில் வவுனியாவுக்கு ரயில் பயணிகளுக்கு அது பெரும் துயர்!

## குறைபாடுகள் ஒன்றா, இரண்டா? சுட்டிக்காட்டிக் குமுறுகிறார்கள்

யாழ் – கொழும்பு ரயில் சேவை, கொடிகட்டிப் பறந்த காலம் ஒன்று இருந்தது.

அன்று இரவு மெயில், பகலில் உத்தரதேவி, யாழ்தேவி மற்றும் இன்ரசிற்றி என்று பலவித சேவைகளை நடத்தி ரயில்வேத் திணைக்களம் பணத்தை வாரிக் குவித்தது.

யாழ் – கொழும்பு ரயில் சேவை மூலம் கிடைத்த பணத்தைக் கொண்டு, இலங்கையில் ஏனைய பகுதிகளில் நட்டத்தில் ஓடிய பல ரயில் சேவைகளையும் ஈடுகட்டியது ரயில்வேத் திணைக்களம்.

ஆனால் இன்று அதே ரயில் சேவை வவுனியா – கொழும்பு ரயில் சேவை என்று குறுக்கப்பட்டு நொந்து நொடித்து, நூலாய் தேய்ந்து வருகிறது.

ஏதோ நடக்கிறது என்ற நிலையில் இந்த சேவை இழுத்துப் பறித்து இயங்கி வருகின்றது.

அப்படி இருந்தும் இன்னும் நாட்டின் ரயில் சேவைகளில் வருமானத்தில் முதல் இடம் வகிப்பது இந்த வவுனியா – கொழும்பு ரயில் சேவை தான்.

தற்போது நாளாந்தம் 45 முதல் 50 ஆயிரம் ரூபா வரையான வருமானத்தை வவுனியா ரயில் நிலையம் பெற்று வருகின்றது.

இவ்வளவு வருமானத்துடன் இயங்கி வரும் வவுனியா – கொழும்பு ரயில் சேவையில் ஏகப்பட்ட குறைபாடுகள். ஏராளமான முறைப்பாடுகள்.

இது பற்றி பயணிகள் சிலர் எம்மிடம் கொட்டித் தீர்த்த விடயங்கள் எம்மை ஆச்சரியப்பட வைத்தன. இவ்வளவு குறைபாடுகளா என்று எம்மை எண்ண வைத்தது மட்டுமல்லாமல் ரயில் சேவையிலும் இனவாதமா என்று எம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

வவுனியா மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைகிறது இன்ரசிற்றி ரயில்சேவை.

கொழும்பிலே ஏதாவது அலுவல் பார்க்க வேண்டியவர்கள் காலை 5.45க்கு வவுனியாவிலிருந்து புறப்படும் இன்ர சிற்றி ரயிலில் ஏறினால் சுமார் 11 மணியளவில் கொழும்பை அடைந்துவிட முடியும்.

அங்கே அலுவல்களை முடித்துவிட்டு மாலை 3.55 க்கு புறப்படும் இன்ரசிற்றியில் ஏறி இரவு 9.30 அளவில் வவுனியாவை சென்றடைந்து விட முடியும்.

இதனால் இந்த இன்ரசிற்றி சேவை பயணிகள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இந்த ரயிலில் பயணிகள் நிறைந்து காணப்படுகின்றனர்.

ஆனால் இந்த ரயிலில் பயணிகள் நின்று பயணம் செய்ய அனுமதிக்கப்படுவதில்லை. ஆசனத்துக்குத் தக்க ரிக்கெட்டுகளே வழங்கப்பட்டு வருகின்றன. இதனால் அதிகாலையில் எழுந்து அரக்கப்பரக்க இந்த ரயிலைப் பிடிக்க ஓடும் பலர் ரிக்கெட் இல்லாது திருப்பி அனுப்பப்பட்டு வருகின்றனர்.

இது தவிர இரவு மெயில் சேவையில் ஒரு படுக்கை வசதியுள்ள பெட்டியும், தலா இரண்டு 2ஆம் வகுப்பு, 3ஆம் வகுப்பு உறங்கலிருக்கைப் பெட்டிகளும் இணைக்கப்படுகின்றன.

கள்வர் பயம், மதுபோதையில் வரும் பயணிகளின் இம்சைகள் காரணமாக பலரும் இவ்வாறான உறங்கலிருக்கை வசதியுள்ள பெட்டிகளிலேயே பயணம் செய்ய விரும்புகின்றனர். ஆனால் அதற்கான ரிக்கெட்டுக்களை, பெற்றுக் கொள்ள வேண்டுமானால் பயணிகள் அதிகாலை 4 மணிக்கே வந்து ரயில் நிலையத்தில் கியூவில் காத்திருக்க வேண்டிய நிலை.

இதெல்லாம் தவிர வவுனியாவுக்கான ரயில் சேவை தானே எப்படியும், என்ன செய்தாலும் யார் கேட்கப் போகி றார்கள் என்ற ஒரு மனப்பான்மையும் பெரும்பான்மை இன ரயில்வே அதிகாரிகள் மத்தியில் காணப்படுகின்றது.

கொழும்பிலே இருந்து வரும் ரயில்களும் அநுராதபுரம் வரை தான் நேரக் கட்டுப்பாட்டின் படி சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன. அதற்கு அப்பால் தமிழர் பகுதியான வவுனியாவுக்குத் தானே செல்கிறது. எனவே எத்தனை மணிக்குப் போய்ச் சேர்ந்தாலும் பரவாயில்லை என்ற ஒரு மனப்பான்மையே தென்பகுதி ரயில்வே அதிகாரிகள் மத்தியில் காணப்படுகிறது.

வவுனியாவிலிருந்து வரும் ரயில்கள் குறிப்பிட்ட நேரத்துக்கு அநுராதபுரம் வரை வந்து தென்பகுதிக்குத் தாமதிக்காது பயணம் மேற்கொள்ள வேண்டுமென்பதில் தீவிரமாக இருக்கும் அதிகாரிகள் கொழும்பிலிருந்து வவுனியாவுக்குச் செல்லும் ரயில்களைப் பலமணி நேரம் தாமதிக்க வைத்து விடுகின்றனர்.

இது தவிர யாழ்தேவி போன்ற கடுகதி ரயில்களில் மதவாச்சி, வவுனியா போன்ற இடங்களுக்குக் கொண்டு செல்ல வேண்டிய சரக்குப் பெட்டிகளை இணைத்து அனுப்பும் நடவடிக்கையால் பயணநேரம் தாமதிக்க வேண்டி ஏற்படுகிறது. இலங்கையில் வேறெந்தப் பகுதிக்கும் இவ்வாறு பயணிகள் கடுகதி ரயில்களில் சரக்கு ரயில் பெட்டிகளை இணைப்பதில்லை. ஆனால் வவுனியாவுக்கான இந்த சேவையில்தான் இந்தக் கூத்து நடக்கிறது.

இவற்றைவிட ரயிலில் பயணம் செய்யும் போது கள்வர் பயம், மதுபோதையில் வரும் படையினர் மற்றும் பெரும்பான்மை இனத்தவர்கள் பற்றிய பயம் ஆகியவற்றையும் தாம் எதிர்நோக்குவதாக பயணிகள் முறைப்பட்டுக் கொண்டனர்.

வவுனியா ரயில் நிலையம்




வவுனியா ரயில் நிலையத்தில் கன்டீன் வசதியோ அல்லது ஓய்வு அறை வசதியோ இல்லை என்றும் பயணிகள் அடுக்கினார்கள்.

இதுபற்றி வவுனியா ரயில் நிலைய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டோம். அவர்களில் ஒருவர் சொன்னார்.

''இன்ரசிற்றிக்கு ஏற்கனவே ஒதுக்கிய படி 3 மூன்றாம் வகுப்புப்பெட்டிகளையும் 2 இரண்டாம் வகுபபு பெட்டிகளையும் இணைக்கும்படி கேட்டுக் கொண்டே இருக்கிறோம். பெட்டிகள் இல்லையென்று சொல்லப்படுகிறது. இதனால் பயணிகள் முதல் நாளே வந்து மாலை 4 மணிமுதல் 6 மணி வரை இன்ரசிற்றி ரயிலுக்கான ஆசனங்களைப் பதிவு செய்யும் வசதியை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம்.

''இன்ரசிற்றியில் மொத்தம் 64 முதல் வகுப்பு ஆசனங்களும், 96 இரண்டாம் வகுப்பு ஆசனங்களும் உள்ளன. அவற்றில் 32 முதல் வகுப்பு ஆசனங்களும், 26 இரண்டாம் வகுப்பு ஆசனங்களும் அநுராதபுரத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் 32 முதல் வகுப்பு ஆசனங்களும், 70 இரண்டாம் வகுப்பு ஆசனங்களும் மட்டுமே வவுனியாவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. இவை போதா என்பதை ஒப்புக்கொள்கிறோம். மேலதிக பெட்டிகளைக் கேட்டு வருகின்றோம். அதுவரை முன்பதிவு வசதிகளைப் பயன்படுத்தி பயணிகள் அலைச்சலைத் தவிர்த்துக் கொள்ளலாம்''– என்றார்.

அநுராதபுரம் முதல் வவுனியா வரையான ரயில் பயணங்களில் நிலவும் தாமதம், சரக்குப் பெட்டி இணைப்பு போன்றன பற்றிக் கேட்ட போது, ''இதுபற்றி நாமும் அவதானித்து முறையீடு செய்திருக்கிறோம். காலையில் 5.45 மணிக்கு கொழும்பிலிருந்து புறப்பட்டு 11.20க்கு வவுனியாவை வந்து சேர 5 மணி 35 நிமிடம் மட்டுமே யாழ் தேவி ரயிலுக்கு ஒதுக்கப்பட்ட பயண நேரம்.

''அந்த ரயில் சேவை SUPER FAST EXPRESS என்றே குறிப்பிடப்படுகிறது. அந்த ரயிலில் சரக்குப் பெட்டிகளை இணைப்பது தவறான செயல் என்றும் இதனால் யாழ் தேவி ரயிலின் பயண நேரம் அதிகரிக்கின்றது என்றும் மேலிடத்துக்கு அறிவித்திருக்கிறோம். வவுனியா வுக்கு வரும் ரயில்கள் கொழும்பு செல்லும் ரயில்களுக்காக வழி விட நீண்ட நேரம் தாமதிப்பது உண்மை தான். அது அந்தந்தப் பகுதி ரயில்வே நிலைய அதிகாரிகளின் மனநிலையைப் பொறுத்தது. அதற்கு நாம் எதுவும் செய்ய முடியாது'' என்றார்.

''மேலும் வவுனியா ரயில் நிலையத்தில் கன்டீன் ஒன்று தற்போது திறக்கப்பட்டுள்ளது. ரயில் நிலையத்தில் உள்ள ஓய்வு அறைகளை தற்போது பாவிக்க முடியாத நிலை இருந்து வருகிறது. ஏனென்றால் தினமும் இரவில் இரு ரயில் என்ஜின்களும், பெட்டிகளும் வவுனியா ரயில் நிலையத்தில் தரித்து நின்று தான் மறுநாள் கொழும்புக்கும் மாத்தளைக்கும் சேவையாற்றுகின்றன.

''இதனால் அந்த ரயில்களின் சாரதிகள், காட்மார் மற்றும் பாதுகாப்புப் படையினர் ஆகிய அனைவரும் இந்த ஓய்வு அறைகளைப் பயன்படுத்தி வருவ தால் புதிதாக பயணிகளுக்காக ஓய்வு அறைகளைக் கட்டித் தரும்படி கேட்டிருக்கி றோம்'' இப்படி அவர் மேலும் கூறினார்.

போதாததற்கு தங்கள் தரப்பில் இருக்கும் குறைபாடுகளையும் சொல்லித் தீர்த்தார் அந்த அதிகாரி.

''ரயில் நிலைய அதிகாரிகளான எமக்கு போதிய தங்கும் விடுதிகள் கிடையாது. இன்னும் அண்மையில் ரயில் நிலையங்களின் செலவை மீதப்படுத்துவதாகக் கூறி ரயில் நிலையத் தொலைபேசியின் வெளிச் செல்லும் அழைப்புகளுக்கான தொடர்பு களை ரயில்வேத் திணைக்களம் துண்டித்து விட்டது. இது போன்ற பல்வேறு கஷ்டங்களுக்கு முகம் கொடுத்துத்தான் நாமும் இங்கு வேலை செய்கிறோம்'' என்றார்.

இந்தக் குறைபாடுகளை எல்லாம் தீர்க்கக் கூடிய அதிகாரம் அநுராதபுரத்திலுள்ள வடபகுதிக்கான கட்டுப்பாட்டு நிலையத்திலேயே இருக்கிறது. எனவே அங்குள்ள ஒரு அதிகாரியை ரெலிபோனில் பிடித்தோம்.

''வவுனியா – கொழும்பு ரயில் சேவையை ஓரங்கட்டுவதாக நினைப்பது முற்றிலும் தவறு. ஏற்கனவே வவுனியாவிலிருந்து – ஓமந்தை வரை புதிதாக ரயில் பாதை அமைத்துள்ளோம். இப்போது மதவாச்சியிலிருந்து – மன்னார் வரை ரயில் பாதை அமைக்கத் திட்டமிட்டுள்ளோம்.

இன்னும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள ரயில், பஸ் சேவையை அநுராதபுரம் – வவுனியா வரை நீடிக்க திட்டமிட்டிருக்கிறோம். காலையிலும், மாலையிலும் இந்த ரயில், பஸ் சேவையாற்றும். இதனால் சகல பிரச்சினைகளும் தீரும்'' என்றார்.

புதிதாக அமைக்கப்பட்ட, அமைக்கப்படப் போகும் ரயில் பாதைகளும், ரயில் பஸ் சேவையும் விடுமுறையில் செல்லும் படையினருக்குத்தான் உதவுமே ஒழிய வவுனியாவில் உள்ள தமிழ் மக்களுக்கு பெரிதாக உதவுவதாக இல்லையே என்று நாம் கேட்டுக் கொண்டிருக்கும் போதே மறுமுனையில் ரெலிபோன் டொக் என வைக்கப்பட்டது.

இதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால் வவுனியா ரயில் சேவை படையினருக்கும், பெரும்பான்மை இன மக்களின் வசதிக்காகவுமே நடத்தப்படுகிறது. அதில் ஏதோ சிறிது தமிழ் மக்களுக்கும் பொசிகிறதே தவிர வேறெந்த நன்னோக்கமும் கிடையாது. எனவே இதில் நாம் அதிகம் எதிர்பார்க்க முடியாது என்பது தான் உண்மை.

— வன்னிமைந்தன்

# பனிக்கட்டி உருகுவதால் பேரழிவு ஏற்படும் ஆபத்து

வட துருவத்தில் பனிக்கட்டிகளை உடைத்துக் கொண்டு செல்லும் கப்பல்கள் அதிர்ச்சித் தகவல்களைத் தருகின்றன. பனிக்கட்டிகள் இருந்த இடத்தில் இப்பொழுது தண்ணீர் காணப்படுகின்றது.

பூமியில் பனிக்கட்டிகள் உருகி வரு கின்றன. கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாகப் பனித்தரைகள் உருகி வருகின்றன.

அமெரிக்க விஞ்ஞானிகளின் ஆய்வு ஒன்றின் படி கிரீன்லாந்திலும் பனிப்படலங்கள் உருகத் தொடங்கி இருக்கின்றன. இதன் காரணமாக நைல் நதியில் பாயும் நீரின் அளவு வருடாந்தம் அதிகரித்திருக்கிறது.

கடல் மட்டத்தில் பனிக்கட்டிகள் உருகி வருவதற்கு வெப்பநிலை மாத்திரம் காரணமல்ல. பாரிய மலைப்பிரதேசங்க ளான ரொக்கீஸ் மலைப்பிரதேசம், அண்டீஸ் மலைப்பிரதேசம், ஐரோப்பாவில் அயிட்ஸ் மலைத்தொடர் இந்தியாவில் இமாலய மலைப் பிரதேசம் ஆகியவற் றிலும் பனிக் கட்டிகள் உருகி வருகின்றன.

அயிட்ஸ் மலைத்தொடர் 1850ஆம் ஆண்டு முதல் சுமார் 35 முதல் 45 சதவிகிதம் வரை உருகி வருகிறது என்று அறிக்கைகள் கூறுகின்றன. அதே சமயம் அடுத்த அரை நூற்றாண்டுக்குள் பனிப் படலம் முற்றாக மறைந்து விடும் என்று அவதானிகள் தெரிவித்திருக்கின்றார்கள். அது போலவே இமயமலையிலும் பனிப் படலங்கள் உருகிய நிலையிருக்கின்றன. இந்த உருகும் நிலை ஆச்சரியப்படுவதற் கில்லை. இது பற்றி பல விஞ்ஞானிகள் எச்சரிக்கை செய்துள்ளார்கள்.

மலைப்பிரதேசங்களில் ஒன்று அல்லது இரண்டு பாகை மாற்றத்தில் வெப்ப நிலை உயர்ந்தாலும் கூட மழை வீழ்ச்சிக் குரிய கசிவை ஏற்படுத்தும்.

வரண்ட காலங்களில் நதிகள் பெருக்கெடுத்து ஓடுகின்றன. இதனால் பெரும்பாலான நகரங்களுக்கு நீர் விநியோகம் பாதிக்கப்படும். அதுமட்டுமல்ல நீர்ப்பாசனமும் கிடைக்காமல் போய்விடும்.

ஆசியாவிலுள்ள வங்காளதேசம் போன்ற நாடுகளில் கடல் மட்டம் ஒரு மீற்றர் உயர்ந்தால் அது பெரும் அழிவை ஏற்படுத்திவிடும். அதுமட்டு மல்ல சீனா, இந்தியா, இலங்கை, இந்தோனேசியா, வியட்நாம் ஆகிய நாடுகளில் கடல் மட்டம் உயர்ந்தாலும் பெரும் அழிவை ஏற்படுத்தும்.

—பயாஸ் அஹமத்



''நீங்கள் ஒப்பிரேசனில உயிர் தப்ப ஒரேயொரு வழிதான் இருக்கு!''
''என்ன வழி?''
''பேசாமல் ஆஸ்பத்திரியை விட்டு ஓடிப் போங்கோ!''

* சுதந்திர பொலிஸ் * பொதுச் சேவை * தேர்தல் * நீதிச்சேவை ஆணைக்குழுக்கள்

# ஐ.தே.க. கோரிக்கைக்கு ஆயர் மன்றம் புத்துயிர்

அரசியல் சட்டத்தின் கீழ் நான்கு சுதந்திர ஆணைக் குழுக்கள் அமைக்கப் பட வேண்டும் என்பது ஐக்கிய தேசியக் கட்சியின் நீண்ட காலக் கோரிக்கையாக இருந்து வருகிறது. இக் கோரிக்கை காலத்துக்கு காலம் அரசியல் அரங்கில் எழுப்பப்பட்டுக் கொண்டிருக்கிறது.

கடந்த ஜனாதிபதி தேர்தல், பொதுத் தேர்தல் ஆகியவற்றின் போது ஐ.தே.க. தலைவர் அளித்த உறுதிமொழிகளில் இந்த ஆணைக்குழுக்கள் தனது ஆட்சியில் அமைக்கப்படும் என்பது ஒரு முக்கிய உறுதிமொழியாக இருந்தது. தேர்தல்கள் முடிந்த பின்னரும் நான்கு ஆணைக்குழுக்கள் அமைக்கப்படுவதை ஐ.தே.க. வலியுறுத்தி வருகிறது.

சுதந்திர பொலிஸ் ஆணைக்குழு, பொதுச் சேவை ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு, நீதிச்சேவை ஆணைக் குழு என்பனவே இந்த நான்கு ஆணைக் குழுக்களுமாகும். நாட்டில் தேர்தல்கள் சுதந்திரமாக நீதியாக நடைபெற இக்குழுக்கள் அமைக்கப்படுவது அவசியம் என்பதே ஐ.தே.கவின் நிலைப்பாடாகும்.

கடந்த பொதுத்தேர்தலில் சில மாவட்டங்களில் ஊழல்கள், மோசடிகள் இடம் பெற்றன என்பது பரவலான குற்றச்சாட்டாகும். கண்டி மாவட்டத் தேர்தல் தொடர்பான வழக்கில் ஊழல்கள், மோசடிகள் இடம் பெற்றன என்பதை ஏற்று நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பு வழங்கியிருந்ததும் நினைவிருக்கலாம்.

இந்த ஆணைக்குழுக்கள் அமைக்கப்படுவதை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் மற்றொரு புறத்தில் வற்புறுத்தி வந்தது. அவற்றை அமைப்பதற்கு, தான் அங்கம் வகிக் கும் அரசுக்கு நூறு நாள் காலக்கெடுவையும் முஸ்லிம் காங்கிரஸ் வழங்கியிருந்தது.

இக் காலக்கெடு முடிவடையவிருந்த வேளையில் ஜனாதிபதி சந்திரிக்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமை அழைத்து அது தொடர்பான பேச்சுவார்த்தை நடத்தினார். இறுதியில் இக்குழுக்கள் அமைப்பது குறித்து ஆராய அமைச்சர் ஹக்கீம் தலைமையிலான நாடாளுமன்ற உபகுழு ஒன்று கடந்த பெப்ரவரி மாத ஆரம்பத்தில் அமைக்கப்பட்டது. குழுவும் சில தடவைகள் கூடி ஆராய்ந்துள்ளது.

இந்த நிலையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை ஒத்திவைத்த அரசாங்கம் தேர்தல் முறை குறித்து ஆராய உள்ளூராட்சி அமைச்சர் தலைமையில் ஒரு குழுவை நியமித்தது. அந்தக் குழு தேர்தல் முறை குறித்து ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

ஒரு புறத்தில் ஆணைக்குழுக்கள் அமைப்பது குறித்து ஆராய்வு, மறுபுறத்தில் தேர்தல் முறையை மாற்றியமைப்பது குறித்து பரிசீலனை. ஆணைக்குழுக்களை அமைக்க இணங்கினால் தான் தேர்தல் முறை மாற்றத்துக்கு ஆதரவு வழங்குவோம் என்கிறது ஐ.தே.க.

> **நாட்டில் இடம்பெறும் தேர்தல் வன்முறைகளையும் வாக்கு மோசடிகளையும் பார்க்கும்போது இன்றைய தேசியம் வெறும் சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டு துண்டுகளாகச் சிதறிக் கிடப்பதையே காண முடிகிறது. இத் தேசிய சிதைவைத் தடுத்து நிறுத்த வேண்டியது காலத்தின் தேவை.**

ஆணைக்குழுக்களை அமைப்பதில் அரசாங்கமோ பின்னடிக்கிறது. அரசும் எதிர்க்கட்சியும் இணங்கி வராத நிலையில் இவ்விரு விடயங்களுமே நடைமுறைக்கு வருவது சந்தேகமே.

இவ்வாறு இருந்தாலும் நான்கு ஆணைக் குழுக்களும் அமைக்கப்படு வதற்கு ஆதரவாக மற்றொரு தரப்பில் இருந்து குரல் எழுப்பப் பட்டுள்ளது. இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் மன்றத்தின் குரலே அது. ஆயர்கள் மன்றத் தின் தலைவரான ஆயர் ஒஸ்வால்ட் கோமிஸ், செயலாளரான ஆயர் மல்கம் ரஞ்சித் ஆகியோர் கையெழுத்திட்டு இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

நான்கு ஆணைக்குழுக்களையும் ஏற்படுத்துவதன் மூலம் மட்டுமே நாட்டில் உண்மையான ஜனநாயகத்தையும் நீதியான ஆட்சியையும் அமைதி, ஒற்றுமை ஆகியவற்றையும் ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை இந்த அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

நாட்டில் சட்டம், ஒழுங்கு சீர் குலைந்து வருவதை கத்தோலிக்க ஆயர்களாகிய நாம் மன வருத்தத்துடன் அவதானித்து வருகிறோம். கடந்த இரண்டு தசாதங்களாக வன்முறைக் கலாசாரம் உருவாகி வந்துள்ளது. இன்று அதுவே நாளாந்த வாழ்க்கை முறையாகி விட்டது. சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பவர்களிடமிருந்து அடிப் படை நீதியைக் கூடப் பெற முடியாதுள் ளது என்று பாதிக்கப்பட்ட குடிமக்கள் உணரத் தொடங் கியுள்ளனர்.

தேர்தல் வன்முறைகளையும் வாக்கு மோசடிகளையும் பார்க்கும் போது இன்றைய தேசியம் வெறும் சுயநலத்தை அடிப் படையாகக் கொண்டு துண்டு, துண்டுகளாகச் சிதறிக் கிடப்பதைக் காண முடிகிறது. இந்தத் தேசிய சிதைவைத் தடுத்து நிறுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவை காலத்தின் அவசியமாக உள்ளது. இதன் முதல் கட்டமாக நான்கு சுதந்திர ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட வேண்டியுள்ளது.

நீதி, தெளிவு, நடுநிலை ஆகிய பண்புகளைக் கொண்ட அரச நிர்வாகம் நாட்டில் உருவாக்கப்பட வேண்டும் என்று மக்கள் ஆவல் கொண்டிருப்பதை உணர்ந்து கொள்ளலாம். நான்கு ஆணைக்குழுக்களும் அமைக்கப்பட்டு செயற்படும் நிலையிலேயே தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்பதை சகல அரசியல் வாதிகளிடமும் கோருகிறோம்.

இவ்வாறு ஆயர்களின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

—எட்வேட்

# வடக்கில் இளம் பெண்களை ஏமாற்றப் புதிய தந்திரம்

புத்தாண்டு பிறந்த பின்னர் முதல் தடவையாக கூடுவதால், வழமையிலும் பார்க்க சற்று முன்னதாகவே தேரடியில் அரட்டைக்காக அனைவரும் வந்திருந்தனர்.

''யாழ்ப்பாணத்தில் பெரிய படிப்புப் படிப்பிக்கிற கழகத்தில் படிக்கிற மாணவர்கள் மத்தியில் ஏதோ அமர்க்களமாம். நாட்டுப்பிரச்சினை என்றால் துணிச்சலாக முன்னுக்கு நிற்கிறவைதான். ஆனால் இப்ப பிரதேசவாரியா பிரிஞ்சு நின்று அமர்க்களப்படுகினம்''

ஆரம்பித்தான் டானியல்

''ஏன், தம்பி, என்ன நடந்தது?. கேட்டார் விநாசியர்,

''கலைத்துறை மாணவருக்கான அமைப்பின் தலைவராகிறதுக்கு பிரதேச வாரியா பிரிஞ்சு நின்று அமர்க்களம் நடக்குதாம்.

''லீவில் வீட்டை போற ஒழுங்குகளைப் பார்க்கவும், ஊரிலை இருந்து காசு வரத் தாமதமானால் உதவவும் தான் பிரதேச வாரியாக அங்கு சங்கங்கள் அமைக்கப்பட்டன. ஆனால் உயர் தலைமையும், சில விரிவுரையாளர்களும், தங்கடை சுய நலத்துக்காக, மாணவர்களை பிரதேச வாரியாக பிரிக்கினமாம்.'' கூறி முடித்தான் டானியல்,

''அப்ப தானே, கேடுகெட்டவன் கூட, 'நான் உங்கடை ஊர்க்காரன்' என்று சொல்லி சில மாணவர்களை தனக்கு ஆதரவாக நடக்கச் செய்யலாம்,'' என்றாள் சின்னாச்சி.

''இப்ப நாட்டிலை பெண்பிள்ளைகளை ஏமாற்ற புது வழி கண்டுபிடிச்சிருக்கினம்'' பேச்சை மாற்றினார் விநாசியர்.

''பாவப்பட்ட ஜென்மங்களை வஞ்சிக்கிறதுக்காகவே நிறையப்பேர் வெளிக்கிட்டிருக்கினம்.'' தன்னினத்துக்காகப் பரிந்து பேசினாள் சின்னாச்சி.

''சும்மாயிரு சின்னாச்சி, பொம்புளைப் பிள்ளைகள் பெடியன்களை ஏமாத்திறதில்லையோ?'' வக்காலத்து வாங்கினான் லோகன்.

''உங்கடை சண்டையைப் பிறகு வையுங்கோ,'' என்று அவர்களை அடக்கிய டானியல், ''நீங்கள் விஷயத்தைச் சொல்லுங்கோ'' என்று விநாசியரிடம் கூறினான். அவரும் கூறத் தொடங்கினார்,

''முந்தின காலத்திலை தகப்பன், தாய்க்குத் தெரியாமல், பொம்பிளைப் பிள்ளைகளைக் காதலிச்சு ஏமாத்தினவை. இப்ப ஏமாத்திறதுக்கு தகப்பன் தாயைப் பயன்படுத்தத் தொடங்கி விட்டினம்.''

''இந்த மனுசன், உடனை விஷயத்தைச் சொல்லாமல் இழுத்தடிக்கிறதை விடாது,'' முணுமுணுத்தாள் சின்னாச்சி. அதனை அலட்சியப்படுத்தி விட்டுத்



## தேரடி அரட்டை

தொடர்ந்தார் விநாசியர்,

'' இடம் பெயர்ந்து வந்து வேறிடத்தில் ஒரு குடும்பம் தங்கியிருக்கு. அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த மகள்காரி படிக்கிறதுக்கு ஓர் இடத்துக்குப் போறவளாம். அங்கே படிப்பிக்கிற ஒருத்தர் இந்தப் பிள்ளையோட மரியாதையா நடந்தாராம். கொஞ்ச நாள் கழிச்சு, பிள்ளையின்ரை வீட்டுக்கு வந்த அவர், உங்கடை மகளை நான் விரும்புகிறன், எங்கடை வீட்டை நான் சொல்லுவது தான் முடிவு அதனால பிரச்சினை வராது,'' என்று சொன்னாராம்,

''பிள்ளையின்ரை தாய், தகப்பனும் மாப்பிள்ளை மோட்டார் சைக்கிள் வைத்திருக்கிறார், கழுத்திலை சங்கிலி, கையிலை செயின் என்று வசதியா இருக்கிறார், உழைக்கிறார் என்று பார்த்துப் போட்டு சம்மதிச்சிட்டினமாம்.

''நாங்கள் உங்கடை வீட்டை வந்து கதைக்கிறம்' என்று தாய் தகப்பன் சொல்ல நான் இந்த விஷயத்தை முதலில் வீட்டிலை சொல்லுகிறேன், பிறகு நீங்கள் வந்து கதையுங்கோ என்று அவர் சொன்னாராம்.

''வீட்டுப்படியேறி வந்து கதைச்ச பொடியன் ஏமாத்த மாட்டான் என்ற நினைப்பிலை, அவனோடை மகள் பழகிறதை, வெளியிலை போய் வாரதைப் பற்றி தாய் தகப்பன் பெரிசா கவலைப்படவில்லையாம்.

''ஆனால் தனது 'விருப்பம்' நிறைவேறினதும், பொடியன் அந்தப் பிள்ளையோடை கதைக்கிறதும் இல்லையாம், பார்க்கிறதும் இல்லையாம், ஏன் என்று கேட்டால், நீங்கள் சாதி குறைவென்று இப்ப தான் தெரியும் என்று அவன் சொன்னானாம்.

''விசாரிச்சுப் பார்த்தால், இதுக்கு முந்தியும் இரண்டு மூன்று இடத்திலை இப்படி பொம்பிளை கேட்டுப் போய் தனது அலுவல் முடிஞ்சதும், ஏதாவது குறை சொல்லி தட்டிக் கழிச்ச விஷயங்கள் வெளிவந்ததாம்.'' கூறி முடித்தார் விநாசியர்.

''முன்பின் ஒழுங்காக விசாரிக்காமல் நல்ல மாப்பிள்ளை கிடைச்சிருக்கு ஒரே அமத்தா அமுக்குவம் என்று நினைச்ச பொம்பிளை வீட்டுக்காரரின் பிழையெல்லோ இது.'' என்று குறை கண்டான் லோகன்.

''கழிசடைக்கு வக்காலத்து வாங்காதை தம்பி, வீடு தேடி வந்து படியேறி உங்கடை பிள்ளையை கலியாணம் கட்டுறன் என்று ஒருத்தன் சொன்னால், எந்தத் தாய், தகப்பனும், கொஞ்சம் மனம் இளகிறது தானே வழக்கம். ஏமாத்திறதுக்காகவே இப்பிடி வேஷம் போடுவாங்கள் என்று யாருக்குத் தெரியும்?'' பெண்ணுக்குப் பெண்ணாக பரிவு காட்டினாள் சின்னாச்சி.

லோகனும், சின்னாச்சியும் இங்கேயே இருந்து இந்தப் பிரச்சினைக்கு முடிவு கட்டட்டும் நாங்கள் போவம்,'' சிரித்தபடி கூறிக் கொண்டு எழுந்தான் டானியல். மற்றவர்களும் எழுந்து நடந்தனர்.

கடலைக்கடையை கட்டத் தொடங்கினாள் சின்னாச்சி.



# நெரிக்கும் கரங்கள்

1968 மே 25ஆம் திகதி.

நியூகாசில் பிரதேசத்தின் நொதம்பர் லேண்ட் என்ற இடத்திலுள்ள ஒரு வீட்டில்....

ஒரே கோலாகலமாகவும் கும்மாளமாகவும் இருக்கிறது. சிறு குழந்தைகள் பாடும் பிறந்த நாள் நல்வாழ்த்துப் பாடல் குடியிருப்பு முழுவதும் படர்ந்து செல்கிறது. ஒரே மகிழ்ச்சி வெள்ளம் கரைமீறி ஓடுகிறது. மூன்று வயதான பிரையன் ஹோவின் பிறந்த நாள் கொண்டாட்டம் அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பிரையன் ஹோவை அனைவரும் முத்தமிடுகிறார்கள். ஒரே குழந்தையான அவனை அவனுடைய அன்னை ஆரத் தழுவி முத்தமிடுகிறாள். அந்த பாசமிகு காட்சியை கண் கலங்கி ரசிக்கும் அனைவருமே மகிழ்ச்சியுடன் வாழ்த்துகிறார்கள்.

ஆனால்.....

ஒரு ஜோடி கண்கள் மட்டும் வெறுப்பை 'தீ'யென உமிழ்ந்து கொண்டிருக்கின்றன.

அன்று மாலை அனைவரையுமே சோகத்தில் மூழ்கடித்து விட்ட ஒரு துக்ககரமான சம்பவம் நிகழ்ந்தது.

இருள் கனத்துக் கொண்டு வரும் மாலைப் பொழுது.

மேரி பெல் பதினொரு வயதான ஓர் இளஞ் சிறுமி நல்ல குண்டாக இருப்பாள். களைக்கக் களைக்க தலை விரிகோலமாக ஓடிவந்த அவள் பிரையன் ஹோவின் வீட்டு வாசலிலிருந்து கூக்குரலிட்டாள்.

''ஐயோ ஓடி வாருங்கள் ஓடி வாருங்கள் செரி மரம் அருகில் பிரையன் வீழ்ந்து கிடக்கிறான்.''

'ஓ' ஜீசஸ்! என அலறிக் கொண்டு அவனுடைய அன்னை பாய்ந்து ஓடினாள். குடியிருப்பே திரண்டு அவள் பின்னால் கூட்டமாகப் பறந்தது.

குடியிருப்பை விட்டு,கொஞ்சம் தொலைவில், ஓர் ஒதுக்குப் புறமாக அந்த செரி மரம் இருக்கிறது. சரிவான அதன் கிளை ஒன்றில் பிரைன் ஊஞ்சல் ஆடியிருப்பானோ தெரியவில்லை. அதன் கீழ் அவன் விழுந்து கிடந்தான். அவன் முகம் நீலம் பாரித்துக் கிடக்கிறது. கண்கள் பிதுங்கிய நிலையில் அசைவற்றுக் கிடக்கின்றன. கடைவாயில் லேசாக இரத்தப்படிவு. மூச்சு இழையோடவில்லை. உடலை விட்டு உயிர் பிரிந்து விட்டிருந்தது.

பிறந்த நாளும் இறந்த நாளும் ஒன்றாகிவிட்ட நிலையில் பிரைனின் சடலத்தின் மீது விழுந்து அவனுடைய தாய் நெஞ்சே வெடித்துச் சிதறுமாப் போல் கதறினாள்.

* * *

பொலிஸ் அதிகாரிகள் தலையைச் சொறிந்து கொண்டார்கள். இந்த சின்னஞ் சிறுவனை யார் கொன்றார்கள்? ஏன் கொன்றார்கள்? என்ற கேள்விகளால் அவர்களுக்கு பைத்தியமே பிடித்து விடும்போல் இருந்தது.

கழுத்து நெரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கழுத்தில் கைரேகை எதுவும் இல்லை. ஏதோ ஒன்றைப் பயன்படுத்தி கழுத்து இறுக்கப்பட்டிருக்கிறது. கொலைக்கு யார் காரணம்?

குடியிருப்பை ஓர் அலசு அலசிவிட்ட சி.ஐ.டி அதிகாரிகள் எதுவித தடயமும் கிடைக்காமல் தடுமாறிக் கொண்டிருந்தனர். மூன்றாம் நாள் பகல் ஒரு மணி அளவில் மற்றொரு துர்ப்பாக்கிய சம்பவம் நிகழ்ந்தது.

குடியிருப்புப் பிள்ளைகளுக்கென்று ஒரு சிறிய பாடசாலை அங்கே இருக்கிறது.

பிள்ளைகளெல்லாம் பகல் உணவை முடித்து விட்டு திரும்பி விட்டார்கள்.

ஆனால்.....

மார்ட்டின் ஜோன் என்ற நாலு வயதுப் பையனையும் பதினொரு வயதான மேரிபெல் என்ற சிறுமியையும் காணவில்லை.

> பொலிஸ் அதிகாரிகள் தலையைச் சொறிந்து கொண்டார்கள். இந்த சின்னஞ்சிறுவனை யார் கொன்றார்கள்? ஏன் கொன்றார்கள்? என்ற கேள்விகளால் அவர்களுக்குப் பைத்தியமே பிடித்து விடும்போல் இருந்தது.
> கழுத்து நெரிக்கப்பட்டிருக்கிறது
> ஆனால்
> கழுத்தில் கைரேகை எதுவும் இல்லை
> ஏதோவொன்றைப் பயன்படுத்தி கழுத்து இறுக்கப்பட்டிருக்கிறது.
> கொலைக்கு யார் காரணம்...?

அவர்கள் இருவரும் எங்கே என வகுப்பாசிரியை விசாரணை செய்து கொண்டிருந்தபோது மேரிபெல் முகமெல்லாம் வியர்வை வழிந்தோட உள்ளே நுழைந்தாள். மேரிபெல் ரொம்பவும் கலவரமடைந்தவள் போல் காணப்பட்டாள். அவளுடைய கண்கள் அச்சத்துடன் சுழல்கின்றன.

அவளுடைய தடுமாற்றத்தைக் கண்ட வகுப்பாசிரியை ''என்ன மேரி ஏன் பயப்படுகிறாய்?'' என்று கேட்டார்.

டொய்லெட் பக்கமாகப் போனேன். அங்கே மார்ட்டின் ஜோன் விழுந்து கிடக்கிறான். 'ஜோன் ஜோன்' என்று கூப்பிட்டு அவன் தலை முடியைப் பிடித்து ஆட்டினேன். அவன் எழும்பவில்லை என்று தட்டுத் தடுமாறிக் கொண்டு மேரி சொன்னாள்.

என்னது?' என்று ஆசிரியை அலறினார். குழந்தைகள் அனைத்தும் ஒன்றையொன்று கட்டிப் பிடித்துக் கொண்டு அலறின.

ஏதோ பயங்கரம் மறுபடியும் நடந்து விட்டது என எல்லோரும் கலவரமடைந்தனர். 'டொய்லட்' பக்கமாக எழுந்து செல்லவும் பயந்தார்கள். ஆசிரியை ஓர் இளம் பெண். பயத்தால் அவர் நடுங்கினார். என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாறிய அவர் தலைமை ஆசிரியையின் அறைக்கு பதறிக் கொண்டு ஓடினார்.

ஆசிரியையின் கதையைக் கேட்டு வெலவெலத்துப்போன தலைமை ஆசிரியை அனைவரையும் பின் தொடரும்படியாகக் கூறி வேகமாக டொய்லட் பக்கமாகச் சென்றார். அங்கே மார்ட்டினின் சடலம் கிடப்பதைக் கண்டு அவர் அரண்டு விட்டார்.

* * *

மார்ட்டின் ஜோனின் முகம் நீலம் பாரித்தாற் போலிருந்தது. கண்கள் பிதுங்கி உதட்டோரத்தில் இரத்தக் கசிவு படிந்து விட்டிருந்தது. அவனும் கழுத்து நெரிக்கப்பட்டே கொலை செய்யப் பட்டிருக்கிறான்.

ஆனால்.........

சி.ஐ.டி அதிகாரியின் கண்களில் பிரகாசம் தோன்றியது. ஆமாம் கழுத்தில் கைரேகை கொஞ்சம் பதிவாகியிருந்தது. குற்றவாளியைக் கண்டு பிடிக்க ஆதாரம் ஒன்று கிடைத்து விட்ட ஆனந்தம் அவருக்கு.

* * *

இரு கொலைகளையும் கண்டவள் சிறுமி மேரி பெல்தான். கொலைகாரனை அவள் கண்டிருக்கக் கூடும் என்று அவர் நினைத்தாரோ என்னவோ சிறுமியின் வீடு சென்று அவளுடன் அன்பாகக் கதைத்தார்.

மேரி பெல்லா பெற்றோரை இழந்தவள். அவளுக்கு உறவினர் என்று சொல்ல ஒரேயொரு மாமியைத்தவிர வேறு எவரும் இல்லை. இந்த மாமிக்கு பாசம் என்பது என்னவென்றே தெரியாது. அடைக்கோழியைப் போன்று சதா கடுகடுப்பாக இருப்பாள். பாவம் மேரிபெல் அன்புக்காக ஏங்கும் ஒரு சிறுமி.

சி.ஐ.டி அதிகாரி அன்பாகக் கதைத்தும் அவள் கேவிக் கேவி அழத் தொடங்கி விட்டாள். அதிகாரிக்கு அவளிடமிருந்து கொலை காரனைப் பற்றிய எதுவித தகவலையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை. சி.ஐ.டி அதிகாரி என்ன நினைத்தாரோ தெரியவில்லை சட்டென அவளை உதாசீனப்படுத்தி ஏசிவிட்டு மேரியின் மாமியின் மூன்று வயதுப் பையனை அலாக்காகத் தூக்கிக் கொஞ்சினார். பெரியதொரு சொக்லெட்டை எடுத்து அவனிடம் கொடுத்து விட்டு அவனுடைய கன்னங்களில் முத்தமிட்டார்.

சி.ஐ.டி அதிகாரியின் இந்தச் செய்கைகள் மேரிக்குப் பிடிக்கவில்லை. அவள் வெறுப்புடன் அவரை நோக்கினாள். அவள் கண்களில் ஒரு வெறி மின்னியது.

வீட்டை விட்டு வெளியில் வந்த அதிகாரி மேரியின் மாமியை ஜீப்பின் அருகில் வரும் படியாக அழைத்து அவளிடம் என்னென்னவோ மெதுவாகச் சொன்னார்.

மாமியின் கண்களில் பயத்தின் ரேகைகள் படர்ந்தன. 'என்ன சொல்கிறீர்கள் சார்' என அவள் நடுங்கிக் கொண்டே கேட்டாள்.

''மேரியிடம் அன்பாக நடந்து கொள்ளுங்கள். அன்பு கிடைக்காத காரணத்தினால் சில பிள்ளைகள் கொலை செய்யக்கூடத் தயங்குவது இல்லை என்று அவர் ரகசியம் பேசுவது போல் சொன்னார்.

திடீரென ஜீப்பிலிருந்து குதித்து இறங்கிய சி.ஐ.டி அதிகாரி வேகமாக வீட்டிற்குள் ஓடினார். அங்கே—

மேரிபெல் மாமியின் மகனுடைய கழுத்தை ஒரு துணியினால் மூடி நெரித்துக் கொண்டிருந்தாள். சிறுவன் ஒரு மீனைப் போல் துடிக்கிறான்.

வேகமாக ஓடிவந்த அதிகாரி 'சட்'டென அவள் கைகளைத் தட்டிவிட்டு அவனைக் காப்பாற்றினார்.

* * *

மேரி பெல்தான் இரு கொலைகளையும் செய்திருந்தாள். அன்புக்காக ஏங்கிய அவள் நெஞ்சில் சிறு காலம் முதலே அது கிடைக்காததால் வெறுப்பு வளர்ந்திருந்தது. கொலைகள் செய்யும் அளவுக்கு அவள் மூர்க்கமடைந்திருந்தாள் என்று மனோதத்துவ டாக்டர்கள் தெரிவித்தனர். மேரிபெல் சிறுவர் நன்நடத்தை நிலையத்தில் அனுமதிக்கப் பட்டாள். அங்கே அவள் நடத்தைகள் நன்கு அவதானிக்கப்பட்டன.





# முதல் முத்தம் கமலுக்கு! அடுத்த முத்தம் அஜித்துக்கா?

## வசுந்தரா தாஸ் மனந்திறந்து கூறுகிறார்.

கமல்ஹாசனுடன் முத்தக் காட்சியில் நடித்து விட்டால் அந்த நடிகையின் திரையுலக வளர்ச்சி கேள்விக்குறியாகி விடுவது காலம் தந்த பரிசு.

ரேகா, சுகன்யா, கௌதமி போன்ற நடிகைகள் கமல் கொடுத்த முத்தத்திற்குப் பின்னர் காணாமல் போனவர்கள்.

இந்த வழியில் அறிமுகமான 'ஹேராம்' படத்திலேயே கமலுடன் முத்தக்காட்சியில் நடித்தவர் வசுந்தரா தாஸ். 'ஹேராம்' வெளிவந்து பல மாதங்களாகி விட்டன.

ஆனால் வசுந்தராவை வேறு படங்களில் காணவில்லை. கமலின் முத்த நாயகி வரிசையில் காணாமல் போய் விட்டாரோ! என்று எண்ணிக் கொண்டு இருக்கையில் மிகப் பெரிய திருப்பமாக அஜித் பல வேடங்களில் நடிக்கும் 'சிட்டிசன்' நாயகியாக நடித்து வருகிறார்.

முதல் முத்தம் கமலுக்கு அடுத்த முத்தம் அஜித்துக்கா? 'சிட்டிசன்' படப்பிடிப்பில் பிஸியாக இருந்த வசுந்தராவைக் கேட்ட போது, மெலிதாகப் புன்னகைத்தவர்.

எமது கேள்விகளுக்கு மனந்திறந்து பதில் கூறத் தொடங்கினார்.

கே: ஹேராமிற்குப் பிறகு 'சிட்டிசன்'இல் நடித்து வருகிறீர்கள். இந்த வாய்ப்பு எப்படி வந்தது?

ப: அஜித் தான் என்னை ரெக்கமென்ட் பண்ணியிருக்கிறார்.

கே: உங்களது குரல் செக்ஸியாக இருக்கிறது என்று கூறுகிறார்களே!

ப: இருக்கலாம்.

கே: நீங்கள் நடிப்பதை விட பாடுவதில் தான் அதிக ஆர்வம் காட்டுகின்றீர்களாமே?

ப: அப்படிச் சொல்வதற்கில்லை. வரும் வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்கிறேன்.

கே: 'முதல்வன்' படத்தில் ஷக்கலக்க பேபி ஷக்கலக்கபேபி என்று நீங்கள் பாடிய பாடல் உங்களைப் பாடகியாகவே இனங்காட்டி விட்டது. இதனால் நடிப்பில் பரிணமிக்க முடியவில்லை என்று எடுத்துக் கொள்ளலாமா?

ப: இல்லை. காலம் இருக்கிறது. இப்பொழுது தானே காலடியை எடுத்து வைத்திருக்கிறேன். என்னால் நடிப்பிலும் பிரகாசிக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

கே: ஹேராமிற்குப் பின்னர் ஒரு சிறிய இடைவேளை ஏன் ஏற்பட்டது?

ப: நான் மியூசிக்கல் அல்பமொன்றை வெளியிடுவதில் பிஸியாகியிருந்தேன். அதனால் நடிப்பில் அதிக ஆர்வம் காட்டவில்லை.

கே: உங்களை அதீதமான சங்கீதப் பிரியை என்கிறார்களே!

ப: ஆமாம். நான் சங்கீதத்தைக் காதலிக்கிறேன். என் வீட்டில் ஒரு அறை முழுவதும் இசைக்கருவிகளை வைத்திருக்கிறேன்.

கே: 'சிட்டிசன்' படத்தைத் தொடர்ந்து தமிழ்ப்படங்களில் கவனம் செலுத்துவீர்களா?

ப: வாய்ப்பு வந்தால் நடிப்பேன். இப்போது மீரா நாயரின் படமொன்றிலும் நடித்து வருகிறேன்.

கே: வசுந்தராவிற்கு ரகசியக் கனவுகள் ஏதாவது உண்டா?

ப: உண்டு. நான் மதிக்கும் நான் நேசிக்கும் எல்லோரும் என் அருகில் இருப்பது போன்ற கனவு.

கே: நீங்கள் பயப்படுவது?

ப: இருளைக் கண்டு.

கே: காதலைப் பற்றி உங்கள் கருத்து?

ப: அது அற்புதமான ஒன்று. அது செல்லமாக வளர்த்து பராமரிக்கப்பட வேண்டியது.

கே: கமலுடன் முத்தக்காட்சியில் நடித்ததைப் பற்றி...?

ப: வெரி கிளீனிக்கல்.

கே: ஆண்களிடம் நீங்கள் மதிப்பது, வெறுப்பது?

ப: மதிப்பது — திறந்த மனப்பான்மை. வெறுப்பது — ஆணடிமைத்தனம்.

கே: உங்கள் வாழ்க்கையில் மறக்க முடியாத கம்ப்ளிமென்ட்?

ப: அம்மாவிட மிருந்து கிடைத்தது. நான் இந்தத் துறைக்கு வரும் போது சொன்னார்கள் ''என்ன நடக்கு மென்று சொல்ல முடியாது. ஆனால் நீ சாதிப்பாய் என்று எனக்குத் தெரியும்''.

கே: ரசிகர்களுக்கிடையில் மாட்டிக் கொண்டால்?

ப: மனப்பூர்வமாகப் பேசுவேன்.

கே: கமலுடன் திரையில் முதல் முத்தக் காட்சியில் நடித்தீர்கள். அடுத்த முத்தம் அஜித்துக்கா?

ப: அப்படிச் சொல்ல முடியாது. கதைக்குத்தேவைப்பட்டால் நடிப்பதில் தவறில்லை. அதுவும் நடிப்புத்தானே.

ஷாம்





# தேவயானி திடீர் திருமணம்!

நடிகை தேவயானி இம்மாதம் 09 ம் திகதி டைரக்டர் இராஜகுமாரனைத்திடீர் திருமணம் செய்து கொண்டார். இத்திருமணம் திருத்தணியில் எளிமையான முறையில் இடம்பெற்றது. திருமணத்தைத்தொடர்ந்து பத்திரிகையாளர்களுக்குப் பேட்டி அளித்த தேவயானி தானும் டைரக்டர் இராஜகுமாரனும் நெடு நாள் காதலர்கள் எனவும் தன் பெற்றோர் எதிர்த்ததனால் திடீர் திருமணம் செய்ததாகவும் கூறினார்.

# திருமண தாமதம் தந்த தத்துவம்

சிம்ரனின் திருமணம் விரைவில் நடைபெறப்போகிறது என்று செய்திகள் வெளிவந்தன. ஆனால் சிம்ரனின் காதலர் ராஜசுந்தரத்துக்கு ஹீரோ வாய்ப்பு கிடைத்ததனால் திருமணம் தள்ளிப் போடப்பட்டிருக்கிறது. சிம்ரனும் காதலருக்காக விட்டுக்கொடுத்து மீண்டும் படங்களில் நடித்து வருகிறார்.

சிம்ரனின் திருமணமும் குலுக்கல் சீட்டு போன்றுஆகிவிட்டது. திருமணம் நடக்குமா? நடக்காதா? என்ற சஞ்சலத்தில் சிம்ரனின் ரசிகர்கள் இருக்கிறார்கள்.

இது இப்படி இருக்க, சிம்ரனின் திருமணம் எப்போது என்று அவரிடம் கேட்டால்,

''இன்னாருக்கு இன்னார் என்று அவரவர் தலையில் எழுதி வைக்கப்பட்டு இருக்கிறது. சாதாரண டீச்சராயிருந்த டயானா இங்கிலாந்து இளவரசரை மணக்கல்லையா? எல்லாத்துக்கும் நேரம் வரணும்'' என்று தத்துவ ரீதியில் பதிலளிக்கிறார். இப்படியே விட்டால் அம்மணி அறிஞர் சோக்கிரட்டீஸ் லெவலில் கருத்துக்களைச் சொல்ல ஆரம்பித்து விடுவார் போலிருக்கிறதே! என்று கூறுகின்றனர் திரையுலகினர்.



# நட்பைப் பிரித்தார் நாயகி திவ்யா உன்னி

'ஆண்டான் அடிமை' படத்தில் பணியாற்றிய போது சத்யராஜ் மணிவண்ணனிடம் ''தலைவா இது நம்ம பொண்ணு உங்க வால்தனங்களை கொஞ்சம் வாசியுங்க'' என்று அடக்கி சொல்லியிருக்கிறாராம்.

மணிவண்ணனுக்கு இது கோபத்தை ஏற்படுத்தி யிருக்கிறது. சத்யராஜ்—திவ்யா உன்னி சம்பந்தப்பட்ட காட்சிகளைத் தன் உதவியாளர்களை வைத்தே படமாக்கினாராம். உயிர் நண்பர்களாக இருந்த சத்யராஜையும் மணிவண்ணனையும் பிரித்து விட்டாரே என்று திவ்யா உன்னி மேல் கோபமாக இருக்கின்றனராம். சத்யராஜ்—மணிவண்ணன் நலன் விரும்பிகள்.

'மிஸ்டர் நாரதர்' படத்தில் ஜோடியாக நடித்த மாத்திரத் திலேயே சத்யராஜின் அன்பையும் சம்பாதித்துக் கொண்டார் திவ்யா உன்னி. தன் உயரத்திற்குப் பொருத்தமான உயரமான நடிகை என்று தனக்குத் தெரிந்தவர்களுக்கு அறிமுகப் படுத்துவதுடன் சிபாரிசும் செய்து வருகிறார்.

நீண்ட நாள் நண்பர்களான சத்யராஜ்—மணிவண்ணனின் நட்பில் திவ்யா உன்னியால் விரிசல் ஏற்பட்டுள்ளது.



# திரை மறைவில்

சமீபத்தில் அரசியல் விஷயமாக சென்னை வந்திருந்தார் 'அலைகள் ஓய்வதில்லை'யில் அறிமுகமான ராதை நடிகை. ஒரு காலத்தில் நடிகையைப்பார்த்து ''ராதா ஓ ராதா காதல் வராதா'' என்று பாடியவர்கள் இப்போது நடிகையின் உருவத்தைப்பார்த்துப் பயந்தே போய் விட்டார்களாம்.

பீப்பா போல் பருத்திருந்த அம்மணி தனக்குத்தெரிந்த, தற்போது முன்னணியில் இருக்கும் நாயகர்களிடம் வாய்ப்புக் கேட்டிருக்கிறார்.

அவர்களும் நாசூக்காக அக்கா, அண்ணி, அம்மா வேடங்களுக்கு முயற்சி பண்ணிப் பாருங்கள் என்று கூறியிருக்கிறார்கள். அதனால் சொல்லாமல் கொள்ளாமல் ரயிலேறி விட்டாராம் ராதை.

* *

இதயத்தைத்துடிக்க வைக்கும் படத்தில் நடித்த 'ஸ்ரீ' நடிகை கதாநாயகர்களைக் கவர்ந்திழுப்பதற்கு விஷேட உத்தியைக் கையாள்கிறாராம். படப்பிடிப்புத் தளங்களில் முன்னணி ஹீரோக்களைக்கண்டு விட்டால்,'' அடடா! இப்படித்துரும்பா இளைச்சுப்போயிட்டீங்களே! சுவர் இருந்தா தான் ஸார் சித்திரம் வரைய முடியும். உடம்பையும் கொஞ்சம் கவனிச்சுக்குங்க ஸார்'' என்று கூறுகிறாராம். அம்மணி இந்த டயலாக்கை எல்லோரிடமும் கூறிவருவது தெரியாமல் சில ஹீரோக்கள் அம்மணியின் பாசமழையில் நனையப்போய் மாட்டிக் கொண்டார்களாம்.

* *

பிஷ் நடிகையும் ரப்பர் நடிகரும் காதலர்கள். இருவரும் திருமணம் செய்து கொள்ளப்போகிறார்கள் என்று ஒரு செய்தி அரசல் புரசலாகக் கோடம்பாக்கத்தில் பரவியது.


ரோஜாஸ்ரீ

இப்போது என்னடாவென்றால், இந்தியாவின் மைக்கேல் ஜாக்சன் என்று புகழப்பட்ட நடிகர் காதலித்துக்கைப்பிடித்த தனது நடன மனைவியை 25 லகரம் கொடுத்து கைகழுவி விட்டுப் பிஷ் நடிகையுடன் ஒரு வீட்டில் குடித்தனம் நடத்தி வருகிறாராம்.

(திருப்பதி ஏழுமலை வெங்கடேசா இந்தக் கூத்த எங்க போய்ச்சொல்லுறது என் ராசா!)

* *

தயாரிப்பாளர்களைத் தாஜா செய்யத்தெரிந்த சாஜஹானின் காதலியான தாஜ் நடிகைக்கு வாய்ப்புகள் வந்துகொட்டிக் கொண்டிருக் கின்றன.

ஷாக்லேட்டில் இரட்டை வேடம் கிடைத்துள்ளது. தாராளமயக் கொள்கையில் அசத்துவதால் தான் இத்தனை முன்னேற்றமோ! என்று கேட்டால் உடனடியாக மறுக்கும் நடிகை '''குடும்பம் ஒரு கோயில்' படத்தைப் பாருங்கள் இழுத்துப் போர்த்திக் கொண்டு நடித்து வருகிறேன்'' என்று கூறியிருக்கிறார்.

## ரீமா இது எம்மா?



'மின்னலே' நாயகி ரீமா சென் தனிப்பட்ட ரீதியில் ஆசிரியர் ஒருவரை வைத்து தமிழ் கற்று வருகிறார். இவர் நடித்து ஒரு படம் தானே வெளியாகியிருக்கிறது ''ஏம்மா? தமிழ் படிப்பதற்கு இத்தனை அவசரம்'' என்று கேட்டால்,

''அடுத்த படம் வெளிவருவதற்கே தமிழ் தேவைப்படும் போலிருக்கிறது. அதுமட்டுமல்ல நம்மைப்பற்றி இல்லாதது பொல்லாததையெல்லாம் எழுதி விடுகிறார்கள்.

மொழி தெரிந்தால் தானே! இவர்களை ஒரு வழி பண்ணலாம். தமிழ் தெரிந்தால் டைரக்டர்களுடன் நல்ல படியாகப்பேசி நம் வாய்ப்பைத் தக்க வைத்துக் கொள்ளலாம்'' என்கிறார். (அட 'ஷாக்லேட்' வாய்ப்பு பறிபோனதால் வந்த ஞானோதயமா?)

## கொழுத்த சம்பளம் மும்தாஜ் முடிவுக்கு முழுக்கு



ஒற்றைப் பாடலுக்கு இனி ஆடமாட்டேன் என்று முடிவெடுத்திருந்தார் மும்தாஜ். இப்போது திடீரென தன் முடிவைத் தலை முழுகி விட்டு 'பூவெல்லாம் உன் வாசம்' படத்தில் ஒற்றைப்பாடலுக்கு ஆடி வருகிறார்.

ஒரு படத்தில் அவரைக் கதாநாயகியாக்குவதாக வாக்களித்ததும் அதிக சம்பளமும் தான் மும்தாஜ் அவரது முடிவுக்கு முழுக்குப்போடக் காரணமாம்.

## அஜித்தின் ஏறுமுகம்



அமிதாப் – ரஜினி காந்த் போன்றோரை வைத்து மாபெரும் வெற்றிப் படங்களை உருவாக்கியவர் தயாரிப்பாளர் ஏ.பூர்ண சந்திர ராவ். இவர் இப்போது விக்ரம் – லைலா ஜோடியாக நடிக்கும் 'தில்' படத்தைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்.

இவரது அடுத்த தயாரிப்பு 'ஏறுமுகம்' அஜித்குமார் கதாநாயகனாக நடிக்கிறார். அவருக்கு ஜோடி ரிச்சா பலேட். படத்தை இயக்கப் போகிறவர் சரண். அஜித் தற்போது இயக்குனர் சூர்யா வின் 'நியூ' இல் பிஸியாகியுள்ளார்.

## ஜோதி நடிகையின் மறுபக்கம்



வஞ்சகமில்லாத உடல் வளர்ச்சியைக் கொண்டவர் 'ஜோதி' மயமான நடிகை. அக்கா நடிகை என்ற நுழைவுச் சீட்டைக் கையில் வைத்துக் கொண்டு சென்னைக்கு வந்தார். குடும்பத்திலேயே அம்மணி தான் குறும்புத்தனம் மிக்கவராம்.

தந்தை மிகப்பெரிய இந்தித் தயாரிப்பாளர். பிரபல இந்தி முகங்களை வைத்து பல 'ஹிட்' படங்களைத் தந்தவர். இதனால் 'ஜோதி' நடிகையும் குழந்தையாக பல இந்திப் பிரபலங்களின் மடியில் தவழ்ந்தவர். நட்சத்திர பார்ட்டிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பு அம்மணிக்கு சாதாரணமாகவே கிடைத்தது.



தயாரிப்பாளர் கண்ணில் பட்டு நடிகையானார். முதலில் அறிமுகமானது இந்தியில். ஆனால் எடுபடவில்லை. தமிழில் 'பூவெல்லாம் கேட்டுப்பார்' படத்தில் நடிக்க ஆரம்பித்தார். ஆனால் இரண்டாவது படமான 'வாலி' முந்திக் கொண்டது.

நடிகை நடித்த சோனா பாத்திரத்தை ரசிகர்கள் தங்கள் நெஞ்சில் பச்சை குத்தியது போல் குத்திக் கொண்டனர்.

ரசிகர்கள் உயிரிலே கலந்து குஷிப் படுத்தியவர். டொப் லெவலில் நம்பர்வன் ஸ்தானத்தில் இருக்கிறார்.

அம்மணியின் சம்பளமும் 30 லகரத்தைத் தாண்டி விட்டிருக்கிறது. நடிப்பில் மட்டுமல்ல நடிகை தன் சொந்த வாழ்விலும் கில்லாடிதானாம்.

ஆரம்பத்தில் 'வாலி', 'குஷி' படங்களில் நடிக்கும் போது அதன் டைரக்டர் சூர்யாவுடன் ஸ்டோரி டிஸ்கஷனில் கலந்து கொண்டு அவரைக் கலங்கடித்தவர்.

அம்மணி அவரைக் காதலித்தாரோ இல்லையோ சூர்யாவுக்கு காதலில் டைத்தியமாகாத குறைதான்.

ஆனால் சாயும் பக்கம் சாயும் நெற்கதிர் போல் இந்தப் பருவ நாற்றும் சந்தர்ப்பத்துக்கேற்றவாறு ஆளை மாற்றிக் கொள்கிறது என்று கூறுகின்றது திரையுலகம்.

தற்போது ஜோதி மயமான நடிகையின் கடைக் கண்பார்வையில் சிக்கியிருப்பவர் ஆங்கில நடிகர் மிட்சம்.

இருவரும் சின்ன 'ஜோன்' படத்தில் ஜோடியாக நடித்தனர். படப்பிடிப்பு ஆரம்பித்த நாளிலிருந்தே இருவரும் 'திக்' ப்ரண்ட்ஸ் ஆகிவிட்டார்கள். இது ராதிகா ஸ்டைலில் ரகசிய திருமணத்தில் போய் முடியும் என்று கூறுகின்றனர். ஒருவரையொருவர் செல்லமாகத் தட்டுவதும் கொஞ்சுவதுமாக இவர்களது செல்லச் சிணுங்கல்களில் அப்படத்தில் பணியாற்றிய டெக்னிசியன்களுக்கு வெளிநாட்டுப் படம் பார்த்த திருப்தியாம்.

இதற்கிடையில் அக்கா வழியில் ஜோதி மயமான தங்கையும் காதல் பந்தை ஒரு கிரிக்கெட் வீரரை நோக்கி வீசத்தயாராக இருக்கிறாராம்.

இவர் குறி பார்த்திருப்பது அஜித் அஹர்காரின் கிரிக்கெட் மட்டையை.

சமீபத்தில் பயிற்சிக்காக சென்னை வந்திருந்தார் அஜித் அஹர்கார். இவரும் 'ஜோதி' மயமான நடிகையும் மகாபலிபுரம் அருகே ஒன்றாகக் காணப்பட்டனர் என்று கூறுகிறது கோடம்பாக்கம்.

இது இப்படியிருக்க, '(ரும், டும்' படப்பிடிப்பில் இடம்பெற்ற விவகாரத்தினால் அம்மணி பொலிஸ் உதவியை நாடியிருக் கிறார். அந்தப் படத்தின் புரடக்ஷன் மனேஜருக்கு வேண்டிய வெளிநாட்டு நண்பர்கள் லொக்கேஷனுக்கு வந்திருந்தார்களாம். அன்று இரவு ஜோதி நடிகையையும் அறிமுகப்படுத்தி வைத்திருக்கிறார்கள். நடிகை சம்பிரதாய ரீதியில் கும்பிட்டிருக்கிறார். ''வெளிநாட்டிலிருந்து வந்திருக்காங்க, கைகுலுக்கும்மா '' என்று மனேஜர் சொல்லியிருக்கிறார். நடிகையும் கைகுலுக்கியிருக்கிறார். ஆனால் அந்த வெளிநாட்டு நண்பர்கள் போதை வெறியில் ஆங்கிலத்தில் பேசியபடி எல்லை மீறியிருக்கின்றனர். உடனிருந்த நடிகையின் தாய்க்குலம் இயக்குனர் மணிரத்னத்திற்கு செல் போனில் விஷயத்தைக் கூறியிருக்கிறார். பொலிஸார் தலையிட்டு வெளிநாட்டுப் பார்ட்டிகளை எச்சரித்து அனுப்பியிருக்கிறார்கள்.

## கவர்ச்சியிலும் ரம்யா அசத்தல்



இப்போது திரையுலகில் அம்மன் வேடமென்றால் ரம்யாவுக்குத்தான் என்று முத்திரை குத்தப் பட்டிருக்கிறது. அதற்காக இழுத்துப் போர்த்தி அம்மன் வேடங்களில் மட்டுமே நடித்து விட்டுப் போவதற்கு ரம்யா கிருஷ்ணன் தயாராக இல்லை. ஆடைகுறைத்து கவர்ச்சி வேடங்களில் நடித்து அசத்தி வருகிறார். சத்யராஜ் ஜோடியாக 'அசத்தல்' படத்தில் ஒரு பாடலில் நடித்தபோது ரம்யாவின் கவர்ச்சியைப் பார்த்து வியந்து போனாராம் சத்யராஜ்.

DHALINI COMMUNICATION AND VIDEO CENTRE
IDD Calls
Local Calls
Internet Calls (Per Minute 18/-)
Fax
Photo Copy
Audio and Video Recording
Tamil, English and Hindi Movie Cassette
சிட்டிசன்
பத்ரி
No. 285A, Galle Road, Wellawatte, Colobo - 06.
Tel : 074-517573, 552818

# புதுமைப் பெண்

நானும் எனது அக்காவும் சுன்னாகம் பஸ் ஸ்ராண்டில் பஸ்ஸுக்காக காத்து நிற்கின்றோம். நாங்கள் இருவரும், நகரில் உள்ள கல்லூரி ஒன்றில் கல்வி கற்கின்றோம்.

எனது அக்கா ஜி.சி.ஈ. உயர்தர வகுப்பில் படிக்கிறாள்: நான் அடுத்த வருடம், ஜி.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சை எடுக்க வேண்டும். ஆனால் நான் அக்காவை விட நல்ல வளர்த்தி. நானும் உயர்தர வகுப்பில் படிப்பதாகத் தான் எல்லோரும் நினைப்பார்கள்.

இன்று காலை, நாங்கள் வழமையாக செல்லும் ஸ்கூல் சேவிஸ் பஸ்ஸை கோட்டை விட்டு விட்டோம். இதற்குக் காரணம் நான்தான். தேவையில்லாமல் எனது தம்பியுடன் போட்ட சண்டை.

எங்கள் அப்பாவிற்கும் அம்மாவிற்கும், தம்பியென்றால் உசத்தி. ஆண்டு ஐந்து படிக்கும் அவனுக்கு ஏகப்பட்ட மரியாதை, எதை எடுத்தாலும் அவனுக்குத்தான்.

இன்று எனது பேனையை எடுத்து தொலைத்து விட்டான். கேட்டதற்கு தான் எடுக்கவில்லை என்று பொய் வேறு சொன்னான். ஒரு அடி போட்டேன். அழுது கொண்டு அம்மாவிடம் போனான். ''என்னடி கையோங்குகிறது'' என்று அம்மா என்னை பிரட்டி எடுத்து விட்டாள். அக்கா தான் இடையில் புகுந்து எனக்கு விழுந்த அடியை மறித்தாள்.

அம்மா மாதிரி எனது அக்கா கொஞ்சம் பயந்த சுபாவம். அம்மா கரப்பான் பூச்சியைக் கண்டால் கூட கத்திக் கொண்டு ஓடுவா. எங்களுடைய அப்பா கரப்பான் பூச்சிக்கெல்லாம் பயப்பட மாட்டார். எலி, பாம்பு என்றால் தான் பயப்படுவார்.

ஆனால் நான் பாம்பு, நாய் எல்லாம் அடிப்பேன். பயம் என்பது எனக்கு மிகவும் குறைவு. பக்கத்து வீட்டில கூட தற்செயலாக பாம்பு வந்தால் அடிக்க என்னைத்தான் கூப்பிடுவார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

''உன்னால தாண்டி இவ்வளவு லேட். அதிபர் பேசப் போறா. அக்கா என்னைக் கோபமாகப் பார்த்துக் கொண்டு சொன்னாள். அவளுடைய அழகிய முகம் சிவந்து விட்டது. நான் மணிக் கூட்டைப் பார்த்தேன் மணி 7.45.

பஸ்ஸொன்று நிறைய சனத்துடன் தெல்லிப் பழை பக்கமிருந்து வந்து, எமது நிலையத்தை நோக்கி திரும்புகிறது. ''இந்தா பஸ்வந்திட்டுது'' என்று கூறிக் கொண்டு ஏறுவதற்குத் தயாரானேன்.

ஸ்ராண்டில் நின்ற மற்றவர்களும் எங்களையும் இடித்துக் கொண்டு, பஸ்ஸில் ஏறுகிறார்கள். நாங்கள் இருவரும் ஒருவாறு பஸ்ஸில் ஏறிவிட்டோம்'' பஸ்ஸுக்குள் சரியான சனம். கண்டக்டரிடம் எனது சீசன் டிக்கட்டை நீட்டுகிறேன். சீசன் ரிக்கட்டுடன் எனது கையையும் மெதுவாகத் தடவியபடி வாங்குகின்றார். சீசன் ரிக்கட்டை தரும் போதும் அப்படித்தான்.

ஏன்தான் ஆண்கள் எல்லோரும் இப்படிச் செய்கிறார்களோ தெரியாது. இதில் என்ன சுகம் இருக்கின்றது? அடுத்த பிறவியிலாவது, ஆணாகப் பிறந்து, இந்த தொடுகையில் என்ன சுகம் இருக்கிறது, என்பதை அறிய வேண்டும்.

''டிக்கட் எடுக்காத ஆட்கள் ஆராவது இருந்தால் ரிக்கட் எடுங்கோ'' என்ற கொண்டக்டரின் குரலுக்கு எனது கற்பனை கலைகிறது. இல்லாவிட்டால் ஆணாக மாறி என்னவெல்லாமோ செய்திருப்பேன்.

பஸ் யாழ் நகரத்தை நோக்கிப் புறப்படுகின்றது. நான் விழாமல் இருப்பதற்கு ஒரு பக்க இருக்கையின் கைப்பிடியைப் பிடித்துக் கொண்டேன். அக்கா மற்றப் பக்கமாகவுள்ள இருக்கையின் பிடியைப் பிடித்துக் கொண்டு அடுத்த பக்கமாக நிற்கின்றாள். பஸ்ஸுக்குள் ஆண்களும் பெண்களுமாக ஒரே நெரிசல்.

எனக்குப் பக்கத்தில் நின்ற ஆளொருவர், என்னைவிட ஏழெட்டு வயது கூட இருக்கும். வேண்டுமென்றே என்னை இடித்தார். நான் கொஞ்ச நேரம் பேசாமல் நின்றேன். இது வழமையாக பஸ்ஸில் நடக்கும் ஒரு நிகழ்ச்சி தான்.

ஆனால் இன்று விடிய வீட்டில் நடந்த சண்டையின் ஆத்திரம் கொஞ்சம் இருந்தது. ஆளைப் பார்த்து முறைத்தேன். ஆள் நிதானமாகி மெதுவாக அசைந்து, என்னை இடிக்காமல் தள்ளி நின்றார்.

பஸ் தனது வழமையான குலுக்கலுடனும் திடீர் பிரேக்குடனும், தட்டா தெருச்சந்தி சென்றி பொயின்ரை வந்தடைந்தது. ''நிற்கிறாட்கள் எல்லாரும், கொஞ்சம் இறங்கிப் போங்க'' கொண்டக்டரின் சத்தம்.

நானும் அக்காவும் பஸ்ஸிலிருந்து இறங்க ஒருவாறு இடிபட்டுக் கொண்டு பஸ்ஸின் வாசலுக்கு வந்து விட்டோம். அக்கா எனக்கு பின்னால். நான் இறங்கி அக்காவைப் பார்க்கிறேன்.

அவள் வாசலுக்கு வந்து இறங்கத் தயாரான போது பின்னால் வந்த ஒரு இளைஞன் வேண்டுமென்றே அக்காவுக்கு இடிக்க அவள் தடுமாறி வெளியே விழுகிறாள். நல்லவேளை, நான் கீழே நின்றபடியால் அக்காவை விழவிடாமல் பிடித்தேன்.

''உமக்கு பார்த்து இறங்கத் தெரியாதோ'' என்று நக்கலாகச் சொல்லி விட்டு அந்த இளைஞன், சென்றியை நோக்கி நடந்தான்.

எனக்குக் கோபம் தலைக்கேறியது. பஸ்ஸில் இருந்தவர்கள் எல்லோரும், இதைப்பார்த்து விட்டு தங்களுக்கும் இதற்கும், ஒரு சம்பந்தமும் இல்லை என்பது போல் இருந்தார்கள்.

ஆனால் ஓர் ஆச்சி மாத்திரம், ஏதோ வாய்க்குள் முணு முணுத்து விட்டு, ஜன்னலுக்கு வெளியே தலையை நீட்டி வெற்றிலையைத் துப்பியது. இது எல்லாம் அவர்களுக்கு ஒரு வழமையான நிகழ்ச்சி.

மனதுக்குள் பொருமியபடி சென்றியை நோக்கி, நடந்தேன். வழமையாக நிற்கும் அந்த பெண் ஆமி, என்னை அந்தக் கூண்டுக்குள் வைத்து அழகாகத் தடவி பரிசோதித்து விட்டது.

நானும் அக்காவும் கொஞ்சம் தள்ளி பஸ்ஸுக்கு மீண்டும் ஏற நின்றோம். பஸ் சோதனையை முடித்து வந்து நின்றது.

**சுடர் ஒளி சிறுகதை**




எல்லோரும் அடிபட்டு ஏறினார்கள். நாங்கள் ஆறுதலாக நின்றோம்.

எல்லோரும் ஏறிய பிறகு அக்கா முதல் ஏறி, பஸ்ஸுக்குள் சென்றாள். நான் கடைசியில் ஏறினேன். எனது அக்காவுக்கு இடித்த இளைஞன், பஸ்ஸின் வாசலில் கையை ஒன்றிலும் பிடிக்காமல் ஸ்ரைலாக நின்றுகொண்டிருந்தான்.

நானும் அவன் பக்கத்தில் நின்று கொண்டேன். பஸ் புறப்பட்ட போது, அவனது சமநிலை குழம்பியது.

முன்னும் பின்னுமாக, ஆடினான். இது தான் சந்தர்ப்பம் என்று நான் நினைத்தேன். வேண்டுமென்றே அவன் மீது மெதுவாக மோதினேன். அவன் பின் சீற்றுக்கும், வாசலுக்கும் இடையே, 'பொத்'தென்று விழுந்தான். சுதாகரித்துக் கொண்டு எழமுயல, பஸ்ஸின் குலுக்கலுக்கு மீண்டும் விழுந்தான்.

என் மனதில், கோட்டையை பிடித்து விட்ட ஒரு வெற்றியின் திருப்தி. நான் இடித்ததை வெற்றிலைக் காரக் கிழவி பார்த்து விட்டாள். ''என்ன பிள்ளை, பொடியளோட உரஞ்சிறதுக்கே பஸ்ஸுக்க ஏறுறனீங்கள், பொம்பிளைப் பிள்ளையள் எண்டால் அடக்க ஒடுக்கமாக இருக்கோனும்.' கிழவி பெரிய சத்தமாகக் கத்தியது.

பஸ்ஸில் இருந்த எல்லோரும் என்னைத் திரும்பிப் பார்த்தார்கள். என்ன நடந்தது என்று கிழவி எல்லோருக்கும் பெரிய சத்தமாய் ஒலி பரப்பியது. கிழவி முந்தி பி.பி.சி யில் தான் வேலை செய்திருக்க வேண்டும்.

''ஆளைப்பார்க்கவே தெரியும். ஆள் ஒரு மாதிரித்தானெண்டு.'' இன்னுமொன்று பேட்டி கொடுத்தது. ஆளுக்கொரு விமர்சனம். படார், படார் என்று வந்தது. எனது அக்கா என்னை எரிப்பது போல் முறைத்துப் பார்த்தாள்.

''எல்லாத்துக்கும் வீட்டை வா'' என்றாள்.

நான் ஒருவருக்கும் பயப்படவில்லை. என்னைப் பொறுத்தளவில் நான் செய்தது சரியென்று எனது மனது கூறியது.

அந்தப் பையனும் எழுந்து ஒரு பக்கமாக நல்ல பிள்ளையாய் நின்றான். பஸ் ஓடிக் கொண்டிருந்தது. எங்கள் கல்லூரியில் கல்வி கற்பிக்கும் ஒரு ஆசிரியையும், அந்த பஸ்ஸில் வந்ததை நான் கவனிக்கவில்லை.

* * *

முதல் பாடம் ஆரம்பமான போது, என்னை அதிபர் கூப்பிடுவதாக ஒரு மாணவி கூறினாள். நான் அதிபரின் அறைக்குச் சென்றேன். ''பஸ்ஸில இண்டைக்கு என்ன நடந்தது?'' அதிபர் நேரடியாக விடயத்துக்கு வந்தார். எனக்கு ஒன்றும் புரியவில்லை.

''ஒண்டுமில்லை மடம்''

''காயத்திரி மிஸ் எல்லாம், சொல்லிற்றா, நீ ஒரு பொடியனை பஸ்ஸுக்குள்ள தள்ளி விழுத்தினியாம். உங்களை மாதிரி பிள்ளையளால பள்ளிக்கூட மானம் போகுது. நீ, இங்கயும் சரியான குழப்படி, நாளைக்கு நீ வரேக்க அப்பாவையும் அம்மாவையும் கூட்டிக் கொண்டு வா.''

''எங்கட அக்காவை அந்தப் பொடியன் தள்ளி விழுத்தினவன். அதுதான் நானும் அவனை தள்ளி விழுத்தினனான்.

''ஆம்பிளையள் மாதிரி நீயும் அடிபடவா போறாய்? நீ ஒரு பொம்பிளைப்பிள்ளை அதைமட்டும் நீ ஞாபகம் வைத்திரு. நாளைக்கு வரேக்கை பேரன்ஸ்ஸோட வா''— அதிபர் கண்டிப்பாகக் கூறிவிட்டார். நான் கவலை தோய்ந்த முகத்துடன், எனது வகுப்பறையை நோக்கி நடக்கிறேன்.

''பெண்கள் யாருக்கும் பயப்படாமல் எல்லாத் துறைகளிலும் முன்னேறி பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக வாழ வேண்டும்.'' காயத்திரி மிஸ், தனது வகுப்பு மாணவிகளுக்கு, மகளிர் தினத்தை முன்னிட்டு பேச்சுப் போட்டிக்கு ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தார். எனக்கு சிரிப்பு வந்தது.

## 21 கார்களின்அடியில் சறுக்கிச் சென்று சாதனை

''ஸ்கேட்டிங் எனப்படும் சறுக்கி விளையாடும் போட்டியில் எத்தனையோ பேர் சாதனை நிலைநாட்டியிருக்கிறார்கள். ஆனால், இந்தியாவின் கேரள மாநிலத்தைச் சேர்ந்த 8 வயதுச் சிறுவன் ரியாத் ஜோஷி செய்த சாதனை அனைவரையும் வியப்படையச் செய்திருக்கிறது.



திருவனந்தபுரம் புனித தோமஸ் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் 21 கார்கள் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. கார்களுக்கு அடியில் 6.7 அங்குல (அரை அடிக்கு சிறிது அதிகம்) உயரமே இருந்தது.

கால்களில் ஸ்கேட்டிங் ரோலர்களை அணிந்து கொண்ட ரியாத் ஜோஷி 180 பாகை அளவுக்குக் கால்களை அகல விரித்துக் கொண்டான். தலையை முன்புறம் சாய்த்துக் கொண்டு சறுக்கிய படியே 21 கார்களின் அடியில் விரைந்து சென்று தனது சாதனையை நிலை நாட்டினான். கின்னஸ் புத்தகத்தில் இந்த சாதனை இடம் பெறும் எனத் தெரிகிறது.

## 007க்கு குறையாத மவுசு

ஜேம்ஸ் பொண்ட் 007. இவர் 1962ம் ஆண்டு முதல் வெள்ளித் திரைகளில் சக்கைபோடு போட்டு வருகின்றார்.

இயன் பிளமிங் என்னும் நாவலாசிரியர் உயிர் கொடுத்து உருவாக்கிய கதாபாத்திரமே ஜேம்ஸ் பொண்ட். 'காசினோ றோயல்' என்ற பெயரில் முதல் ஜேம்ஸ் பொண்ட் நாவல் 1953ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. நாவலின் பிரபலம் அதன் சினிமாத் தயாரிப்புக்கு 1962இல் வித்திட்டது.

பணக்காரன் போல் உடை அணிந்து கொண்டு துப்பாக்கி ஏந்தி கொடியவர்களைக் கொலை செய்யும் துப்பறியும் நிபுணரே ஜேம்ஸ் பொண்ட்.

ஜேம்ஸ் பொண்ட் திரைப்படங்கள் பெரும் செலவில் பிரமாண்டமாகத் தயாரிக்கப்படுகின்றன.

ஜேம்ஸ் பொண்ட் நடிகர் சோன் கொனரி ஜேம்ஸ் பொண்ட் பாத்திரத்தில் நடிப்பதை கைவிட்டபின் ஜேம்ஸ் பொண்ட் படங்கள் முன்னர் போல் அதிக வசூலைத் தரவில்லை.

பியர்ஸ் புரஸ்னன் நடித்த 'த வேர்ள்ட் இஸ் நொட் இனாவ்' (The World is Not Enough) என்ற ஜேம்ஸ் பொண்ட் படம் 344.7 மில்லியன் அமெரிக்க டொலர்களை வசூலித்தது. அதை அடுத்து ஜேம்ஸ் பொண்ட் படங்கள் அதிக வசூலைக் குவிக்க ஆரம்பித்து விட்டன.

# பெண்கள் மீது முறைகேடு! மூடி மறைக்கும் எண்ணமா?

## குற்றம் சுமத்தப்பட்ட சீருடையினருக்கும் வெறுமனே இடமாற்றம்.

தென்னிலங்கையில் நடைபெற்ற சில கற்பழிப்பு, கொலைச் சம்பவங்களில் அரச தரப்பு துரிதமாகச் செயற்பட்டது. விசாரணை நடத்தப்பட்டு எதிரிகள் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனர். தண்டனைகளும் வழங்கப்பட்டன. பொதுமக்களும் பாராட்டினார்கள்.

முகத்துவாரம் ரீட்டா ஜோன் கொலை வழக்கு, ஹோகந்தரை அறுவர் கற்பழிப்பு கொலை வழக்கு, கம்பஹா இராணுவப் பெண் செவ்வந்தி கொலை வழக்கு ஆகியவற்றை அரச தரப்பு துரிதமாகச் செயற்பட்ட வழக்குகளாகக் குறிப்பிடலாம்.

இதற்கு முன்னர் பொ.ஐ முன்னனி அரசு பதவிக்கு வந்த உடனேயே ஐ.தே.க ஆட்சியின் போது நடந்த இராணுவ அத்துமீறல்கள் அம்பலத்துக்கு கொண்டு வரப்பட்டன. சூரியகந்தையில் புதைகுழிகள் தோண்டப்பட்டன. ஓரிரு ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த கிருஷாந்தி கொலை அம்பலத்துக்கு வரவே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதாயிற்று.

ஆனால், இன்று நடப்பதென்ன? மன்னாரில் இரண்டு தமிழ்ப் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட சம்பவம் நடந்து ஒரு மாதத்துக்கும் மேலாகி விட்டது. சம்பவத்தில் சம்பந்தப்பட்ட படையினருக்கு எதிராக போதிய சாட்சியம் இருந்தும் இது வரை நடவடிக்கை மேற்கொள்ளப் படவில்லை எனத் தெரிகிறது.

மன்னார் சம்பவம் குறித்து சட்டவிரோதக் கைதுகள், தொல்லை தவிர்ப்புக் குழுவின் கவனத்துக்கு அண்மையில் கொண்டுவரப்பட்டிருந்தது. நீதியமைச்சர் வீரக்கோன் இக்குழுவின் தலைவராவார்.

மன்னார் சம்பவம் குறித்து ஆராய்ந்த அமைச்சர் வீரக்கோன் தலைமையிலான குழு, சம்பவத்தில் சம்பந்தப்பட்ட படையினரைக் கைது செய்து அடையாள அணிவகுப்பு நடைபெறும் வரை விளக்கமறியலில் வைக்க நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபரை உடனடியாகப் பணித்தது.

இதுதொடர்பாக குழு அறிக்கை ஒன்றையும் வெளியிட்டது.

இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்ட படையினரைக் கைது செய்து விளக்க மறியலில் வைக்கப் போதுமான சாட்சியங்கள் உள்ளன. அதனால் அவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பணிக்கிறோம். விசாரணையின் போது அந்த நடவடிக்கையை மேற்கொள்ளத் தவறியதற்கான காரணம் குறித்து அறிக்கை சமர்ப்பிக்கவும் பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்துள்ளோம்.

இச்சம்பவம் குறித்து மன்னார் பொலிஸ் அதிகாரியினால் பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பப்பட்ட அறிக்கையை ஆராய்ந்து பார்த்தோம். பொலிஸ் அதிகாரியின் அறிக்கையின்படி இப்பெண்கள் மன்னார் நீதிவான் முன் ஆஜர்படுத்தப்பட்டபோது அவர்கள் பாலியல் வல்லுறவு குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளனர். நீதி வானின் உத்தரவுப்படி மாவட்ட வைத்திய அதிகாரியினால் அவர்கள் இருவரும் பரிசோதனை செய்யப்பட்டனர். அவர்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாக மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையையும் நீதிவானின் உத்தரவையும் அடுத்து இவ்விரு பெண்களினதும் வாக்குமூலத்தைப் பொலிஸார் பதிவு செய்துள்ளனர். பிஸ்கால் காவலில் பெண்கள் இருவரும் இருந்த பொழுது பாலியல் வல்லுறவுச் சம்பவம் இடம் பெற்றிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் சம்பந்தப்பட்ட நபர்களை அடையாளம் காண முடிந்திருப்பதாக பெண்கள் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர். சில பெயர்களையும் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் பொலிஸ் அதிகாரிகள் மாவட்டத்துக்குள் இடம் மாற்றப்பட்டிருப்பது மட்டுமே இதுவரை நடந்திருப்பதாக குழுவின் முன் ஆஜரான பொலிஸ் அதிகாரி மூலம் அறிந்து ஆச்சரியமடைந்தோம்.

சம்பவத்தில் சம்பந்தப்பட்டோர் எனக் கருதப்படும் கடற்படை அதிகாரிகள் தொடர்பாக நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டதா என்பதை அறியோம்.

எவ்வாறாயினும் சந்தேக நபர்களை கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தவும் அடையாள அணிவகுப்பு நடைபெறும் வரை அவர்களை விளக்கமறியலில் வைக்கவும் போதுமான சாட்சியங்கள் இருப்பதாக இக்குழு கருதுகிறது.

சட்ட விரோத கைதுகள், தொல்லை தவிர்ப்புக்குழு, மன்னார் சம்பவம் தொடர்பாக கடந்த வாரம் விடுத்த அறிக்கை இது:—

மன்னார் மாவட்ட நீதிவான் இச்சம்பவம் குறித்து ஏற்கனவே சில உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளார். கடந்த 9 ஆம் திகதி தன் முன் ஆஜர் செய்யப்பட்ட இரு பெண்களையும் சரீரப்பிணையில் அவர் விடுவித்துள்ளார். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, விசேட புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த இருவர் ஆகியோரைக்கைது செய்து எதிர்வரும் 23ஆம் திகதி ஆஜர் செய்யவும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

எத்தனையோ வழக்குகளில் போதிய ஆதாரங்கள் இல்லாத நிலையில் கூட பொலிஸார் சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர், நீதிமன்றங்களில் ஆஜர் செய்துள்ளனர். இச்சம்பவத்தில் போதிய ஆதாரம் இருப்பதாக சட்டவிரோத கைதுகள், தொல்லை தவிர்ப்புக்குழு அடித்துக் கூறியுள்ளது. நீதிவானும் சந்தேக நபர்களைக் கைது செய்ய உத்தரவிட்டுள்ளார்.

மன்னார் சம்பவம் தொடர்பாக உரிய பொலிஸ் நடவடிக்கை மேற்கொள்ளப்படாததை ஆட்சேபித்து திருகோணமலை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு என பல இடங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. கொழும்பிலும் பல அரசியல் கட்சிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன. பொலிஸார் இனியும் செயற்படாதிருக்க முடியுமா?

—அவதானி




### மூன்று மாதம் யோகம் இல்லை.

நாடாளுமன்றத்தில் மீண்டும் அமரும் பாக்கியம் இன்னும் 3 மாதங்களுக்குத் தனக்குக் கிடைக்காது என்பதை அறிந்து யோகமான ராஜன் இடிந்து போய் இருக்கிறாராம்.

அதிகார அம்மணியைச் சந்தித்து வழமை போல புதுப்பித்துக் கொண்ட வாக்குறுதிகளால் களிப்படைந்த தலைமையிலிருந்த ஆறுமுக மானவரிடம் யோகமான ராஜன் தனது நியமனம் குறித்துக் கேட்டாராம்.

நாடாளுமன்றத்தில் அமர்ந்துவிட்ட முத்தான மாரிக்கு வெளிநாட்டுத் தூதுவர் பதவி தருவதாகவும் அதற்கு அவர் எம்.பி பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டிருப்பது பற்றி அம்பலம் வாசகர்களுக்கு தெரிந்திருக்கும்.

ராஜினாமாச் செய்வதாக சொன்ன முத்தான மாரி தனக்கு பின்னால் இருந்து தரப்படும் உற்சாகம் காரணமாக ராஜினாமாவை ஏதோ ஒருவகையில் பின் போட்டு வருகிறார்.

நாற்காலியை அலங்கரித்துக் கொண்டிருக்கும் முத்துமாரி ஆளும் தரப்பு முக்கிய அமைச்சர் ஒருவரின் உதவியை இப்போது நாடி இருக்கிறாராம். அத்தோடு நாடாளுமன்றப் பதவியை ராஜினாமாச் செய்வது குறித்துத் தீர்மானிக்க தனக்கு இன்னும் 3 மாத கால அவகாசம் பெற்றுத் தரும்படியும் அந்த அமைச்சரிடம் இவர் கோரிக்கைவிடுத்தாராம்.

யோகமானராஜன் தனது பதவி நியமனம் குறித்து ஆறுமுகமானவரிடம் கேட்டதையடுத்து இதுபற்றிய விவரம் வெளியே தெரிய வந்ததாம்.

### கருவின் விருந்து

தமிழ்க் கட்சிக்காரர்களை வளைத்துப் பிடிக்க பச்சைக் கட்சியின் கருவானவர்தான் பொறுப்பாக நியமிக்கப்பட்டு இருக்கிறாராம்.

தலைவரின் உத்தரவைக் கண்டிப்பாக நிறைவேற்ற உறுதி கொண்டிருக்கும் கருவானவர் தமிழ்க்கட்சிக் காரர்களுக்கு விருந்து படைப்பதிலும் கூட்டம் நடத்து வதிலும் கடந்த இரு வாரங்களாக மும்முரம் காட்டியிருக்கிறார்.

இவர்களில் பழம் தமிழ்க்கட்சிக் காரர்களுக்கு கருவானவர் விருந்து படைத்தாராம். இக்கட்சிகளுக்கு மட்டும் கருவானவர் விருந்துக்கு அழைப்பு விடுத்ததேன் என்று தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கிறார்கள் சில தமிழ்க் கட்சித் தலைவர்கள்.

### ஆர்ப்பாட்டத்திற்குள் ஓர் ஆர்ப்பாட்டம்

மன்னாரில் தமிழ்ப் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதை எதிர்த்து தமிழ்க் கட்சிகள் இணைந்து நடத்திய ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள வருமாறு தமிழ்க் கட்சித் தலைவர் ஒருவர் மூன்றெழுத்து தீவிரவாதக் கட்சி ஒன்றுக்கு அழைப்பு விடுத்தாராம்.

அந்தத் தீவிரவாத சோசலிசம் பேசும் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் மழுப்பலாகவே பேசினாராம். அன்றைய தினம் வரமுடியாது என்று இறுதியில் அறிவித்தாராம்.

ஆனால் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் ரயில் நிலையத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்த வேளையில் பெருமளவு மூன்றெழுத்து தீவிரவாத கட்சியின் தொண்டர்கள் ரயில் நிலையத்துக்கு முன் தம் கட்சிக்காக உண்டியல் குலுக்கிக் கொண்டிருந்தார்கள்.

அதே நேரம் ஆர்ப்பாட்டத்தில் கண்ட இன்னுமொரு முக்கிய விடயத்தையும் குறிப் பிட்டாக வேண்டும். ஆர்ப்பாட்டம் நடத்தியதை அம்பலத்தார் வரவேற்றபோதிலும் சில குறைகளைச் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

ஐந்து மலையகக் கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொள்வதாக ஏற்பாட்டாளர்களில் ஒருவர் தெரிவித்திருந்தார். ஆனால் இருவர் மட்டும்தான் வந்திருந்தார்கள்.

தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் மழையையும் பாராமல் குடை பிடித்தபடி நின்றார்கள். டி.விக்கு பேட்டி கொடுத்தார்கள். ஆனால் ஆர்ப்பாட்டத்துக்கு கொழும்பிலுள்ள சில வடபுலத்துப் பெண்களையாவது கூடவே அழைத்து வரவில்லை.

வந்திருந்த பெண்களில் பெரும்பாலா னவர்கள் மாளிகாவத்தைப் பகுதி வயது போன முஸ்லிம் சிங்களப் பெண்கள். ஆனால் இவர்களுக்குத் தாம் எதற்காகக் குரல் எழுப்புகிறோம் என்பது தெரியவில்லை. வடக்குத் தமிழ்க் கட்சிகளின் பெயர்ப் பதாகை ஒன்று கூட இல்லை.

இத்தனை தமிழ்க் கட்சிகள் கூட்டாக நடத்தியும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட வர்களின் எண்ணிக்கை இவ்வளவு தானா?

இந்தக் கேள்விக்கு ஒரு தமிழ்க்கட்சிப் பிரமுகர் பதிலளிக்கையில்:—

''சே! நாங்கள் நிமலராஜனுக்காக இதை விடக் கம்மியான மக்களைக் கொண்டே எதிர்ப்புத் தெரிவித்திருந்தோம் என்றார்''

இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்துவது பற்றிய இறுதி முடிவு இம் மாதம் 3ஆம் திகதி இக் கட்சி களால் எடுக்கப்பட்டது . ஆர்ப்பாட்டத்துக்கான ஒழுங்கு களைப் பொறுப்பெடுத்துக் கொண்ட வர்கள் பல தமிழ்க்கட்சிகளைத் திட்டமிட்டு ஓரம் கட்டும் முயற்சியில் ஈடுபட்டனர் என்று தற் பொழுது கிசுகிசுக்கள் கசிய ஆரம்பித்துள்ளன.

ஆர்ப்பாட்டம் தொடர்பான முன் ஏற்பாடுகளை இருவர் கூட்டாக வகுத்தனராம்.

ஆர்ப்பாட்டத் தினத்தன்று காலைவரை மற்றைய சில தமிழ்க்கட்சிகளுடன் எந்த விதத்தொடர்பையும் வைத்திருக்காமல் திரை மறைவில் செயற்பட்டனர் என்று இவர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளனவாம்.

ஆர்ப்பாட்டம் எங்கு எப்பொழுது என்ற விவரம் கூடச் சில தமிழ்க்கட்சிகளுக்கு கடைசி நேரம் வரை தெரிந்திருக்கவில்லையாம்.

இதனால் சில முக்கிய பிரமுகர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள முடியாது போய்விட்டதாம்.

''ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடத்தை பத்திரிகையில் பார்த்தா தெரிந்து கொள்வது?'' இந்த இரண்டு பிரமுகர்களின் கைங்கரியத்தால் எமது உறுப்பினர்களையும் ஆதரவாளர்களையும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுத்த முடியாது போய் விட்டது.''

இப்படி பத்துக்கட்சிகளையும் ஓரணியில் திரட்டுவதில் முன்னோடியாகச் செயற்பட்ட சிலர் ஆத்திரப்பட்டிருக்கிறார்கள்.

''200 பேருக்குக் குறைவானவர்களுடன் நடத்திய ஆர்ப்பாட்டத்தை 2,000 பேருடனாவது நடத்தி பெரிய அளவில் எதிர்ப்பைக் காட்டியிருக்கலாம். இடம்பெயர்ந்து கொழும்பில் வாழும் தமிழ் மக்களையும் திரட்டி இருக்கலாம். எல்லாவற்றையும் தமக்குள்ளே ரகசியமாக நடத்தி ஓர் அருமையான வாய்ப்பைக் கெடுத்து விட்டார்கள்'' என்று இரண்டு தமிழ்க்கட்சிகள் அதிருப்தி தெரிவித்துள்ளன.

கொழும்பில் என்றால் நாங்கள்தான் எல்லாம் என்று கொழும்பில் மாத்திரம் செயற்படும் அந்த இரண்டு பேருமே கணக்குப் போடுவதாகவும் சுயவிளம்பரம் தேடும் இப்படியானவர்களால்தான் தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு நடவடிக்கைகள் பல சந்தர்ப்பங்களில் தேக்கம் அடைகின்றன என்றும் குற்றச்சாட்டுகள் எழுப்பப்படுகின்றன.

இந்த கூட்டமைப்புக்கு இனியாவது ஒரு செயற்குழுவை நியமித்து கூட்டமைப்பு சீராகச் செயற்பட வழிவகுக்க வேண்டும். அப்பொழுதுதான் தனி நபர்களின் நகாசு வேலைகளை ஓரம் கட்ட முடியும்'' என்று ஒரு தலைவர் கருதுகிறாராம்.

இவரின் கருத்துக்கு சில மூத்த தலைவர்களின் ஆசீர்வாதமும் கிடைத்திருக்கிறதாம்.

### அன்பே வா!

'பட்ஜட் சூறாவளி' ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சியைத் தோல்வியடையச் செய்தகையோடு அதிகார அம்மணியின் தரப்பினர் தம்மைப் பலப் படுத்தும் வேலையில் ஈடுபட்டிருக்கின்றனராம்.

இப்பலப்படுத்தும் பணியில் மலையகக் கட்சிகளின் மீது கனிவான பார்வை வீழ்ந்தி ருப்பதாக கூறப்படுகிறது. இதனைத் தொடர்ந்து மேதினத்தைக் கூட்டாக அட்டனில் நடத்தத் தீர்மானித்துள்ள ஆறுமுகமானவரும், முன்ன ணியின் சேகரனாரும் பல விடயங்களையிட்டு அலசுகிறார்களாம்.

பலப்படுத்தல் முயற்சிகளின் ஓர் அங்கமாக அதிகாரத்தரப்பில் இருந்து வெளியேறிய முன்னணியின் சேகரனாரையும் இழுத்துக் கொள்ள முயற்சிகள் நடக்கிறதாம். பிரதியமைச்சர் பதவிகள் பற்றிய பேரமும் நிகழ்கிறதாம்.

ஆனால் முன்னணியின் செயலரோ அது நடக்காது என்கிறார். சில வேளை காங்கிரஸ் வாதிகள் முயற்சிக்கலாம். ஆனால் எமது தலைவர் அது பற்றி இதுவரை ஒன்றும் கூறவில்லை என்றும் சொல்கிறார்.

பிரதியமைச்சர் பதவியா! மதிப்பு குறைந்து விடுமே! என்று கவலைப்படும் செயலர் முழுப்பதவிகள் என்றால் கூட அரசியல், மத்திய குழுவில் பேசித்தான் முடிவு எடுக்கமுடியும் என்றும் கூறுகிறார்.

# சனத்தின் புதிய சாதனை!


சனத்

சார்ஜாவில் நடைபெற்ற ஏர்.ஆர்.வை கிண்ணக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் போது ஒரே ஓவரில் 30 ஓட்டங்களைக் குவித்தார் சனத் ஜயசூரிய. ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் ஒரே ஓவரில் பெறப்பட்ட அதிகபட்ச ஓட்டங்கள் இவை.

1996 இல் சிங்கப்பூரில் நடைபெற்ற பாகிஸ்தானுடனான போட்டியிலும் ஒரு ஓவரில் 30 ஓட்டங்கள் பெறப்பட்டன. இதில் 29 ஓட்டங்களை சனத் பெற்றார். ஒரு ஓட்டம் 'வைட் போலுக்காக' வழங்கப்பட்டது.


ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் ஒரே ஓவரில் 25 ஓட்டங்களுக்கு மேல் அடித்த வீரர்கள் விவரம் பின்வருமாறு:

| ஓட். | துடுப்பாட்ட வீரர்கள் | பந்து வீச்சாளர் | இடம் | வருடம் |
|---|---|---|---|---|
| 30 | சனத் ஜயசூரிய(இலங்) | கிறிஸ் ஹரிஸ் (நியூஸி) | சார்ஜா | 2001 |
| 29 | சனத் ஜயசூரிய(இலங்) | அமீர் சொஹைல் (பாக்) | சிங்கப்பூர் | 1996 |
| 27 | இம்ரான் நஸீர், சயீட் அஃப்ரிடி (பாக்) | பிரட்பேர்ன் (நியூஸி) | சார்ஜா | 2001 |
| 27 | மொயின்கான், ரமீஸ் ராஜா (பாக்) | இயன் பிஷப் (மே.இ.தீ) | சார்ஜா | 1995/96 |
| 27 | சலீம் மலிக் , அஸிப் முஸ்தபா (பாக்) | முத்தையா முரளிதரன்(இலங்) | கொழும்பு | 1994/95 |
| 27 | மார்வன் அத்தபத்து, சனத் ஜயசூரிய (இலங்) | அக்ரம்கான்(பங்களா) | கொழும்பு | 1997/98 |
| 26 | ரொட்னிமார்ஸ்(அவுஸ்) | லான்ஸ் கெயான்ஸ்(நியூஸி) | அடிலெய்ட் | 1980/81 |
| 26 | லான்ஸ் கெயான்ஸ்(நியூஸி) | விநோதன் ஜோன் (இலங்) | கொழும்பு | 1983/84 |
| 26 | மார்ட்டின் குறோ, ரிச்சர்ட் ஹட்லி(நியூஸி) | கிரஹம் கூச் (இங்கி) | மஞ்செஸ்டர் | 1986 |
| 26 | மைக் கெட்டிங்(இங்கி) | ரவி சாஸ்திரி (இந்தி) | ஜலந்தர் | 1981/82 |
| 26 | இயன்பொத்தம் (இங்கி) | எஸ்.பீ. டேவிஸ் (அவுஸ்) | பேர்த் | 1986/87 |
| 26 | சயீட் அன்வர் (பாக்) | அனில் கும்ளே (இந்தி) | சென்னை | 1996/97 |
| 26 | எட்ரியன் கூப்பர் (தெ.ஆ) | கிரேக் மெக்டெமட்(அவுஸ்) | செஞ்சூரியன் | 1993/94 |
| 26 | சஹீர்கான், அஜித் அகர்கர் (இந்தி) | ஹென்றி ஒலங்கா (ஸிம்ப்) | ஜோத்பூர் | 2000/01 |

# டைகர், கோல்ஃப் புலி

கோல்ஃப் விளையாட்டில் புதிய சாதனை படைத்துள்ளார் அமெரிக்க வீரர் டைகர் வூட்ஸ்.

கோல்ஃப் உலகில் பிரதான போட்டிகளாகக் கருதப்படுபவை மாஸ்டர்ஸ், அமெரிக்க ஓபன், பிரிட்டிஸ் ஓபன், பி.ஜி.ஏ சாம்பியன்ஷிப் ஆகியனவாகும்.


டைகர் வூட்ஸ்

கடந்த வருடம் ஜூன் 18இல் அமெரிக்க ஓபன் கிண்ணத்தையும் ஜூலை 23இல் பிரிட்டிஷ் ஓபன் கிண்ணத்தையும் ஆகஸ்ட் 20 அன்று பி.ஜி.ஏ. சாம்பியன்ஷிப் போட்டியில் வானாமேக்கர் கிண்ணத்தையும் வென்றார் வூட்ஸ்.

கடந்த ஏப்ரல் 9ஆம் திகதி ஆகஸ்டா நகரில் நடந்த மாஸ்டர்ஸ் சாம்பியன்ஷிப் போட்டியிலும் இவர் சாம்பியனானார்.

இதன் மூலம் ஒரே சமயத்தில் இந்நான்கு போட்டிகளிலும் சாம்பியனாக விளங்கும் சாதனையைப் படைத்துள்ளார் டைகர் வூட்ஸ். இச்சாதனையைப் படைத்துள்ள ஒரே வீரர் இவரே.

1953இல் ஹோகன் மாஸ்டர்ஸ், அமெரிக்க ஓபன், பிரிட்டிஷ் ஓபன் ஆகிய மூன்று போட்டிகளிலும் ஒரே சமயத்தில் சாம்பியனாக விளங்கினார். ஆனாலும் பி.ஜி.ஏ போட்டிகளில் அச்சமயம் சாம்பியனாக முடியாமல் போய்விட்டது.

டைகருக்கு முன்னர் வெவ்வேறு காலத்திலாவது இந்நான்கு போட்டிகளில் சாம்பியனான பெருமையை நிக்கலஸ், ஹோகன், கெரி பிளேயர், ஜீன் சராஸன் ஆகிய நால்வர் மாத்திரமே கொண்டிருந்தனர்.

1975.12.30இல் கலிபோர்ணியாவிலுள்ள சைப்பிரஸில் பிறந்தவர் டைகர் வூட்ஸ். இவரின் தந்தை ஏர்ல் வூட்ஸ் முன்னாள் இராணுவ அதிகாரி. தாயார் தாய்லாந்தைச் சேர்ந்த கல்டிடா.

தந்தையார் கோல்ஃப் விளையாடுவதைப் பார்த்து டைகருக்கும் 6 மாதத்திலேயே கோல்ஃபில் ஆர்வம் வந்துவிட்டதாம். 2 வயதில் சிறுவர்களுக்கான போட்டிகளில் விளையாடத் தொடங்கிவிட்டார்.

1996இல் 'கிரான்ஸ்லாம்' போட்டிகளில் விளையாட ஆரம்பித்தார். போட்டிகளின் மூலம் மாத்திரம் இதுவரை 2.8 கோடி டொலர்களை சம்பாதித்துள்ளார்.

அமெரிக்காவின் ஸ்டன்போர்ட் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்றவர் டைகர். ஆனாலும் பட்டப்படிப்பைப் பூர்த்திசெய்யவில்லை. எனினும் தாய்லாந்தின் கெஸட்சாட் பல்கலைக்கழகம் அண்மையில் இவருக்கு கௌரவ டாக்டர் பட்டமளித்து கௌரவித்தது.

கோல்ஃப் விளையாட்டில் பிறருக்குச் சொந்தமாகவுள்ள பல சாதனைகளை எதிர் காலத்தில் டைகர் வூட்ஸ் முறியடிப்பார் என விமர்சகர்கள் நம்புகின்றனர்.

# கால்பந்தாட்ட உலகில் சாதனையும் வேதனையும்

கால்பந்தாட்ட உலகில் சாதனை மிக்க நிகழ்வொன்றும் வேதனை மிக்க நிகழ்வொன்றும் அண்மையில் இடம்பெற்றன.

தென்னாபிரிக்காவின் ஜொஹன்னர்ஸ்பேர்க்கில் கடந்த


கால்பந்தாட்ட அரங்கில் நடந்த அனர்த்தத்தில் இறந்தவர்களின் உடல்கள் அடையாளம் காண்பதற்காக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

12ஆம் திகதி இடம்பெற்ற கால்பந்தாட்டப் போட்டியின்போது சன நெரிசலில் சிக்கி 47 ரசிகர்கள் இறந்துள்ளனர். மேலும் நூற்றுக்கும் அதிகமானோர் கடும் காயங்களுக்குள்ளானார்கள்.

ஓர்லான்டோ பைரேட்ஸ், கெய்ஸர் சீப்ஸ் ஆகிய அணிகளுக்கிடையிலான பிரீமியர் லீக் கால்பந்தாட்டப் போட்டியொன்றின் போதே இச்சம்பவம் இடம்பெற்றது. இவ்விரு அணிகளும் வழமையாகவே பெருந்திரளான ரசிகர்களை ஈர்ப்பனவாகும்.

இப்போட்டியின்போது அளவுக்கு அதிகமான ரசிகர்கள் அரங்கிற்கு அனுமதிக்கப்பட்டமையே இவ் அனர்த்தத்திற்குக் காரணமாகியது.

68,000 பார்வையாளர்களுக்கே இடவசதியுள்ள இவ்வரங்கில் 120,000 பேர் அனுமதிக்கப்பட்டிருந்தனர் எனவும் சுமார் 60,000 நுழைவுச் சீட்டுகள் மேலதிகமாக விற்பனை செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

2006 ஆண்டு உலகக் கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டியை நடத்த தென்னாபிரிக்கா விரும்பியிருந்தது. எனினும் கடந்த வருடம் இடம்பெற்ற வாக்கெடுப்பில் ஜேர்மனியிடம் 2 வாக்குகளால் தோல்வியுற்றது.

தற்போது 2010ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியையாவது தனது நாட்டில் நடத்த தென்னாபிரிக்கா முயற்சித்து வருகிறது. அதற்கு இத்தகைய அனர்த்தங்கள் பாதிப்பை ஏற்படுத்தலாம் என அஞ்சப்படுகிறது.

## ஆஸியின் சாதனை

இதேவேளை அவுஸ்திரேலிய அணி உலகக்கிண்ணத் தகுதி காண் போட்டியொன்றில் அமெரிக்கன் சமோவா அணியை 31-0 கோல்களால் வெற்றி கொண்டுள்ளது. இது ஒரு உலக சாதனையாகும்.

இதற்கு முந்தைய உலக சாதனையான 22-0 வெற்றியையும் கடந்த 9ஆம் திகதி டொங்கோ அணிக்கெதிரான போட்டியில் அவுஸ்திரேலியாவே பெற்றிருந்தது.

கடந்த 12ஆம் திகதி நடைபெற்ற சமோவா அணியுடனான போட்டியின் போது ஆஸி வீரர் ஆர்ச்சி தொம்ப்ஸன் 13 கோல்களை அடித்து மற்றொரு சாதனை புரிந்தார்.

1908 இல் நடைபெற்ற பிரான்ஸ் 'பி' அணியுடனான போட்டியில் டென்மார்க் வீரர் ஸோபஸ் நீல்ஸன் 10 கோல்களை அடித்திருந்ததே சர்வதேச கால்பந்தாட்டத்தில் முந்தைய சாதனையாகும். (இப் போட்டியில் டென்மார்க் 17-1 விகிதத்தில் வென்றது)

ஆஸி அணி கால்பந்தாட்ட தர வரிசையில் 75ஆவது இடத்தையும் சமோவா 203ஆவது இடத்தையும் (இறுதி இடம்) வகிக்கின்றன.

இப்போட்டியில் 32 கோல்கள் அடிக்கப்பட்டதாகவே முதலில் செய்தி வெளியானது. சர்வதேச கால்பந்தாட்டச் சங்கங்களின் சம்மேளனம் இதை உடனடியாக உறுதி செய்ய மறுத்தது.

பின்னர் ஆஸி அதிகாரி ஒருவர் 31 கோல்களே அடிக்கப்பட்டதாகக் கூறினார். போட்டியின் இறுதி நிமிடங்களில் பெருமளவு கோல்கள் அடிக்கப்பட்டமையே கோல் எண்ணிக்கை பற்றிய குழப்பத்திற்குக் காரணமாகியது.

# சார்ஜாவுக்குப் பின் முரளி இங்கிலாந்து பயணம்


முரளி

இலங்கையின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் , இவ்வருடம் இங்கிலாந்தின் லங்கேஷியர் அணி சார்பில் போட்டிகளில் பங்குபற்றவுள்ளார்.

இதற்காக சார்ஜாவிலிருந்து நாடு திரும்பியதன் பின்னர் இரண்டொரு தினங்களில் அவர் இங்கிலாந்துக்குப் புறப்படவுள்ளார் .

எனினும் எதிர்வரும் ஜூலை மாதம் முரளி மீண்டும் இலங்கை திரும்புவார். ஜூலை - ஆகஸ்ட் மாதங்களில் இலங்கை அணி ஒருநாள் முக்கோண சுற்றுப் போட்டி மற்றும் இந்தியாவுடனான டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றவிருப்பதே இதற்கான காரணம்.

லங்கேஷியர் அணிக்காக முரளி விளையாடுவது இது இரண்டாவது தடவையாகும். 1999இல் 6 போட்டிகளில் மாத்திரமே பங்குபற்றி 66 விக்கட்டுகளை வீழ்த்தியிருந்தார் முரளி.

**விளையாட்டுச் செய்திகள்!**
-ஆர். சேதுராமன்

# ஒலிம்பிக் பதக்கம் விற்பனைக்கு!

1968ஆம் வருடம் மெக்ஸிக்கோவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் 200 மீற்றர் ஓட்டத்தில் தங்கப் பதக்கம் வென்றவர் டொம்மி ஸ்மித். இப்போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றவர் ஜோன் கார்லோஸ். இருவரும் கறுப்பின அமெரிக்கர்கள்.

நிறவெறி உச்சத்திலிருந்த அக்காலத்தில் அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக பதக்கம் அணிவிக்கப்படும்போது தாம் அணிந்திருந்த கறுப்புநிறக் கையுறை களை உயர்த்திக் காட்டினார்கள் இருவரும்.

இச்சம்பவத்தையடுத்து ஸ்மித், கார்லோஸ் இருவரும் அமெரிக்க அணியிலிருந்து நீக்கப்பட்டதுடன் மெக்ஸிக்கோவிலிருந்து 48 மணித்தியாலத்திற்குள் வெளியேறுமாறும் உத்தரவிடப்பட்டனர்.

இது ஒலிம்பிக் சரித்திரத்தில் மறக்க முடியாத ஒரு சம்பவமாகும்.

1968இல் தாம் வென்ற தங்கப் பதக்கத்தை தற்போது ஏலத்தில் விற்பனை செய்யத் திட்டமிட்டுள்ளார் டொம்மி ஸ்மித்.

இன்டர்நெட் மூலம் இதற்கான அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. கடந்த செப்டெம்பர் மாதம் விலைக்கோரல் ஆரம்பிக்கப்பட்டது. ஒலிம்பிக் தங்கப் பதக்கம் தவிர சில புகைப்படங்கள், 1968 அமெரிக்க தடகளப் போட்டிகளின் போது ஸ்மித் அணிந்திருந்த சீருடை, பதக்கம் அணிவிக்கப்படும் போது இடது கையில் அணிந்திருந்த ஒலிவ் கிளை உட்பட 20 பொருட்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.


1968 மெக்ஸிக்கோ சிட்டி ஒலிம்பிக் 200 மீற்றர் ஓட்டத்தின் போது எடுக்கப்பட்ட படத்தில் டொம்மி ஸ்மித் (307), ஜோன் கார்லோஸ் (259), ஜமைக்காவின் மைக்கல் ஃபிரே (533) ஆகியோர் காணப்படுகின்றனர்.

ஆனால் இப்பட்டியலில் ஸ்மித்துக்கு அதிக பிரபல்யத்தைத் தேடித் தந்த கறுப்புக் கையுறை ஜோடி இடம் பெறவில்லை. "அது எங்கேயுள்ளது எனத் தெரியவில்லை. கையுறை பற்றியல்ல எமது வாழ்க்கையைப் பற்றியே நாம் கரிசனை கொண்டுள்ளோம்" என்கிறார் ஸ்மித்.

இப்பொருட்களை விற்பதன் மூலம் 663,000 டொலர்களுக்கு மேல் கிடைக்கும் என நம்புகிறார் ஸ்மித். தங்கப் பதக்கத்திற்கு 5 லட்சம் டொலர்களை எதிர்பார்க்கிறார்.

இப்பணத்தில் பெரும் பகுதியை இளைஞர் நிதியமொன்றுக்கு வழங்க விரும்புவதாகக் கூறுகிறார் ஸ்மித்.

கடந்த 23 வருடங்களாக சாந்த மோனிக்கா கல்லூரியின் தடகளப் பயிற்றுநராகக் கடமையாற்றினார் ஸ்மித் . தற்போது அவருக்கு 56 வயதாகிறது.

# ராசி பலன்

**22.04.2001 முதல் 28.04.2001 வரை**
**பொ.சந்திரன்.**

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை1.**

இராசிநாதன் கேதுவோடு கூடினாலும் நல்ல இடத்தில் இருப்பது ஆறுதல். மேலும் வலுவான சூரியனுடன் புதன் சேர்ந்து இராசியில் இருப்பது நல்ல அம்சம். பேர், புகழ், மதிப்பு உயரும். கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி இருக்கும். வீடு, வாகனம் எதிர்பார்த்த இலாபம் இல்லை. உற்றார், உறவினர் விசுவாசமாக இருக்க மாட்டார்கள். மனம் ஒரு நிலையில் நிற்க முற்படும். அறிவின் சொற்கேட்டு நல்ல எண்ணங்கள் உதயமாகும். உலகியல் இன்பத்திலும் நாட்டம் இருக்கும். எதிரியின் அகோரப் பார்வை குறைந்து சமரசப் போக்கு தென்படும். குடும்ப சுகம் தாராளம். அமைதி இருக்கும். நல்ல புரிந்து ணர்வு இருக்கும். காதலர்களின் பரிசுத்த உணர்வோடு இதயங்கள் சங்கமிக்கும். தொழில் முன்னேற்றம் உண்டு.

**இடபம் : கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிடம் 1,2.**

இராசிநாதன் வலுவாக இருப்பது விசேஷம் இராசியில் குருவும், சனியும் இருப்பது அவ்வளவு நல்லதல்ல. மேலும் ராகுவும், சூரியனும் இருபக்கமும் இருப்பதும் சங்கடமே. பொருளாதாரம் தடைப்படலாம். கல்வியில் குறைந்த அளவு ஆர்வம் இருக்கும். சகோதர உதவி திருப்திகரமானதாக இருக்காது. வீடு, வாகனங்களால் மத்திமமான பலனே இருக்கும். உற்றார் உறவினர் விசுவாசமாக இருப்பர். மனம் பூரண அமைதியாய் இருக்க விரும்பும். பெரும்பாலும் அப்படியே இருக்கும். சில சமயம் உலகப் பற்று மன அமைதியைக் குலைக்கலாம். உங்களுக்கு வேறுயாரும் எதிரி இல்லை. நீங்களே உங்களுக்கு சில சமயம் எதிரியாகலாம். குடும்ப உறவு பாதிக்க வாய்ப்புண்டு. காலம் பிந்திய புரிந்துணர்வால் அமைதி குலையலாம். காதலர்களின் உறவு உதட்டளவிலே தான். தொழில் துறையில் முன்னேற் றம் உண்டு.

**மிதுனம் : மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

இராசிநாதன் இலாபத்தானத்தில் சூரியனோடு இருப்பது விசேஷம். பாம்புகளின் தொடர்பும் செவ்வாய், சூரியனின் பார்வையும் நல்லதல்ல. பணத்தட்டுப்பாடு வரலாம். கல்வியில் ஆர்வம் குன்றலாம். சகோதர உதவியுண்டு. வீடு, வாகனம் இலாபம் தரும். சொந்தக்காரர் விசுவாசமாக இருப்பர். மனம் சந்தோஷமாக இருக்க முயலும். உலகப் பற்று கூடுதலாக இருக்கும். நல்ல எண்ணங்கள் உதயமாகும். எதிரி வலுவாக இருப்பதால் அவதானமாக நடக்கவேண்டும். குடும்ப உறவு திருப்திகரமாக இராது. மனக்கசப்பு உருவாகலாம். காதலர் வாழ்விலும் தடங்கல்கள் ஏற்படலாம். தேக ஆரோக்கியம் நன்று. தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. புதிய தொழில் தொடங்கலாம். பிரயாண வாய்ப்புண்டு.

**கடகம் : புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

இராசி சுத்தமாக இருந்தாலும் செவ்வாய், சனி ஆகியோரின் பார்வை அவ்வளவு நல்லதல்ல. இராசிநாதனின் சஞ்சாரம் நன்மையளிக்கும். கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும். சொந்தக்காரர் விசுவாசமாக இருப்பர். மன அமைதி இராது. மனம் எதிர்மறையாக சிந்திக்கும். மனத்தின்படி செயற்பட்டால் அவலம். எதிரியின் செயற்பாட்டில் மாற்றம் உண்டு. நண்பராகும் அறிகுறி தென்படுகிறது. குடும்பத்தில் அமைதி நிலவும். சுகம் உண்டு. பரஸ்பரம், புரிந்துணர்வு இருக்கும். காதலர் வாழ்வு அன்புமயம் களைகட்டும். தேக ஆரோக்கியம் நன்று. தொழில்துறை முன்னேறும். பதவி உயர்வு உண்டு. பிரயாண வாய்ப்பு பிரகாஷமாகும்.

**சிங்கம் : மகம், பூரம், உத்தரம்1.**

இராசிநாதன் புதனோடு கூடி பாக்கியஸ்தானத்தில் உச்சமடைந்து இருப்பது விசேஷம். மேலும் வலுவான சுக்கிரனின் பார்வை கிடைப்பது யோகம். கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி இருக்கும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தும். உற்றார் உறவினர் அன்பாய் இருப்பர். மனம் சமநிலையில் இராது. ஒரு தடவை யதார்த்தமாகவும் மறுதடவை கற்பனைச் சுகத்திலும் ஈடுபடும். எதிரி பலவீனமடைவதால் நீங்கள் ஆறுதல் அடையலாம். குடும்பத்தில் சண்டையும் இல்லை சமாதானமும் இல்லை. உப்புச் சப்பில்லாமல் இருக்கும். காதல் வாழ்வு நிலை கொள்ளும். தேக ஆரோக்கியம் சிறிது பாதிக்கலாம். தொழில் துறையில் போட்டி நிலவும். பிரயாண வாய்ப்புண்டு.

**கன்னி : உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை 1,2.**

இராசிக்கு சுக்கிரனின் பார்வையும், குருவின் பார்வையும் கிடைப்பது விசேஷம். இராசிநாதன் சூரியனுடன் சேர்ந்து இருப்பது நலம். கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும். சொந்தக்காரர் அன்பு பாராட்டுவர். மனம் நல்ல நிலையில் இருந்தாலும் இடையில் கீழ் நிலையில் சிந்தனை ஓடும். மன அமைதி குன்றலாம். எதிரி வலுவாக இருந் தாலும் உங்கள் பலம் அதிகம். பயம் இல்லை. குடும்ப சுகம் உண்டு. அமைதியுண்டு. காதல் வாழ்வு பரிசுத்தம், இதய அன்பு டன் செயற்படுவர். தொழில் துறையில் வளர்ச்சி இருக்கும். வெளிநாட்டுப் பிரயாண வாய்ப்புண்டு.

**துலாம்: சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3.**

இராசிநாதன் பகைவீடானாலும் உச்சமாக இருப்பது நலம். சூரியன், புதன் ஆகியோரின் பார்வை நலம். தட்டுப்பாட்டுடன் கூடிய பணப் புழக்கம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதரங்களுக்கிடையில் மனஸ் தாபம் வரலாம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தும். சொந்தக்காரர் ஒடும்புளியம் பழமும் போல இருப்பர். மனப் போராட்டம் இருக்கும். மனம் எதிர்மறையாகச் செயற்படும். வீண் கற்பனையில் கால விரயம் ஏற்படும். எதிரி பலவீனமாக இருப்பதால் மன்னிக்கும் குணம் உங்களுக்கு வரலாம். குடும்ப உறவு சீராக இருக்கும். அமைதி உண்டு. காதலர் தூய அன்பைப் பரிமாறுவார்கள். தேக ஆரோக்கியம் நன்று. தொழில்துறையில் முன்னேற்றம் உண்டு. பதவி உயர்வு உண்டு.

**விருச்சிகம்: விசாகம் 4, அனுஷம், கேட்டை.**

இராசிநாதன் பண பரஸ்தானத்தில் இராசிக்கு குருவின் பார்வையும் சனியின் பார்வையும் கிடைப்பது சமசுகம். கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும். சொந்தக்காரர் உதவியாய் இருப்பர். மன அமைதி இருக்கும். இடையிடையே வீண்சிந்தனை வந்து குழப்பும். நல்ல எண்ணங்கள் உதயமாகும். எதிரியின் தொல்லை இருக்கும். அவதானமாக நடந்து கொள்ள வேண்டும். குடும்ப உறவு திருப்திகரமானதாக இருக்கும். இடையில் சச்சரவு வரவாய்ப்புண்டு. காதல் வாழ்வு திருப்தி கரமானதாக இருக்கும். தேக சுகம் நன்று. தொழில் செய்யும் இடத்தில் தொல்லை ஏற்பட இடம் உண்டு.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

இராசிநாதன் சனியோடு கூடுவதால் பகை ஸ்தானத்தில் நல்லதல்ல. மேலும் பாம்புகளின் தொடர்பு இராசிக்கு, இதுவும் சங்கடம் தான். பணப்பற்றாக்குறை இருக்கும். கல்வியில் ஆர்வம் குன்றலாம். சகோதரங்கள் எதிர்வாதம் புரிய இடம் உண்டு. வீடு, வாகனங்களால் மத்திம பலனே. உற்றார், உறவினர் கண்டும் காணாது போல் இருப்பர். மனத்தடுமாற்றம் இருக்கும். ஆனால் நல்ல எண்ணங்கள் உதயமாகலாம். எதிரி பலமாக இருப்பதால் அவதானமாக நடக்கவும். குடும்பத்தில் எச்சரிக்கையுடன் கூடிய அமைதி இருக்கும். காதல் வாழ்வு தடை தாண்டி முன்னேறும். தேக சுகம் பாதிக்கலாம். தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு.

**மகரம்: உத்தராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2**

இராசிநாதன் புண்ணியஸ்தானத்தில் குருவோடு இருப்பது நல்ல அம்சம். சூரியனின் பார்வையும் குருவினதும் பார்வையும் பெறுவது நல்ல அம்சம். கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி இருக்கும். வீடு, வாகனம் செலவை உண் டாக்கும். உற்றார், உறவினர் அன்பாய் இருப்பர். மனம் பலவித சிந்தனைகளால் குழம்பி இருக்கும். யதார்த்த நிலைக்கு வருவது தாமதமாகும். எதிரியின் பலம் அதிகம். நிதானமாக நடக்க வேண்டும். குடும்ப உறவு பாதிப்படைய வாய்ப்புண்டு விரோதப் போக்கு தென் படும். காதலர் வாழ்விலும் தடைவர வாய்ப்புண்டு. தேக ஆரோக்கியம் நன்று. தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. பதவி உயர்வு உண்டு.

**கும்பம்: அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3.**

இராசிநாதன் குருவோடு சேர்ந்து சுபஸ்தானத் தில் இருப்பது நலம். மேலும் இராசிநாதன் இராசியை நோக்குவது புதுப்பலம் பெறும் நிலையாகும். கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும். சொந்தக் காரர் விசுவாசமாக இருப்பர். மனப் போராட்டம் இருக்கும். மனச் சஞ்சலம் இருக்கும். வீண் கற்பனையில் வாழ மனம் முற்படும். எதிரி கஷ்டத்தில் மாட்டி இருப்பதால் நீங்கள் ஆறுதல் அடையலாம். குடும்ப அமைதியுண்டு. சுகம் உண்டு. காதல் வாழ்வு பரிசுத்தமாக இருக்கும். தேக ஆராக் கியம் நன்று. தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு.

**மீனம்: பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.**

இராசிநாதன் சனியோடு கூடி பலவீனமாக இருப்பது நல்லதல்ல. ஆனால் இராசியில் சுக்கிரன் வலுவாக இருப்பதும் பரிவர்த்தனை அடைவதும் விசேஷம். கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும். மன அமைதி குன்றலாம். வீண் கற்பனையில் மனம் சுகம் காணும். எதிரி மிகப் பலமாக இருப்பதால் மிக அவதானமாக, நடந்து கொள்ளவும். குடும்ப வாழ்வு அமைதியில் இருக்கும். சந்தோஷம் இருக்கும். காதல் வாழ்வு தூய அன்புள்ளதாக இருக்கும். தேக ஆரோக்கியம் சிறிது பாதிக்கலாம். தொழில்துறையில் பலத்த போட்டி நிலவும். சில பின்னடைவுகளும் வர வாய்ப்புண்டு.

---

''என்ர மனிசி மேல கோவம் வந்தால் என்ன செய்வன் தெரியுமா?''

''அடிச்சுக் கிடிச்சுப் போடுவியளோ?''

அதுதான் இல்லை! பேசாமல் அந்த இடத்தை விட்டு ஓடிப் போயிடுவேன்!''



''உங்களுக்குத் தான் பல்லிலை ஒரு பிரச்சினையும் இல்லையே! பிறகு ஏன் பல்லுப் புடுங்கவெண்டு வந்தனியள்?''

''ஒவ்வொரு நாளும் பல்லு விளக்கப் பஞ்சியாயிருக்கு டொக்டர்!''



---

# பூச்சிகளைக் கவர்ந்திழுக்கும் மகரந்தப் பூக்களின் தந்திரம்

தோட்டத்தில் ஜிவ்வென்று பறக்கும் பட்டாம் பூச்சி களையும் வண்ணத்துப் பூச்சி களையும் நன்றாகக் கவனித் தால் ஒன்று தெளிவாகத் தெரியும். அவை தோட்டத்தில் உள்ள மலர்ச் செடிகளில் சிறிது நேரம் உட்காரும். பின்னர் சிறிது நேரம் கழித்து வேறு ஒரு செடியில் போய் அமரும்.

இந்தப் பூச்சியினங்கள் மலர்களில் தேன் குடிப்பதோடு அவற்றின் மகரந்தச் சேர்க்கைக்கும் உதவிபுரிகின்றன. தாவரங்களின் இனவிருத்திக்கு மகரந்தச் சேர்க்கை மிக அவசியம்.

ஹனிபீ பூக்களில் தேன் உண்டு. தன்னிடம் தேன் இருப்பதைப் பூச்சிகளுக்கு உணர்த்தும் வண்ணம் தேன் காட்டிகளாய் சிறப்புத் தன்மையைப் பெற்றிருக்கும். சிறு பூச்சிகளும் வண்டுகளும் வந்து அமர்வதற்கு ஏற்ப பரந்த பரப்பை உடையதாய் இவ்வகைப் பூக்களின் இதழ்கள் விரிந்திருக்கும். நிறைய மகரந்தப் பொடிகள் கொண்டதாய்த் திகழும். இவ்வகைப் பூக்கள் தேனீக்களுக்குப் பிடித்த நீலம், ஊதா, மஞ்சள் நிறம் கொண்டு திகழ்கின்றன. இவ்வகைப் பூக்களை தேனீக்கள் அதிகம் விரும்புவதால் இவற்றை ஹனிபீ ப்ளவர்ஸ் என்கிறார்கள்.

மவுத் வகைப் பூக்கள் : இரவில் நடமாடும் பூச்சிகளுக்குத் தெரியும் வகையில் வெள்ளை நிறத்தில் மலர்ந்து காணப்படுகின்றன. இந்த வெள்ளை நிறப்பூக்கள் அதிக மணத்தையும், பெருமளவு தேனையும் தன்னகத்தே கொண்டு இரவுப் பூச்சிகளைத் தன்பால் கவர்வதுண்டாம்.

கேரியன் ப்ளவர்ஸ் : பூ, ஈ பூக்கள் என வகைப்படுத்தப்பட்டு உள்ளன. ஈக்களை அதிகம் கவர்ந்திழுப்பதற்காக ஒரு வித மாமிச வாடையுடன் இப்பூக்கள் திகழ்கின்றன.

வண்ணத்துப் பூச்சி மலர்கள் : சிவந்த நிற இதழ்களுடன் தேனீக்களுக்கு உகந்த வகையில் மலர்ந்து மணம் பரப்புகின்றன. இம்மலர்களின் தேன் ஆழத்தில் அமைந்துள்ளது. இருப்பினும் இவ்வகைப் பூக்களில் தேன் பருக வண்ணத்துப் பூச்சிகள் தயங்குவதில்லை!

வேஸ்ப் ப்ளவர்ஸ் :வண்டுகள் விரும் பும் பூக்கள், வண்டுகளினால் அதிகம் உதவி பெறாவிட்டாலும் அவற்றின் மூலம் சிறிதளவேனும் மகரந்தச் சேர்க்கையை நடத்திக் கொள்கின்றனவாம்.

---

# தண்ணீரில் மிதந்தபடி 30 யோகக் கலைகள்



தண்ணீரில் மிதந்தபடி சயனத்தில் ஆழ்ந்து விடும் வித்தை எல்லோருக்கும் வந்து விடாது. யோகாசனக் கலையில் வல்லமையுடையவர்களுக்கே இந்த வித்தையைப் புரியும் ஆற்றல் இருக்கிறது.

இந்தியாவில் பெங்களூர் நகரில் புகழ் பெற்ற யோகக்கலை நிபுணர் ஜி.ஆர். பிரசாத் குருஜி முகாமிட்டிருக்கிறார். அண்மையில் குருஜி பெங்களூர் படேல் ஹோட்டலிலுள்ள நீச்சல் குளத்தில் பத்மாசனம் போட்டு 45 நிமிடங்கள் தண்ணீரில் மிதந்தார். அது மாத்திரமல்ல தண்ணீரில் மிதந்தபடி அவர் 30 யோகாசன வித்தைகளையும் செய்து காட்டினார்.

தண்ணீரில் மிதந்தபடி பத்மாசனம் போட் டிருக்கும் பிரசாத் குருஜியின் வித்தையைப் பெண்கள் ஆர்வத்துடன் நோக்குகிறார்கள்.

# ரம்பொடை அனுமர் கோயில் மகா கும்பாபிஷேகக் காட்சிகள்



சுவாமி சின்மயானந்தாவின் சித்தப்படி உலக சின்மயமிஷன் ஆதரவில் இலங்கை சின்மயமிஷன் ரம்பொடையில் ஸ்ரீபக்த அனுமன் ஆலயத்தை நிர்மாணித்து கடந்த 8ஆம் திகதி ஆலய கும்பாபிஷேகத்தையும்நடத்தி வைத்தது.

அடியார்கள் கூட்டம் அங்கு அலை மோதியது. கும்பாபிஷேகப் படங்கள் சிலவற்றை இங்கே காண்கிறீர்கள்.

1. மூலஸ்தான மூர்த்திக்குக் கும்ப அபிஷேகம் நடக்கிறது.

2. அபிஷேகத்தின் பின்னர் மூலவருக்குப் பஞ்சாராத்தி.

3. கும்பாபிஷேக மலரை உலக சின்மய மிஷன் தலைவர் சுவாமி தேஜோமயானந்தா வெளியிட்டு வைக்கிறார். மலர் ஆசிரியர் சோமகாந்தன் அடுக்கி வைக்கப்பட்ட மலர்ப் பிரதிகளுடன் பக்திப் பரவசமாக நிற்கிறார்.

4. இலங்கை சின்மயமிஷன் தலைவர் தெ.ஈஸ்வரன் உரை நிகழ்த்துகிறார். சுவாமி தேஜோமயானந்தாவுடன் இந்தியாவிலிருந்து வருகை தந்த மற்றும் சுவாமிகளும், இலங்கை ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் தலைவர் சுவாமி ஆத்மகணானந்தஜீயும் மத்திய மாகாணக் கல்வி அமைச்சர் வி. இராதாகிருஷ்ணனும் மேடையில் அமர்ந்திருக்கின்றனர்.

5. கும்பாபிஷேகத்துக்குத் திரண்டிருந்த பக்தகோடிகளில் ஒரு பகுதியினர்.









# கொழும்பு இந்துக்கல்லூரி இல்ல விளையாட்டுப் போட்டிகள்

கொழும்பு இந்துக்கல்லூரியின் கனிஷ்ட பிரிவு மாணவர்களுக்கிடையிலான இல்ல விளையாட்டுப் போட்டிகள் கடந்த 7ஆம் திகதி கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

கல்லூரி அதிபர் த .முத்துக்குமாரசுவாமி இவ்விளையாட்டு விழாவுக்கு தலைமை வகித்தார். நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ், லான்ட்மார்க் என்டர் பிரைசஸ் நிறுவனங்களின் நிர்வாக இயக்குனர் ஈ.சரவணபவன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

மாலை 2.15 மணியளவில் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகியவுடன் மழையும் தொடங்கியது. சில நிகழ்ச்சிகள் மழைத்தூறலிலேயே நடைபெற்றன. இதனால் ஓட்டப்போட்டிகளில் பங்கேற்ற சில மாணவர்கள் வழுக்கி விழவும் நேரிட்டது.

அதிபர் தனது உரையில் இவ் விடயத்தையும் குறிப்பிட்டுப் பேசத் தவறவில்லை.



அணி நடை

"சாதாரண மழையிலேயே இம் மைதானத்தில் நீர் தேங்கி விடுகிறது. பெரும் மழை பெய்தால் மைதானத்தில் மீன் பிடிக்கக் கூடிய நிலை ஏற்பட்டுவிடும். அதனால் இம்மைதானத்தை உடனடியாகப் புனரமைக்க வேண்டியுள்ளது. அடுத்த வருடம் இல்ல விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும்போது இம்மைதானம் நவீன மைதானமாகத் திகழ்வதற்கு உரிய நடவடிக்கைகளை பழைய மாணவர் சங்கம் மேற்கொண்டுள்ளது. இதற்குப் பெற்றோர்களும் உறுதுணையாக இருக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்" என அவர் கூறினார்.

பிரதம அதிதி ஈ.சரவணபவன் பேசுகையில் ; எல்லாத் துறைகளிலும் கல்லூரி கண்ட பெரு வளர்ச்சியை எடுத்துக்கூறி கல்லூரியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

மாணவர்கள் கல்வி, விளையாட்டு, ஒழுக்கம் முதலானவற்றில் சிறந்து விளங்கினால் மட்டும் போதாது. அவர்கள் தம்மைப் பெற்றவர்களுக்கும் தாம் பிறந்து தவழ்ந்த மண்ணுக்கும் பெருமை தேடித்தருபவர்களாகவும் திகழ வேண்டும். நாளைய தலைவர்களாக வந்து நாட்டை வழி நடத்துபவர்களாகவும் வளர வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் ஆளுமையும், அஞ்சாமையும், நெஞ்சுரமும் கொண்ட இளம் தலைவர்கள் அவசியம் தேவை. பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி அவர்களைத் தந்து உதவ வேண்டும் என்று திரு. சரவணபவன் கேட்டுக் கொண்டார்.

விளையாட்டுப் போட்டிகளில் 168 புள்ளிகளைப்பெற்று இளங்கோ இல்லம் சாம்பியனானது. வள்ளுவர் இல்லம் 134.5 புள்ளிகளையும், கம்பர் இல்லம் 130 புள்ளிகளையும் பாரதி இல்லம் 128 புள்ளிகளையும் பெற்றன.



ஒலிம்பிக் தீபம் ஏற்றுதல்

# சாதனைப் பெண் இந்திரா!



''பிட்ஸ்பார்க்கில் உள்ள வெங்கடாசலபதியை ஒரு தடவை பார்த்துவிட்டு வரவேண்டும்'' என்றால் நிறுவனத்தின் விசேட விமானம் சீறிக் கொண்டு கிளம்புகின்றது. அவர் விரலசைத்தால் ''பெப்ஸிகோ'' நிறுவனம் புதிய முதலீடுகளில் கோடி கோடியாக டொலர்களைக் கொட்டுகிறது.



இத்தனை பெருமைக்கும் சொந்தக்காரர் ஒரு பெண். அதிலும் நம் அயல் நாடான இந்தியாவைச் சேர்ந்தவர் என்றால் நீங்கள் நம்புவீர்களா...?

அமெரிக்காவில் உள்ள ''பெப்ஸி'' குளிர்பானம் அடங்கிய பெப்ஸிகோ நிறுவனத்தின் தலைமை நிதி அதிகாரியாக உள்ள 44 வயதான இந்திரா நூயி என்ற இந்தியப் பெண் வெகு விரைவில் இந் நிறுவனத்தின் தலைவியாகப் பொறுப்பேற்க உள்ளார்.

23 வயதில் ஒரு சாதாரண மாணவியாக சென்னையிலிருந்து அமெரிக்காவுக்குச் சென்ற இந்திரா தனது படிப்புச் செலவுக்காக பகுதி நேர வேலை பார்த்துப் படிப்படியாக முன்னேறி இன்று பிரபல FORTUNE பத்திரிகையில் உலகில் மிகச் சக்தி வாய்ந்த 50 பெண்கள் பட்டியலில் பதிவாகியிருக்கிறார்.

''எங்கள் நிறுவனம் எடுத்த வெற்றிகரமான முடிவுகளிலெல்லாம் இந்திராவின் மூளை இருக்கிறது'' என்று கூறுகிறார் இவரது நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியான ரோஜர் என்ரிகோ.

''இந்த நிலையைத் தான் அடைவதற்குக் கடவுள் அருள், கடுமையான உழைப்பு, பெரியவர்களின் ஆசீர்வாதம் என்ற மூன்றுமே காரணம்'' என்று சொல்கிறார் இந்திரா!

தினமும் பதினெட்டு மணி நேரம் தனது நிறுவனத்தின் வளர்ச்சிக்காகச் செலவிடுகிறார் இந்திரா, அதற்காக குடும்பத் தலைவி என்கிற அந்தஸ்தை அவர் விட்டுக் கொடுத்ததில்லை. எஞ்சிய நேரத்தில் கணவரையும் 17 வயதிலும், 7 வயதிலும் உள்ள இரு பிள்ளைகளையும் அரவணைத்துச் செல்லும் ஈடு இணையில்லாப் பெண்மணியாக அவர் திகழ்கிறார்.

''பெப்ஸிகோ''வின் உயர்ந்த இடத்தில் இந்திராநூயி என்னும் இந்தியப் பெண் இருக்கிறார் என்று உலகம் முழுவதிலும் உள்ள பத்திரிகைகளில் செய்தி வந்த போது என்னைவிட எனது கணவர் தான் அதிகம் சந்தோஷப்பட்டார் என்கிறார் இந்திரா!

இந்திரா தன் பணியை வெற்றிகரமாகத் தொடர நாமும் வாழ்த்துவோம்.

# சருமத்தைப் பாதுகாப்போம்

இன்று அதிகமான பெண்கள் தமது வரண்டு போன சருமத்தை எண்ணிக் கவலைப்படுகின்றனர்.

சருமம் வரண்டு போவதற்கு பின்வருவன காரணங்களாக அமையலாம்.

* மருந்துகளால் ஏற்படும் அலர்ஜி
* சத்துணவுக் குறைவு
* எய்ட்ஸ், புற்று நோய் போன்ற நோய்களால் சுரப்பிகளில் ஏற்படும் பாதிப்பு.

இவற்றுள் எதனால் சருமம் வரண்டு போயுள்ளது என்பதைக் கண்டறிந்து உரிய சிகிச்சைகளை மேற் கொள்ள வேண்டும்.

வரண்ட சருமம் உடையவர்களுக்குச் சில ஆலோசனைகள்:—

* சூடான நீரிலோ, குளிர்ந்த நீரிலோ முகம் கழுவாமல் வெது வெதுப்பான நீரினால் கழுவுங்கள். முகம் கழுவும் போது ஒவ்வொரு முறையும் சவர்க்காரத்தை உபயோகிக்காதீர்கள்.



முகத்திற்கு அடிக்கடி சவர்க்காரத்தை உபயோகித்தால் சருமம் வரண்டு தோலைப் பாதுகாக்கும் உயிரிகள் அழிந்துவிடும்.

* அதிக வாசனையுள்ள, இரசாயனக் கலவைகள் அதிகமுள்ள சவர்க்காரங்களைத் தவிருங்கள்.

பெரியவர்களானாலும் ''பேபி சோப்பை'' பயன்படுத்துவது நல்லது.

* சவர்க்காரத்திற்குப் பதிலாகக் கடலைமா, பாலாடையைத் தேய்த்துக்குளிப்பது சருமத்திற்கு மிகவும் நல்லது.
* மிருதுவான துவாயைப் பயன்படுத்தி ஈரத்தைத் துடையுங்கள்.
* குளித்த பின்பு உடலுக்குத் தரமான கிறீம்களைப் பூசுங்கள்.

அதிக இரசாயனக் கலவைகள் உள்ள கிறீம் வகைகளையும், முகப் பூச்சுக்களையும் தவிர்த்துவிடுங்கள்.

* எண்ணெய், இனிப்புப் பதார்த்தங்களை இயன்றளவு குறையுங்கள்.
* பால், பால்சார்ந்த உணவுப் பொருட்களையும், பச்சைக் காய்கறிகளையும், பழங்களையும் அதிக அளவில் உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள்.
* நிறையத் தண்ணீர் குடியுங்கள்.
* தினமும் உடற்பயிற்சி செய்யுங்கள்.
* எப்போதும் சந்தோஷமாக இருங்கள்.

பெண்

பிரதீபா — பசீனா

# அலுவலகத்தில் உங்கள் பணிகள் சிறக்க.....



நீங்கள் அலுவலகம் செல்லும் பெண்ணாக இருந்தால் பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொள்ளுங்கள்.

* குறித்த நேரத்துக்கு 10 நிமிடம் முன்னதாகவே அலுவலகம் செல்வதைப் பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள். இதனால் வீணான பதற்றத்தைத் தவிர்க்க முடியும்.
* தினமும் அலுவலகத்துக்குச் சென்றவுடன் அன்று செய்ய வேண்டிய வேலைகளை முக்கியத்துவம் கருதி பட்டியலிட்டுக் கொள்ளுங்கள்.
* அலுவலகத்துக்கு வந்ததும் வீட்டு நினைவை அடியோடு மறந்துவிட வேண்டும். இல்லாவிட்டால் வேலையில் கவனம் செலுத்த முடியாது.
* உங்கள் சிந்தனைகளை ஒருமுகப்படுத்தி வேலையில் கவனத்தைச் செலுத்துங்கள்.
* உங்களுடைய வளர்ச்சிக்குத், தடைகள் இருக்கும். அவற்றையெல்லாம் எண்ணி மனம் தளர்ந்து விடாதீர்கள். உங்கள் திறமையை மற்றவர்களுக்குப் புரிய வையுங்கள்.
* உங்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலைகளைத் திறமையாகச் செய்வதுடன், வேறு என்ன வேலைகளை உங்களால் திறமையாகச் செய்ய முடியும் என்பதை மேலதிகாரிக்கு உணர்த்துங்கள்.
* நீங்கள் முன்னேற வேண்டும் என்பதற்காக அடுத்தவர்களைக் கெடுக்க நினைக்காதீர்கள். அதனால் கிடைக்கும் முன்னேற்றம் ஒரு போதும் நிலைத்து நிற்காது.
* உங்களுடன் பணிபுரியும் சக ஊழியர்களுடன் அன்பாய், ஆதரவாய் பழகுங்கள்.
* நீங்கள் நல்ல பெயர் எடுக்க வேண்டும் என்பதற்காக உங்களுடன் பணிபுரியும் சக ஊழியர்களைப் பற்றி இல்லாத, பொல்லாதவற்றை, மேலதிகாரியிடம் ஒருபோதும் சொல்லாதீர்கள்.
* உங்களுடன் பணிபுரிபவர்களுக்கு உங்களால் முடிந்தளவு உதவி செய்யுங்கள்.
* அலுவலகத்தின் வெற்றிகரமான செயற்பாட்டுக்கு உங்களால் இயன்றளவு உதவி செய்யுங்கள்.
* அலுவலக வேலைகளை வீட்டுக்கு எடுத்துச் சென்று செய்யும் வழக்கத்தை ஒருபோதும் ஏற்படுத்திக் கொள்ளாதீர்கள்.

ஓரிரு மணி நேரம் தாமதமானாலும் அலுவலக வேலைகளை அலுவலகத்திலேயே முடித்துவிடும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

இவற்றைக் கருத்திற் கொண்டு நீங்கள் ''திறமையான ஊழியர்'' என முத்திரை பதித்துக் கொள்ளுங்கள்.

# வீடு மாறும் போது....



வாடகை வீட்டில் குடியிருப்பவரா நீங்கள்?

அப்படியாயின் அடிக்கடி வீடு மாறும் பிரச்சினை உங்களுக்கு இருக்கும்.

வீடு மாறும் போது பொருட்களைச் சரியாக அடுக்கி எடுத்துச் செல்ல இதோ சில பயனுள்ள டிப்ஸ்.

* மரத்தளவாடங்களைப் பகுதி பகுதியாகக் கழற்றிய உடனேயே அவற்றை ஒன்றாக வைத்துக் கட்டி விடுங்கள். இல்லையேல் மீண்டும் இணைக்கும் போது பிரச்சினை ஏற்படும்.
* ஒவ்வொரு அறைக்கும் உரிய பொருட்களைத் தனித்தனியே அட்டைப் பெட்டிகளில் வையுங்கள்.
* முக்கியமான ஆவணங்களைக் கவனமாக ஒரு கைப்பையில் வையுங்கள்.
* கண்ணாடிப் பொருட்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியாகத் துணியால் அல்லது கடதாசியால் சுற்றி அடுக்குங்கள்.
* பழைய பெட்டிகள், தேவை இல்லாத பொருட்களை அகற்றி விடுங்கள்.
* உடைகளை மடித்துக்கட்டில்விரிப்புகளில் வைத்துக்கட்டி எடுத்துச்செல்லுங்கள்.


இரத்தினங்கள்

சித்தர்களும் ரிஷிகளும் கிரகத்திற்கும் கற்களுக்கும் உள்ள தொடர்பை தம் ஆராய்ச்சியில் கண்ட உண்மையை இன்று நாம் சரிவர கற்று உலகறிய செய்கின்றோம். அவரவர்களுக்கு ஏற்ற இரத்தினங்களை அணிந்து அதற்கேற்ப பலன்களையும் நன்மைகளையும் அடையலாம். தேர்ந்தெடுக்கப்பட்ட இரத்தினங்கள் உறுதிப்பத்திரத்துடன்

விலை ரூ.3000 முதல் ரூ.7500 வரை

Accredited by National Gem & Jewellery Authority

வெளிநாட்டு ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

ARUL Jewellers அருள் ஜுவலர்ஸ்



இரத்தினங்கள்

சித்தர்களும் ரிஷிகளும் கிரகத்திற்கும் கற்களுக்கும் உள்ள தொடர்பை தம் ஆராய்ச்சியில் கண்ட உண்மையை இன்று நாம் சரிவர கற்று உலகறிய செய்கின்றோம். அவரவர்களுக்கு ஏற்ற இரத்தினங்களை அணிந்து அதற்கேற்ப பலன்களையும் நன்மைகளையும் அடையலாம். தேர்ந்தெடுக்கப்பட்ட இரத்தினங்கள் உறுதிப்பத்திரத்துடன்

விலை ரூ.3000 முதல் ரூ.7500 வரை

Accredited by National Gem & Jewellery Authority

வெளிநாட்டு ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

ARUL Jewellers அருள் ஜுவலர்ஸ்

# சித்தசுவாதீனமற்ற பெண்கள் காமுகர்களால் குதறல்!

## திருமலையில் நிலைமை மோசம்: மூவினப் பெண்களும் பாதிப்பு

ஆரோக்கியமாக உள்ள சாதாரண மக்களைக் கவனிப்பதற்கே எவரும் முன்வராத போது சித்த சுவாதீனமற்ற மனநோயாளர்களை யார் தான் கவனிக்கப் போகின்றனர்?

அத்தகைய மனநோயாளர்களைப் பராமரிப்பதற்கு அல்லது ஆதரவு வழங்குவதற்கு சித்தம் சுத்தமாக இருந்தால் மட்டும் போதாது திடமான தியாக மனப்பான்மையும் வேண்டும்.

மனநோயால் பாதிக்கப்பட்டு பைத்தியம் என்ற நிலையை அடைவதற்கும் அதற்கு முதற் கட்டமான ஆரம்ப நிலையினை அடைவதற்கும் முதற் காரணமாக அமைவது உளவியல் ரீதியான தாக்கங்களும், குழப்பங்களுமே ஆகும்.

வெவ்வேறு வகையான உளத்தாக்கங்களுக்கு உட்பட்ட மூன்று அப்பாவிப் பெண்களின் சோகக் கதை இது.

ரோசி நல்ல குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவள். தன்னை நிர்வகிக்கத் தக்க அளவு கல்வி அறிவு கொண்டவள்.

பெற்றோர் அவளுக்குத் திருமணம் செய்து வைத்தனர். சில ஆண்டுகளுக்குள் ஓர் ஆண், ஒரு பெண் என இரண்டு மழலைச் செல்வங்களை அவள் பெற்றாள்.

இப்படி இருக்கையில் எதிர்பாராத விதமாக விதி தன் வேலையைக் காட்டிவிட்டது.

பெற்றோர் அவளை விட்டுப் பிரிந்து விட்டனர். பெற்றோரை இழந்த தாக்கம் ஒரு புறம், கணவனின் குறைவான கவனிப்பு மறுபுறம்.

இத்தனையோடு கணவனின் உறவினர்களால் அவ்வப்போது துன்புறுத்தப்பட்டும் வந்தாள்.

ரோசியின் சொத்தை அபகரிப்பதை ஒரே நோக்கமாகக் கொண்டிருந்த அவளின் கணவரின் உறவினர்கள் பல்வேறு மாந்திரீக முறைகளைக் கையாண்டு அவளைத் தம்வசப்படுத்த முயன்றனர்.

நாளுக்கு நாள் வழங்கப்பட்ட மாத்திரைகள் அவளின் மனதை வெகுவாகப் பாதித்தன.

> மனநோயால் பாதிக்கப்பட்ட பெண்கள் ஆள்பாதி, ஆடைபாதியாக வீதிகளில் வலம் வரும் போது அவர்களைப் பாதுகாக்கவேண்டும் என்ற எண்ணம் உங்கள் ஒருவருக்கும் ஏற்படுவதில்லையா?

ரோசி வழமையான நடத்தையில் இருந்து மாறுபட்டு பிறழ்வான நடத்தைக்கு உட்படுத்தப்பட்டாள். தொடர்ச்சியான அவளது இத்தகைய செயல்களின் விளைவாக அவள் வீட்டை விட்டு விரட்டப்பட்டாள். குறைந்த வயதிலேயே அவள் வாழ்வை இழந்தாள். பிள்ளைகளை இழந்தாள். இறுதியில் தன் மானத்தையே இழந்தாள். பைத்தியக்காரி என்ற பட்டத்தைச் சுமந்து கொண்டு வீதியில் அலைந்து திரிந்தாள். சில காமுகர்களின் மிலேச்சத்தனத்தால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு வயிற்றில் குழந்தையையும் சுமந்தாள்.

பிரசவ காலத்தின் போது அவள் திருமலை தள வைத்தி சாலையில் அனுமதிக்கப்பட்டாள். பிரசவத்தின் பிற்பாடு மேலதிக சிகிச்சைக்காக அங்கொடை மன நோயாளர் வைத்திய சாலைக்கு அனுப்பப்பட்டாள்.

ஒரு பைத்தியக்காரி பெற்றெடுத்த குழந்தை என்று பிற்காலத்தில் எவரும் குறை கூறக்கூடாது என்பதற்காக ஒரு புண்ணியவான் குழந்தையைத் தத்தெடுத்துக் கொண்டார். ஆனாலும் அக்குழந்தைக்குத் தன் தகப்பன் யார் என்று என்றுமே தெரியப் போவதில்லை.

சிகிச்சை பெற்று தெளிவுடன் திரும்பி வந்தாள் ரோசி. எவரும் அவளைப் பாரம் எடுக்கவில்லை. பராமரிக்க முன்வரவுமில்லை. பழைய கண்ணோட்டத்தில் அவளை ஒரு தீண்டத்தகாத பொருளாகவே அனைவரும் பார்த்தனர்.

இனியாவது காம வெறியர்களிடமிருந்து அவளது கற்பைக் காப்பாற்ற எந்த அமைப்பாவது முன்வருமா?

ரோசியின் கணவனைப்பற்றி எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. பிள்ளைகள் சிவானந்த தபோவனத்தில் இருந்ததாகவும் பின்னர் அதைவிட்டு விலகி மகன் ஒரு ஹோட்டலிலும், மகள் ஒரு வீட்டிலும் வேலை செய்வதாகவும் தகவல்.

ரோசியைப் போன்று பரிதாபகரமான நிலையில் சிக்கிக் கொண்ட இன்னுமொரு பெண் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்.

திருமலை மூன்றாம் கட்டைப் பக்கம் அடிக்கடி நடமாடும் இவள் உப்புவெளி சந்தையில் குழந்தை ஒன்றைப் பிரசவித்தாள்.

பொலிஸார் மற்றும் அங்கிருந்தவர்களின் உதவியுடன் அம்புலன்ஸ் ஒன்று வரவழைக்கப்பட்டு தளவைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டாள். பின்பு அங்கிருந்து அங்கொடை மன நோயாளர் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டாள். குழந்தையை யாரோ தத்தெடுத்துள்ளனர். சிகிச்சையின் பின்பு இவளின் நிலை என்ன? இது விடயமாக பொறுப்பு வாய்ந்த சமூக அமைப்புக்களின் நிலைப்பாடுதான் என்ன?

காம வெறிபிடித்த காளைகளின் உடல் பசி வேட்டையில் பிறந்தது தான் இந்தக் குழந்தை என்று சொல்வது எவ்வளவு கொடூரமானது?

இத்தனைக்கும் இவளது வயது 20. இவளது உடல் வனப்பைப் பகிர்ந்து கொள்ளத் துடிக்கும் காளைகள் இவளின் எதிர்காலம் பற்றிச் சிந்திக்காதது ஏன்?

இதேபோன்று எமது சமூகத்தில் பாதிக்கப்பட்ட இன்னொருவர் 17 வயதுடைய முஸ்லிம் பெண். இவளும் ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்டு வீதிக்கு வந்துள்ளாள். இவளுக்கு இந்தச் சின்ன வயதில் ஏற்பட்ட விரக்தியைப் போக்கி வாழ்வளிக்கவோ அல்லது இவளை வழி நடத்தவோ எவரும் முன்வரப் போவதில்லை.

மன நோயால் பாதிக்கப்பட்டவர்கள் ஆள்பாதி, ஆடைபாதி என்று அங்கங்களைக்காட்டிக் கொண்டு வீதிகளில் வலம் வரும் போது அவர்களைப் பாதுகாக்கவேண்டும் என்ற எண்ணம் ஒருவருக்குமே ஏற்படாதா?

பெண் விடுதலைக்காகப் போராடும், பெண்களின் அபிலாஷைகளைத் தீர்க்கக் கொடி பிடிக்கும் பெண் அமைப்புகள் இன்னும் தூங்கிக் கொண்டுதான் இருக்கின்றனவா?

சமூக நலன் விரும்பிகள் எனக் கூறிக்கொள்வோரும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளாகப் பணி புரிவோரும் செயலில் இறங்குவது எப்போது?

அதுவரையில் பாதிப்புற்றோர் பைத்தியக்காரர்கள் தானா?

வளர்ந்து வரும் பெண் அமைப்பு ஒன்றைச் சேர்ந்த பெயர் குறிப்பிட விரும்பாத பெண் ஒருவரே ''சுடர் ஒளி''க்கு இந்தத் தகவல்களைத் தந்தவர்.

—எஸ்.எஸ்.ஆர்

## புலி முத்திரை குத்தப்பட்டு தொடரும் கைதுகள்

*தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிதி சேகரிக்கச் சென்றிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் இருவர் கைதுசெய்யப்பட்ட சம்பவம் கடந்த 4 ஆம் திகதி திருகோணமலையில் இடம்பெற்றது.*

*சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:—*

*திருமலை சாம்பல் தீவில் உள்ள தமிழ் மகாவித்தியாலயத்துக்கு ஆசிரியர்களிடமிருந்து பணம் அறவிடுவதற்காக இருவர் சென்றுள்ளனர் என்ற தகவல் சாம்பல் தீவு கடற்படையினருக்குக் கிடைத்தது. இதனை அடுத்து மகா வித்தியாலயம் சுற்றிவளைக்கப்பட்டது.*

*அங்கு இருந்த இருவரை கடற்படையினர் விசாரித்தனர். அந்த இருவரும் தங்களை அந்தக் கல்லூரியின் பழைய மாணவர்கள் என்று கூறினர். இதுபற்றி அதிபரிடம் கேட்டபோது அவரிடமிருந்து தெளிவான பதில் கிடைக்கவில்லை. கடற்படையினருக்குச் சந்தேகம் ஏற்பட்டது.*

*அவ்விருவரும் புலிகளுக்கு நிதி சேகரிக்க வந்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுப் பலமாகத் தாக்கப்பட்டனர். இப்போது அவ்விருவரும் சாம்பல் தீவு கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.*

*உண்மை இவ்வாறு இருக்க, அரச தகவல் ஊடகங்களோ இரு தற்கொலைப் போராளிகளைக் கைதுசெய்துள்ளதாகத் தகவல் வெளியிட்டுள்ளன.*


*இதேவேளை திருமலை நகர்ப் பகுதியில் இருந்து சாம்பல் தீவுக்குச் சென்ற 13 வயது மதிக்கத்தக்க இரு மாணவர்களை சாம்பல் தீவு கடற்படையினர் கைதுசெய்துள்ளனர். புலிகள் இயக்கத்தில் இணைந்துகொள்வதற்காகவே இவர்கள் இங்கு வந்தனர் என்று படையினர் தெரிவிக்கின்றனர்.*

*இவர்கள் இருவரும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டாலும் படையினரால் பலமாகத் தாக்கப்பட்டுள்ளனர் என்று அறிய முடிகின்றது. இந்த மாணவர்களைப் போன்று இதுவரை அறுபதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் புலிகள் இயக்கத்துடன் இணைந்து இருக்கலாம் என்று படையினர் சந்தேகம் தெரிவிக்கின்றனர். இந்தச் சம்பவம் கடந்த 5ஆம் திகதி இடம்பெற்றது.*

*அடுத்தடுத்து இடம்பெற்ற உவர்மலை சுற்றிவளைப்பின் போது பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டார். தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து பயிற்சிபெற்று மூன்று வருடங்களுக்குப் பிற்பாடு புலிகள் இயக்கத்தை விட்டு விலகி வந்த பெண் ஒருவரைக் கைது செய்வதற்காகவே அடுத்தடுத்து இரண்டு சுற்றிவளைப்புகள் இடம்பெற்றன என்று தெரிவிக்கப்பட்டது.*

*ஆனாலும் படையினர் தேடிவந்த யுவதி எப்படியோ சாமர்த்தியமாகப் படையினரின் கண்களில் மண்ணைத் தூவித் தப்பிவிட்டார்.*

*அதற்குப் பதிலாக வேறொரு அப்பாவிப் பெண்ணைக் கைதுசெய்து படையினர் தாம் சுற்றிவளைக்கும் இடங்களுக்கெல்லாம் அப்பெண்ணுக்கு முகமூடி அணிவித்து அப்பெண்ணையும் அழைத்துச் செல்வதாகவும் அறிய முடிகின்றது.*



நண்பன் I : ''அந்த ஆள் போலி டாக்டர்னு எப்படிச் சொல்றீங்க...?''
நண்பன் II: ''பின்ன! உடம்புல இரும்புச் சத்து அதிகமாக இருந்தா காலில் ஆணி வரும்னு சொல்றாரே...''

— சு.நாகேந்திரன்
நாவலப்பிட்டி

## தமிழர்களின் சமய விழாக் காலங்களில் திட்டமிட்டு மின்சாரத் தடையா?

மூதூர் நகரிலும் அதனை அண்டியுள்ள கட்டைபறிச்சான், சேனையூர், சம்பூர் ஆகிய கிராமப் பகுதிகளிலும் அண்மைக் காலமாக அடிக்கடி மின்விநியோகம் துண்டிக்கப்பட்டு வருகிறது.

மகா சிவராத்திரி தினத்தன்று ஆலயங்களில் விசேஷ பூசை வழிபாட்டுக்கான ஆயத்தங்கள் இடம்பெற்ற நிலையில் மின் விநியோகம் தடைப்பட்டது. பின்னர் 10 மணியளவிலேயே மீண்டும் கிடைத்தது.

இவ்வாறு தமிழர்களின் சமய விழாக்கள் இடம்பெறும் வேளைகளில் குறிப்பாக, நவராத்திரி விழா, மார்கழித் திருவெம்பாவை போன்ற விசேட நிகழ்வுகள் நடைபெற்ற தினங்களில் சேனையூர், கட்டைபறிச்சான் போன்ற கிராமங்களில் மின்சாரம் தடைப்பட்டது.

மூதூர் நகரிலும் மின் விநியோகம் சீராக இல்லாததால், அரச அலுவலகங்கள், அரிசி ஆலை, தொழில் ஸ்தாபனங்கள் என்பவற்றில் வேலைகள் பாதிக்கப் படுகின்றன.

மின் விநியோகம் வழங்குவதில் இந்தத் தடை திட்டமிடப்பட்டு இடம்பெறுகிறதா என மக்கள் சந்தேகம் கொள்கின்றனர்.

— சுதன்

## தம்பலகாமத்தில் புராதனகால நாணயங்கள் கண்டுபிடிப்பு

தம்பலகாமம் 98ஆவது குடியேற்றத்திட்டத்தில் அமைந்துள்ள தனது வயற்காணியில் வயல் வேலையில் ஈடுபட்டிருந்த ஓர் இஸ்லாமியச் சகோதரர் செம்புக் காசுகள் நிறைந்த ஒரு பானையையும் உடைந்த நிலையில் காணப்பட்ட ஒரு விக்கிரகத்தையும் கண்டெடுத்துள்ளார்.

சமஸ்கிருத எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட மான், மழு, சூலம், நாகபாம்பு ஆகிய சின்னங்கள் கொண்ட இந்த நாணயங்கள் சிந்துவெளி காலத்திற்கு உரியவையாக இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

யோக நிலையில் காணப்படும் இந்த சிலையின் கை உடைந்து காணப்படுகிறது.

மேற்படி தொல் பொருட்கள் கிடைத்த செய்தி பாதுகாப்புப் படையினருக்குத் தெரியவரவே, அவர்கள் உடனடியாக அந்த இடத்துக்கு விரைந்து வந்து நாணயங்களையும் சிலையையும் பொறுப்பேற்றனர். பின்னர் அவற்றைப் புதைபொருள் ஆராய்ச்சிப் பகுதியினரிடம் ஒப்படைத்தனர்.

—தங்கம்

# ஐந்து ஆண்டுகளில் 1½ இலட்சம் வீடுகள்; வைத்தியசாலை வசதிகள்

## அமைச்சர் ஆறுமுகம் தீட்டியுள்ள சேமநலத் திட்டங்கள்

மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் குடியிருக்கும் வீடுகளில் 80 சதவீதமானவை மக்கள் குடியிருப்பதற்கு உதவாதவை. இவை அனைத்தும் 1800ஆம் ஆண்டுக்கு முன்னர் கட்டப்பட்ட தற்காலிகக் குடியிருப்புகள்தான்.

இதனை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்பொதுச்செயலாளரும்கால்நடை அபிவிருத்தி தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் நாடாளுமன்றத்தில் ஒப்புக்கொண்டுள்ளார்.

இப்பொழுது மலையகத்தில் 15 லட்சம் இந்திய வம்சாவளித் தமிழர்கள் நிரந்தரமாக வாழ்கின்றனர்.

இவர்களுள் ஆக 20 சதவீதமானவர்கள் மட்டுமே வீடுகள் என ஒப்புக் கொள்ளக் கூடிய குடியிருப்புகளில் வாழ்கின்றனர்.

ஏனையோர் 200 வருடங்களுக்கு முன் தற்காலிகக் கட்டடங்களாக அமைக்கப்பட்ட லயன் அறைகளிலேயே தொடர்ந்து வாழ்ந்து வருகின்றனர்.

தோட்ட வீடமைப்பு பிரதி அமைச்சராக பெ.சந்திரசேகரன் இருந்தபோது 30 ஆயிரம் வீடுகள் அமைக்கப்பட்டன என்று கூறப்படுகிறது. இப்போது அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் அந்த அமைச்சையும் பொறுப்பேற்ற பின் 7500 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

இந்த ஆண்டிலும் மேலும் 7000 வீடுகள் கட்டப்படும் என அமைச்சர் கூறுகின்றார். இவை அனைத்தும் சுய உதவி வீடமைப்புத் திட்டத்தின் கீழ் அமைக்கப்படுபவை.


ஆறுமுகம் தொண்டமான்

எஞ்சிய மக்கள் தொடர்ந்தும் வசதியற்ற லயன்களிலேயே வசிக்கின்றனர்.

ஆனால் அரசியல்வாதிகளோ பொறுப்பான தொழிற்சங்கத் தலைவர்களோ இந்த உண்மையை ஏற்றுக் கொள்வதாக இல்லை. இப்பொழுதுதான் முதன்முறையாக தொழிலாளர் தலைவன் என்ற முறையிலும் பொறுப்பான அமைச்சர் என்ற வகையிலும் மறுக்கமுடியாத இந்த உண்மைகளை நாடாளுமன்றத்திலே ஆறுமுகம் தொண்டமான் வெளிப்படுத்தியதோடு அதற்கான மாற்றுத் திட்டங்களையும் அறிவித்துள்ளார்.

அமைச்சர் ஆறுமுகத்தின் கூற்றுப்படி கடந்த 2000ஆம் ஆண்டில் 7500 வீடுகள் கட்டப்பட்டன. இந்த ஆண்டில் 7000 வீடுகள் கட்டப்படும். அடுத்து வரும் ஆண்டுகளில் தலா 25 ஆயிரம் வீடுகள் என்ற அடிப்படையில் நான்கு வருடங்களில் ஒரு லட்சம் வீடுகள் கட்டப்படும்.

### மலையகக் கண்ணோட்டம்

தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு, பெருந்தோட்டத்துறை அமைச்சு, வெளிநாட்டு உதவி நிறுவனங்கள் என்பனவற்றின் பங்களிப்புடன் இதனைச் செயற்படுத்த இருப்பதாகவும் ஆறுமுகம் தொண்டமான் குறிப்பிட்டுள்ளார்.

இவருடைய திட்டம் தங்கு தடையின்றி வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தப்பட்டால் 2005ஆம் ஆண்டின் இறுதி யில் மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கெனச் சொந்தமாக ஒரு லட்சத்து 44ஆயிரத்து 500 வீடுகள் அமைக்கப்பட்டு விடும். இதன் மூலம் லயன் முறை முற்றாக ஒழிக்கப்பட்டுவிடும் வாய்ப்புகளும் உண்டு.

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் இத்துடன் நின்றுவிடாது பொது வசதிகள், சுகாதாரம் என்பன தொடர்பாகவும் சில திட்டங்களை வகுத்து வருகிறார். இவை தவிர தற்பொழுது தோட்ட நிர்வாகங்களின் கீழ் செயற்பட்டுவரும் தோட்ட வைத்திய சாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்று சகல வசதிகளுடன் கூடிய மகப்பேற்று நிலையங்கள், சிகிச்சைப் பிரிவுகளை ஏற்படுத்தி அவற்றுக்குத் தகுதியும் திறமையும் உள்ள டாக்டர்களை நியமிக்கப்போவதாகவும் இத்திட்டத்தின் கீழ் 35 தோட்ட வைத்திய சாலைகள் தெரிவு செய்யப் பட்டிருப்பதாகவும் அறிவித்துள்ளார்.

நகர்ப்புறங்களுக்கு மிகவும் தூரத்தில் இருக்கும் தோட்டங்களில் தொழிலாளர்களின் நலன் கருதி உபதபால் நிலையங்கள் அமைக்கப்பட இருப்பதாகவும் —

இதன் முதற்கட்டமாக 150 தோட்டங்களிலிருந்து, அங்கு நிரந்தரமாக வசிக்கும் தொழிலாளர்களின் பிள்ளைகளில் தகுதியும் திறமையும் உள்ள இளைஞர், யுவதிகள் தெரிவுசெய்யப்படுவர் என்றும் —

இவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு உபதபால் அலுவலகங்களில் நியமனம் வழங்கப்படும் என்றும் — அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை எந்தவொரு அமைச்சரோ அல்லது தலைவரோ வெளிப்படையாக வெளியிடத் தயங்கிய எதிர்காலத் திட்டங்கள் குறித்து அமைச்சர் ஆறுமுகம் மனந்திறந்து பேசுகிறார்.

கடந்த ஏப்ரல் முதலாம் திகதி சுடர் ஒளி இதழில் மலையகத் தொழிலாளர்களின் அவல நிலைமைகளைப் புகைப்படங்களுடன் வெளியிட்டிருந்தோம்.

ஆண்டவனுக்குக் கருணை இருந்தால், இவர்களைக் காப்பாற்றட்டும் என்றும் குறிப்பிட்டிருந்தோம்.

இதனை அமைச்சரின் உதவியாளர்கள் அமைச்சருடைய கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர்.

அவருடைய திட்டங்கள் வெற்றிபெற அனைத்து மட்டத்தினரும் ஆதரவளிக்க வேண்டும்.

இதன் மூலமாவது தோட்டத் தொழிலாளர்களின் அவலநிலை நீங்கும் அல்லவா?

— இரா. புத்திர சிகாமணி

# தோட்டக் கம்பனிகளுக்கும் அரசுக்கும் ஆதாயம்! தொழிலாளரோ நட்டாற்றில்

## சங்கங்களை குரல் எழுப்பக் கோருகிறார் ராஜா செனவிரத்ன

பெருந்தோட்டத் துறைக் கம்பனிகளின் நிதி, நிர்வாக செயற்பாடுகளில் தலையிடவோ அல்லது உத்தரவுகளைப் பிறப்பிக்கவோ அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லை. அரசு தோட்டங்களைத் தனியார் கம்பெனிகளிடம் ஒப்படைத்த போதே இந்த உரிமைகளை அரசாங்கம் இழந்துவிட்டது. இதுதான் இன்றைய நிலை.

இப்படிச் சொல்கிறார் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ராஜா செனவிரத்ன.

1992ஆம் ஆண்டு முதலே தேயிலை, றப்பர் தோட்டங்களை 22 தனியார் கம்பெனிகளுக்குக் குத்தகைக்கு வழங்கியதன் மூலம் அரசாங்கம் கிட்டத்தட்ட 7 லட்சம் கோடி (7000 பில்லியன்) ரூபாவை இலாபமாகப் பெற்றுள்ளது. ஆனாலும் தோட்டத் தொழிலாளர்களுக்குச் சம்பள உயர்வு வழங்க மட்டும் முடியாமல் இருக்கின்றது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

அரச பெருந்தோட்ட யாக்கம், மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை என்பனவற்றால் பெருந்தோட்டங்கள் நிர்வகிக்கப் பட்டபோது தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாது வங்குரோத்து நிலை ஏற்பட்டது.

நிர்வாகத் துறையில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள், சுரண்டல்கள் காரணமாக ஏற்பட்ட பல ஆயிரம் கோடி ரூபா நஷ்டம், மத்திய வங்கியின் மானியத்தைப் பெற்றே ஈடு செய்யப்பட்டது.

இதற்கு முற்றுப்புள்ளி வைக்கவே ஐ.தே.க அரசு 1992 ஆம் ஆண்டு தோட்ட நிர்வாகப் பொறுப்பை ஐந்து வருட காலத்திற்கு மட்டும் கம்பெனிகளிடம் ஒப்படைத்தது.


ராஜா செனவிரத்ன

ஆனால் 1995 ஆம் ஆண்டில் இத்தோட்டங்கள் 55 வருட கால நீண்ட குத்தகைக்குக் கொடுக்கப்பட்டன. காணி உரிமை அரசுக்கும், நிர்வாகம் கம்பெனிகளுக்கும் என உறுதிப்படுத்தப்பட்டது. இதனை எல்லாத் தொழிற்சங்கங்களும் எதிர்த்த போதும், இ.தொ.கா மட்டுமே ஆதரவாக இருந்தது. இதற்கு உபகாரமாகத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் 10 சதவீத பங்குகள் வழங்கப்படும் எனக் கூறினார்கள்.

ஒரு தொழிலாளி ஐந்து வருடங்களுக்கு மேல் வேலை செய்திருந்தால் ஒரு வருடத்திற்கு பன்னிரெண்டு 10 ரூபா பங்குகள் என சேவை அடிப்படையில் பங்குப் பத்திரங்களும் வழங்கப்பட்டன. அண்மையில் இலாபப் பணம் பங்கிடப்பட்டபோது பத்து ரூபா பங்கு ஒன்றுக்கு இலாபம் ஒரு ரூபா என்ற அடிப்படையில் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டது. இதனால் எந்தப் பிரயோசனமும் இல்லை.

தொழிலாளர்களும் பங்குதாரர்கள் எனக் கூறுகிறார்கள். ஆனால், இயக்குநர் சபையில் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் எவருமே இல்லை. எனவே இது வெறும் கண்துடைப்பு என்பது புலனாகிறது.

தோட்டங்களின் நிர்வாகம் கம்பனிகளிடம் ஒப்படைக்கப் பட்டதால் கம்பனிக்காரர்களுக்கும் அரசாங்கத்திற்கும் கொழுத்த இலாபம் கிடைக்கிறது. குத்தகை ஒப்பந்தத்தின்படி தோட்ட அபிவிருத்தி, தொழிலாளர்களின் சேமநலம் என சிறிய பகுதியை மட்டுமே கம்பனிகள் கவனிக்க வேண்டும். வீடமைப்பு, குடிதண்ணீர், சுகாதாரம் மற்றும் பொது வசதிகளை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும். ஆனால் இவர்கள் இரு சாராருமே இப்பொறுப்பினை ஏற்பதில்லை.

இலாபத்தில் ஒரு பங்கை அரசாங்கம் பெற்றுக் கொண்டு சம்பள உயர்வு தொடர்பாக மௌனம் சாதிக்கின்றது.

இப்படி ராஜா செனவிரத்ன மேலும் குறிப்பிட்டார்.

''இவர் கீழ்க்கண்ட விவரங்களையும் சுட்டிக்காட்டினார்.

''இன்று தேயிலை உற்பத்தித் துறை மூலம் இலங்கை பெரும் இலாபம் ஈட்டிக்கொண்டிருக்கிறது. முன் எப்போதும் இல்லாதவாறு இலங்கைத் தேயிலைக்கு உலக சந்தையிலும் வரவேற்புள்ளது. கம்பனிகளுக்குக் கிடைத்த இலாபத்தில் ஒரு சிறு பகுதியை ஒதுக்கினாலும் தோட்டத் தொழிலாளர்களுக்கு 400 ரூபா சம்பள உயர்வை வழங்கி இருக்க முடியும். ஏன் வழங்க மறுக்கின்றனர் என்பது புரியவில்லை''. இதனை அமைச்சர் ரொனி டிமெல் நாடாளுமன்றத்தில் கூறியுள்ளார்.

ரொனி டி மெல் ஒரு பொருளாதார விற்பன்னர். அத்தோடு நீண்டகாலமாக, இலங்கையில் நிதி அமைச்சராக இருந்தவர் என்ற பெயரையும் பெற்றவர். இவர் தவறான விடயங்களை வெளியிடமாட்டார்.

அடுத்தவர் பிரதமர். இவரே பெருந்தோட்டத் துறைக்குப் பொறுப்பான அமைச்சர். இவர் ''1994 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கைத் தேயிலை வர்த்தகத்தில் பாரிய அபிவிருத்தி அடைந்துள்ளது. கூடுதலான வெளிநாட்டு வருமானத்தையும் இதன் மூலம் பெற்றுள்ளோம்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இவர்கள் இருவருமே பொறுப்புமிக்க அமைச்சர்கள். ஆனால் எவருமே தொழிலாளர்களுக்குச் சம்பள உயர்வு வழங்க வேண்டும் எனக் கட்டாயப்படுத்திக் கூறவில்லை. இவர்களால் ஏன் இவ்வாறு முடியாதுள்ளது? அவர்களுக்கு அந்தளவு அதிகாரம் இல்லை என்பது இதன் மூலம் தெளிவாகின்றது அல்லவா?

தேயிலை, றப்பர் ஏற்றுமதி மூலம் கிடைக்கும் வெளிநாட்டு செலாவணியைக் கொண்டு நட்டத்தில் இயங்கும் அரசு கூட்டுத்தாபன ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு வழங்கும் அரசாங்கம், அதனைப் பெற்றுத்தரும் தோட்டத் தொழிலாளர்களுக்குச் சம்பள உயர்வை வழங்கத் தயங்குகிறது. இந்த நிலை மாறவேண்டும்.

தேயிலை, றப்பர் தோட்டங்களின் மூலம் கிடைக்கும் வருமானத்தில் பெருந்தோட்டத் துறை அபிவிருத்திக்கும் தொழிலாளர்களின் சேமநலன்களுக்கும் முன்னுரிமை வழங்க வேண்டும். நிர்வாகத்தில் பங்கு கொள்ளும் வகையில் பணிப்பாளர் சபையில் தொழிலாளர்களின் பிரதிநிதிகளும் இடம்பெற வேண்டும். இதற்காக அனைத்துத் தொழிற்சங்கங்களும் இணைந்து குரல் எழுப்ப வேண்டும் என ராஜா செனவிரத்ன மேலும் குறிப்பிட்டார்.


HOTEL WESTEERN



பம்பலப்பிட்டியில் கடற்கரையோரமாக அமைந்துள்ள உல்லாச ஆடம்பர ஹோட்டலில், வெளிநாட்டவர்கள் அனைவரும் விரும்பி வந்து தங்கி, விருந்தோம்பிச் செல்வதுடன் மதுபான வசதி, மற்றும் விசேஷ வைபவங்களுக்கு ஏற்ற வகையில் அடக்கமான 3 மண்டபங்கள், தொலைக்காட்சி, தொலைபேசி, குளிரூட்டப்பட்ட அறைகள் போன்ற வசதிகளுடன்

ஐரோப்பிய நாடுகளிலிருந்து பதிவு செய்வதற்கான கட்டணங்கள்

US 25$, London 15Pounds, France 150 Frank, German45 Mark, Canada 35 Dollars, Swiss 45 Frank


இக்கட்டணத்துடன் காலை உணவும் இரவு உணவும் இலவசம்

HOTEL WESTEERN

Tourist Hotel - Approved by Ceylon Tourist Board

No.35, Frankfurt Place, Bambalapitiya,
Colombo-04. Sri Lanka.
Tel: 941-507161-3 Fax: 94 74-518481
E-mail: info@hotelwesteern.com
Web: www.hotelwesteern.com

# தமிழக தேர்தல் விளையாட்டு: இறுதி நேரத்தில் குத்து வெட்டு


கருணாநிதி

தமிழக சட்ட சபைத் தேர்தலில் அரசியல் கட்சிகள் இறுதி நேரக் குத்து வெட்டில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கும் வேளை இது.

சென்னை கோட்டையிலிருந்து முதலமைச்சர் கருணாநிதியும் போயஸ் கார்டன் மாளிகையிலிருந்து ஜெயலலிதாவும் அதிரடி நடவடிக்கைகளைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறார்கள்.

கட்சிகளுக்குள் குத்து வெட்டு. பல கட்சிகள் ஒன்றிணைந்த கூட்டணிகளுக்குள் குத்து வெட்டு. இதன் காரணமாகத் திடீரெனக் கட்சித் தாவல்கள். இவற்றின் பின்னணியில் யார் நண்பர்கள், யார் பகைவர்கள் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள முடியாத நிலை இருக்கிறது. எதிரியின் எதிரி எனது நண்பன் என்ற நிலைப்பாடு வேறு ஊன்றி விட்டது.

தமிழக மக்கள் இதுவரை சந்தித்திராத மிகவும் கேவலமான தேர்தல் ஒன்றில் பங்கு கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள்.

அரசியல்வாதிகள் ஆயிரக்கணக்கில் களத்தில் இறங்கி தமிழக சட்ட சபையின் 234 தொகுதிகளைப் பங்குபோட்டுக் கொள்ள முயலுகிறார்கள். இதற்காக எத்தனையோ கழுத்தறுப்புகள் நடந்து முடிந்திருக்கின்றன.

மே 10 ஆம் திகதி தமிழக சட்டசபைத் தேர்தல் வாக்களிப்பு நடைபெறுவதற்கு முன்னர் மேலும் எத்தனை கழுத்தறுப்புகள் நடைபெறுமோ தெரியாது.

இதற்கிடையில் தமிழக அரசியல் தலைவர்களில் மிக முக்கியமான இடத்தைப் பிடித்துள்ள ஜெயலலிதா தமது தேர்தல் கைங்கரியங்களை மிகவும் கனகச்சிதமாகச் செய்து முடித்து விட்டார் என்றே சொல்ல வேண்டும். தமது விருப்பப்படியே கூட்டணிக்கட்சிகளைச் சேர்த்துக் கொண்டார். தமது எண்ணப்படியே அவர்களுக்கு தொகுதிகளை ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்.

ஆயினும் தேர்தலில் ஜெயலலிதா போட்டியிடுவதற்கு அனுமதி கிடைக்குமா என்பது இன்னும் நிச்சயமாகவில்லை.

ஊழல் வழக்குகளில் ஜெயலலிதா குற்றவாளியாகக் காணப்பட்டு மூன்று வருடகாலச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறார். அந்தத்தீர்ப்பை எதிர்த்து அவர் அப்பீல் செய்திருக்கிறார். அந்த அப்பீல் வழக்கில் அவரது குற்றம் நிரூபிக்கப்படும் வரை அவர் நிரபராதி என்றே கருதப்பட வேண்டியவர்.

ஆயினும் மூன்று வருடங்கள் சிறைத்தண்டனை பெற்ற ஒருவர் அப்பீல் செய்துவிட்டு பிணையில் சுதந்திரமாக நடமாடலாம். ஆனால் தேர்தலில் போட்டியிட முடியாது என்றும் இந்திய சட்ட நடைமுறை கூறுகிறது.

எனவே ஜெயலலிதா விசேஷ நீதி மன்றங்கள் தம்மைக்குற்றவாளியாகக் கண்டு தீர்ப்பு வழங்கிய தண்டனைகளுக்கு இடைக்காலத்தடை உத்தரவு போடும்படி உயர் நீதிமன்றத்தில் மனுச்செய்தார்.

உயர் நீதிமன்றம் அவ்வாறு உத்தரவு பிறப்பிக்க மறுத்து விட்டது. ஆயினும் தீர்ப்பு வழங்கிய நீதிபதி தமது தனிப்பட்ட கணிப்பின்படி ஜெயலலிதா தேர்தலில் போட்டியிடும் தகுதியை இழந்துவிடவில்லை என்று தெரிவித்திருந்தார்.

இந்த நிலையிலும் ஜெயலலிதா அசந்து போய்விடவில்லை. தமிழக சட்டசபையின் இரு தொகுதிகளில் போட்டியிடத் தீர்மானித்திருக்கிறார்.

தேர்தல் வேட்பு மனு செய்யப்படும் முதலாவது நாளே கிருஷ்ண கிரித்தொகுதியில் தமது வேட்பு மனுவை அவர் தாக்கல் செய்தார். இரு தினங்களின் பின் ஆண்டிப்பட்டி தொகுதியிலும் வேட்புமனுத்தாக்கல் செய்கிறார்.

ஜெயலலிதா தேர்தலில் போட்டியிடலாமா என்பதைத் தீர்மானித்து அவரது வேட்புமனுவை ஏற்றுக் கொள்வது அல்லது நிராகரிப்பது மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியின் பணியாகும்.

ஜெயலலிதா ஆண்டிப்பட்டியில் போட்டியிடுவார் என்பது முன்னரே எதிர்பார்க்கப்பட்டது. எம்.ஜீ.ஆர் படுத்துக்கொண்டே வெற்றிபெற்ற தொகுதி அது. எனவே ஜெயலலிதா அங்கு போட்டியிடுவதையே விரும்பினார்.

ஆனால் ஆண்டிப்பட்டி தொகுதியின் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியாக ஒரு தி.மு.க ஆதரவாளரே நியமிக்கப்பட்டிருப்பார். அவர் தமது வேட்பு மனுவை ரத்துச் செய்யக்கூடும் என்று ஜெயலலிதா அச்சம் கொண்டார் என்று அ.தி.மு.க வட்டாரங்கள் தெரிவித்தன.

எனவே கிருஷ்ணகிரியிலும் போட்டியிடுவது பற்றி ஜெயலலிதா திடீரென்று அறிவித்தார். அத்துடன் முதல் நாளே அவசரம் அவசரமாக அங்கு விரைந்தார்.

கிருஷ்ணகிரி மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி ஒரு ஜெயலலிதா ஆதரவாளர் போலும். அங்கு தமது வேட்பு மனு ஏற்கப்படுவது உறுதி என்று ஜெயலலிதா நினைத்திருக்கக் கூடும் என்று தமிழக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்கள் ஏற்கப்படுவது, நிராகரிக்கப்படுவது, வாபஸ்பெறப்படுவது எல்லாம் 24 ஆம் திகதி ஆகும். அன்றைய தினம் ஜெயலலிதாவின் எதிர்காலம் பற்றிய தீர்ப்பு வெளிவரும்.

ஜெயலலிதாவின் வேட்பு மனு ஏற்கப்பட்டால் தமது தேர்தல் பிரசாரத்தை மிகவும் பரபரப்புடன் நடத்துவதற்கு ஜெயலலிதா திட்டமிட்டிருக்கிறார். ஆயினும் அவரது நட்புக் கட்சிகள் ஏகோபித்து ஒற்றுமை கீதம் பாடும் நிலையில் இல்லை.

மூப்பனாரின் தொகுதிகளில் 24 தொகுதிகளை ஜெயலலிதா கவர்ந்து விட்டார். எனவே மூப்பனார் கட்சியில் அது குறித்து மோதல்கள் வலுத்துவிட்டன.


ஜெயலலிதா

சில தொகுதிகளில் மூப்பனாரின் கட்சியினர் சுயேச்சையாகப் போட்டியிடுவதற்கு தீர்மானித்திருக்கிறார்கள். மேலும் சிலர் சிதம்பரம் ஆரம்பித்துள்ள கட்சியில் சேர்ந்து விட்டார்கள்.

மூப்பனார் எவ்வளவோ எதிர்பார்ப்புகளுடன் தமிழ்நாட்டில் ஜெயலலிதாவுடன் கூட்டணி அமைத்தார். ஆனால் அவருடைய கட்சியே சிதறுண்டு போய் இருக்கிறது. சோனியா காங்கிரஸ் நிலையும் அதுவே தான்.

பாண்டிச்சேரியிலோ ஜெயலலிதா — ராமதாஸ் கூட்டணியை முறியடிக்க மூப்பனாரும் சோனியாவும் ஒன்று திரளும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இறுதியாக வந்த தகவல்களின்படி ராமதாஸுக்கும் ஜெயலலிதா பாண்டிச் சேரியில் பட்டை நாமம் சாத்திவிட்டார் என்று தெரிகிறது.

தி.மு.க விலும் குத்து வெட்டுகள் அதிகரித்து விட்டன. முதலமைச்சர் கருணாநிதி தமது மகன் ஸ்டாலினைத் தலைமைப் பீடத்தில் ஏற்றுவதற்காக எத்தனையோ அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்.

வை.கோபாலசாமியை வெளியேற்றினார், அமைச்சர் தமிழ்க் குடிமகனை ஜெயலலிதாவின் காலில் விழச் செய்தார். அப்படி அவர் காலில் விழுந்தும் ஜெயலலிதா தேர்தல் டிக்கெட் கொடுக்கவில்லை. அது மட்டுமா? சொந்த மருமகன் முரசொலி மாறனே மனம் நொந்து போய் வீட்டுக்குள் முடங்கி விட்டார். இன்று தி.மு.க வேட்பாளர்களாக 70 புதியவர்கள் (இளம் இரத்தங்கள்) தேர்தலில் போட்டியிடுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் ஸ்டாலினின் தொண்டர் அடிப்பொடியினர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களில் ரஜனிகாந்த் ரசிகர் மன்றத்தினரும் அடக்கம்.

அத்துடன் தமிழகத்தின் வெவ்வேறு ஜாதிகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளுக்கும் தமது கூட்டணியில் இடம் கொடுத்திருக்கிறார் கருணாநிதி.

இந்த நடவடிக்கைகள் முரசொலி மாறனுக்கு ஆத்திரத்தைக் கொடுத்திருக்கின்றன. எனவே அவர் அரசியலில் தீவிர பங்கெடுக்காமல் ஒதுங்கிவிடப் போவதாக அறிவித்திருக் கிறார். ஆனால் மத்திய அமைச்சர் பதவியை என்ன செய்யப் போகிறார் என்று அறிவிக்கவில்லை.

மொத்தத்தில் கருணாநிதி அணியும், ஜெயலலிதா அணியும் ஸ்திரமான நிலைப்பாடு இன்றியே தமிழக சட்டசபைத் தேர்தலை எதிர்நோக்குகின்றன.

இதே வேளையில் ஜெயலலிதாவின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டால் அ.தி.மு.க அணி என்ன செய்யும்? இந்த கேள்விக்கு 24 ஆம் திகதி விடை கிடைக்கலாம்.

—கதாசி—

# கிழக்குப் பல்கலையில் உலக நாடக தினவிழா

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறையினாின் உலக நாடக தினவிழா கடந்த 26ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதிவரை நடைபெற்றது.

94 ஆம் ஆண்டு தொடக்கம் உலக நாடக தின விழாவை கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையினர் வருடாந்தம் நடத்தி வருகின்றனர்.

தொடக்க விழா தினம் வனவள சுற்றாடல் அமைச்சின் செயலாளரும் கிழக்குப் பல்கலைப் பேரவை உறுப்பினருமான நமசிவாயம் பத்மநாதன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

விழா நாட்களில் பீடாதிபதிகள், பல்கலைக் கழகத் துறைத் தலைவர்கள் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

அத்துடன் தினமும் பிரதேச மண் வாசனையை உள்ளடக்கிய ஆற்றுகை களாக நாடகம், நவீன நாடகம், நாட்டுக்கூத்து, பண்பாட்டு இசை என்பன இடம்பெற்றன.

இரண்டாம் நாள் நிகழ்வில் மலையகக் கலைகளை வெளிப்படுத்தும் வகையில் புதிய பண்பாட்டு அளிக்கைக் குழு வழங்கிய இசையணி, நாடகங்கள் என்பனவும் இடம்பெற்றன.

இறுதி நாள் நிகழ்வில் ''தலைக்கோல்'' விருது பெறும் கலைஞர்களான நாட்டுக்கூத்துக் கலைஞர் (மூனா. கானா) என அழைக்கப்படும் மு.கணபதிப்பிள்ளை, வானொலி மேடை நாடகக் கலைஞர் கே.ஏ.ஜவாஹர் ஆகியோரும் மற்றும் உபவேந்தர் மா.செ.மூக்கையா மற்றும் அதிதிகளும் பண்பாட்டு இசையணியுடன் அழைத்துவரப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து நுண்கலைத்துறை பீடாதிபதி பேராசிரியர் மௌனகுருவினால் தலைக்கோல் விருது வழங்கப்பட்டும் உபவேந்தரால் பொன்னாடை போர்த்தும் கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இறுதியாகப் பேராசிரியர் மௌனகுருவின் நெறியாள்கையில் உருவான இராவணேஸ்வரன் வடமோடி நாட்டுக்கூத்து நாடகம் மேடை ஏற்றப்பட்டது.

பல்கலைக்கழக மாணவர்கள், பீடாதிபதிகள், ஊழியர்கள் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் இந்த இராவணேஸ்வரன் நாடகத்தில் பாத்திரங்களை ஏற்றிருந்தனர்.

இந்த நாடக விழாவில் பல்கலைக்கழகச் சமூகம், பல்துறைக் கலைஞர்கள், பாடசாலை மாணவர்கள் என மண்டபம் நிறைந்து வழிந்தது.

— சத்துருக்கன்


அப்பவும் சொன்னனான், வாத்தியாருக்கு ஓவராக ''ஐஸ் வைக்காதை எண்டு''

## வாசகர் இதயம் பேசுகிறது

சித்திரைப் புத்தாண்டு இதழ்லாக வெளி வந்த சுடர் ஒளியின் அட்டைப் படம் சிறப்பாக இருந்தது. ஆலய கோபுர தரிசனம் பலே.

—ம. சின்னத்துரை, வவுனியா.

மலையகத் தமிழ்ப் பாடசாலைகளின் நிர்வாகம் தனிச் சிங்களத்தில் வரும் நிலை பற்றி மலையகக் கண்ணோட்டம் பகுதியில் படித்த போது அதிர்ச்சியாக இருந்தது.

—கே.அக்கித், செட்டிகுளம்.

அரசாங்கமும் புலிகளும் பரஸ்பரம் குற்றச் சாட்டுகளைச் சுமத்திக்கொண்டு இருந்தால் நாட்டில் அமைதி ஏற்படுவது எப்படி?

—தே.மணிசேகரன், வத்தளை.

விடுதலை வீராங்கனை ஜோன் ஒப் ஆர்க்கின் போராட்டத்தை சுவை பட விளக்கியிருந்தீர்கள்.

—ஆர்.மார்க்ரெட், மன்னார்.

சித்திரை பிறக்கு முன்னரே அவசரமாகப் பிறந்துவிட்ட விஷு புது வருடம் எமக்கு எல்லா நலன்களையும் தேடித் தரட்டும்.

—ச.வரதராசன், பதுளை.

வன்னி மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை அனுப்பாமல் அனாவசியமான பொருட்களை அனுப்புவது ஏமாற்று வேலை என்பதை அழகாகச் சுட்டிக்காட்டியிருந்தீர்கள்.

—எம்.எம்.சமூன், வியாங்கொடை.

தமிழகசட்டசபைத்தேர்தல்குறித்துசுவையானதகவல்களைத்தரும்'சுடர்ஒளி'க்குநன்றி.

—ம.கார்மேகம், மருதானை.

சுடர் ஒளி சிறுகதை ''உறவுகள்'' எழுது அரசியல் நிலை பற்றி சிறப்பாக எடுத்துக் கூறியது.

—த.வசந்தன், மட்டக்களப்பு.

மன்னாரில் இரு தமிழ்ப் பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு உரிய தீர்ப்பு கிடைத்தே ஆக வேண்டும்.

—எல்.எம்.மஸாரியா, நானுஓயா.


மனோதத்துவ வைத்தியம்

GENERAL PSYHO THERAPHY

Dr. P.ஆறுமுகம் அவர்களை

கொழும்பில் ஏப்ரல் 20 - 25 திகதிகளில்

DR.ARUMUGAM (S.A.M.P) REG. 9492

New Ahmed Tourist Inn, Brag Bnad Building, Entrance Bankshall Street, No.10, Reclamation Road, Colombo-11.

T.P 074-715547, 074-715546, செல்டல் - 072 664867

கல்முனையில் மே 5 - 6 திகதிகளில்

T.M.M. பாமசி கல்முனை. T.P: 067-29329

வவுனியாவில் மே 12 - 13 திகதிகளில்

Vanni Inn, T.P:- 024-22074, 21406

மலைநாட்டினருக்காக கண்டியில் மே 26 - 29 திகதிகளில்

ASIRI MEDICALS:

45,Peradeniya Road, Kandy. 074-474156

கடிதத் தொடர்பு

Resident Tele Phone:- 065-24019

Dr.P. Arumugam,

No.51/5, Koolavady Road, Batticaloa, Sri Lanka.

# பித்தன் பதில்கள்

ராம் கார்த்திகேயன், சிலாபம்.
கே : பித்தனே...! வடக்கு—கிழக்குத் தமிழர்களுடன் திருமணஉறவு வைக்க வேண்டாம் என்று மலையகத் தமிழர்களுக்கு பொலிஸ் அதிகாரி ஒருவர் உபதேசித்துள்ளாரே?
ப : அப்ப எங்கள் அம்மணிக்கு அந்த உபதேசத்தைச் சொல்லட்டுமே.

வையாபுரி தியாகராஜா, பண்டாரவளை.
கே : பித்தனே...! ஒரு பெண்ணைக் காதலிக்க பணமா,பலமா தேவை?



ப : பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும் என்பது உங்களுக்குத் தெரியாதா?

எஸ். வரதராஜன், மட்டக்களப்பு
கே : பித்தா....! நடிகர் திலகம் சிவாஜிகணேசன் புதிய படங்களில் நடிப்பதில்லையே. அவரது அமைதிக்கு என்ன காரணம்?
ப : ஓடி ஓடி நடித்தவர். வயதாகிவிட்டதால் ஓய்ந்துபோய் இருக்கிறார் போலும்.

நா. பச்சையம்மாள், உடப்புஸல்லாவ.
கே : இன்று பரபரப்பாகப் பேசப்படும் அரசியல் தலைவர் யார்?
ப : தலைவர்தான்.

சி. லவன், புன்னாலைக்கட்டுவன் தெற்கு
கே : பித்தனே...! சமாதானம் ஏற்பட்டு



நான் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு ரயிலில் செல்வதாகக் கனாக் கண்டேன். எனது கனவு பலிக்குமா?
ப : நானும் ஒரு கனாக் கண்டேன்.. கிளாலியால் போவது போன்று.

பி. பிறேம், வவுனியா
கே : டியர் பித்தன்...! சில தமிழர்கள் இன்னும் ஏன் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள்?
ப : தான் உண்டு தனது குடும்பம் உண்டு என்று வாழ்ந்தால் தமிழனுக்கு விடிவே வராது.

ஏ.ஆர். அனஹர், புத்தளம்.
கே : எண்ணெய் விலை மீண்டும் அதிகரிக்கப்போகிறதாமே?
ப : எண்ணெய் விலை அதிகரித்தால் எல்லா விலைகளும் அதிகரித்த மாதிரித்தானே!

மாகீர், மாளிகாவத்தை.
கே : நான் துணிக்கடை ஒன்றைச் சொந்தமாக நடத்தி வருகிறேன். மும்தாஜுக்கு ஏதாவது பரிசளிக்க விரும்புகிறேன். என்ன பரிசு கொடுக்கலாம்? பிளீஸ் ஏதாவது ஐடியா கொடுங்களேன்?
ப : துணியை மாத்திரம் கொடுத்திட வேண்டாம். மும்தாஜுக்கு துணி என்றால் அலர்ஜி.

எஸ். ஜெயபிரதீபன், சிலாபம்
கே : பெண்கள் 'பேண்ட்' அணிகிறார்கள். ஆண்கள் சேலை கட்டும் காலம் வந்தால்?
ப : ''சேலைகட்டும் ஆணுக்கொரு வாசமுண்டு...'' என்று கவிஞர்கள் பாடலியற்றுவார்கள்.



பாத்திமா பர்ஹானா, நிந்தவூர்
கே : இலங்கை கிரிக்கெட் அணியில் முஸ்லிம் வீரர்கள் எதிர்காலத்தில் இடம் பெறுவார்களா?
ப : நவீட் நவாஸ் ஏ அணித் தலைவராக தெரிவானாலும் சிரேஷ்ட அணியில் இதுவரை சேர்க்கப் படவில்லை. எனினும் ஜெஹன் முபாரக்கிற்கு அவ்வாய்ப்பு விரைவில் கிட்டுமென எதிர்பார்க்கலாம்.

பி. மாலினி, பதுளை
கே : பெண்களை மானுடன் ஒப்பிடுவது ஏன்?
ப : பெண்களை ஏன் எங்களுடன் ஒப்பிடுகிறீர்கள் என்று மான்கள் கேட்க மாட்டா என்ற துணிச்சல்.




ஆர். தர்ஷன், தெஹிவளை
கே : கிரிக்கெட்டில் இனியும் ஆட்ட நிர்ணய மோசடி இடம் பெறுமா?
ப : திருந்திவிடுவார்கள் என்றுதான் நினைத்தேன். ஆனால் ஜாவிட் மியண்டாட் புதிதாக ஒரு குண்டைத் தூக்கிப் போட்டுள்ளாரே!.

பி. தேவா, வவுனியா.
கே : டியர் பித்தன்...! அறிவு என்றால் என்ன? ஞானம் என்றால் என்ன?
ப : அறிவு என்பது ஆலயம்; ஞானம் என்பது கடவுள்!

எம். ரவிச்சந்திரன், கொழும்பு—06.
கே : கறுப்புத்தான் எனக்குப் பிடித்தமான நிறம் உங்களுக்கு?
ப : எனக்கும் கறுப்புத்தான். பத்திரிகை அச்சில் அதிகமாகப் பயன்படும் நிறம் கறுப்புத்தானே.

ரா. சேகர், கம்பளை
கே : அதுக்கு இதுக்கு என்று போராட்டங்களை நடத்தும் மலையக அரசியல் தலைமைகள், விசாரணை இன்றித் தடுத்து வைக்கப் பட்டிருக்கும் அப்பாவிகளை விடுவிக்கக் கோரி போராட்டம் நடத்தினால் என்ன?
ப : நடத்தலாம்தான்! ஆனால் 'பழையகள்ளைப் புதிய மொந்தையில் பெறப் போராடும் தலைமைகளால் இது சாத்தியமா?

ஜோ. ஜேக்கப், கோப்பாய்
கே : பித்தனே...! புது வருடத்தில் யுத்தத்துக்கு முடிவு கட்டவருமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்திருக்கிறாரே.
ப : ஜனாதிபதி சமாதானத்துக்கு அழைப்பு விடாத புது வருடச் செய்தியே கிடையாதே.

க. சுபத்திரன், பம்பலப்பிட்டி.
கே : மாத இறுதியில் 12 ஆயர்கள் வன்னி சென்று புலிகளைச் சந்திக்கப் போகிறார்களாமே?
ப : ஜெலட்டினும், சூப்பும், நூடில்ஸும்தான் எமக்குத் தேவையா என்று வன்னி மக்கள் கேட்கப் போகிறார்கள்.

செ. மாலதி, தெஹிவளை
கே : அரசு தொடர்ந்து யுத்த நிறுத்தம் செய்யவேண்டும் என்று தமிழ்க் கட்சித் தலைவர்கள் கருத்து வெளியிட்டிருக்கிறார்களே?
ப : இலங்கையில் சமாதானம் வேண்டாம் யுத்தம் தொடர வேண்டும் என்று சொல்லும் துணிச்சல் அரசுக்கே கிடையாது. தமிழ்க்கட்சிகள் எம்மாத்திரம்.

ச.சுபாஜினி, முருங்கன்.
கே : விரும்பாத பெண்களை வில்லங்கப் படுத்தும் ஆண்களை என்ன செய்யலாம்?
ப : சொல்லடி பயன்தராவிட்டால் பொல்லடி.



அ. பார்த்தீபன், நல்லூர்.
கே : யாழ்மாவட்டத்தில் மாதாந்தம் ஒரு லட்சம் மதுபானப் போத்தல்கள் விற்பனை செய்யப்படுகின்றன வாமே?
ப : சீனாவில் மேற்கத்திய கலாசார ஊடுருவலையும் மேற்கத்திய சிந்தனைகளையும் களைந்தெறிய மாஸேதுங் காலத்தில் ஒரு கலாசாரப் புரட்சி தேவைப்பட்டது. சமுதாயச் சீரழிவுகளுக்கு ஒரு முடிவு காண யாழ்ப்பாணத்திலும் ஒன்று தேவை. அதற்கான காலம் விரைவில் வரும்.

எம்.எச.எம்.றஷீல், கல்முனை.
கே : அதி நவீன போராயுதங்கள் ரஷ்யாவிடமிருந்து வருகின்றன வாமே...! அப்படியானால் சமாதானம் முயல்கொம்பா....?
ப : ஆம்! சமாதானம் முயல் கொம்புதான்.

# வலையில் சிக்கும் மனிதர்கள்

'இன்ரநெற்' என்னும் வார்த்தையை அறியாதவர்களே இவ்வுலகில் இல்லை என்னும் அளவுக்கு இன்று அது பிரபலமாகி இருக்கிறது.

இன்ரநெற் என்றால் என்ன என்பதை அறியாதவர்களின் வாயில் கூட இச்சொற்பதம் புகுந்து விளையாடுகிறது. இவ்வுலகில் மாபெரும் தகவல் புரட்சியையே இன்ரநெற் செய்திருக்கிறது; செய்துவருகிறது; செய்யவும் போகிறது. நமது நெற்றியைத் தடவி விட்டு சிந்தனைகளைத் தூண்டிவிடும் இன்ரநெற் இணையத் தளங்கள், பிடரியை நெட்டித்தள்ளி தலைவலியையும் ஏற்படுத்தத் தவறவில்லை.

'வயதுக்கு, மன இயல்புக்கு, கலாசாரத்துக்கு, சமூகத்துக்கு, ஏற்புடையதல்லாத விடயங்கள் புகுத்தப்படுவது' இன்ரநெற்றினால் ஏற்படுத்தப்படும் பிரதான சிக்கலாக இருந்துவருகிறது.

தற்போது இணையத்தள ஆய்வாளர்களின் கவனத்தை ஈர்த்திருக்கும் ஒரு விடயம் 'நெற் அடிமைத்தனம்!'.

போதைப்பொருள், இசை, பணம் என்று மனித மனங்களை அடிமைப்படுத்தி ஆட்டிப்படைக்க உலகில் எத்தனையோ இருக்க, இன்ரநெற்றுக்கு அடிமையானவர்களைப் பற்றிய தகவல்கள் வெளியாகி அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஒருங்கே ஏற்படுத்தியிருக்கின்றன.

இன்ரநெற்றைத் தொடர்ந்து உபயோகித்துப் பழகியவர்கள் தமது கடமைகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு சதாகாலமும் இணையத்தள உலகிலேயே சஞ்சரிக்க ஆரம்பித்துவிடுகிறார்கள். படிப்படியாக அவர்களை இன்ரநெற் ஈர்த்துக்கொண்டு தனக்கு 'அடிமை'யாக்கிக் கொண்டுவிடுகிறது.

ஆரோக்கியமான ஒரு விடயமாகக் கருதப்பட்ட இன்ரநெற் பாவனை, அளவுக்கு மீறியதால் ஆபத்தாக முடியும் நிலைக்கு வந்திருக்கிறது.

'நெற்'றை அதிகமாகப் பயன்படுத்துபவர்கள் மன ரீதியில் பாரிய பாதிப்புகளுக்கு உள்ளாகிறார்கள். தகவல் பக்கங்களை வாசிக்கும் இவர்கள் தாமும் அத்தகவல் பக்கங்களூடே கற்பனையில் வாழ ஆரம்பித்து



விடுகிறார்கள்.

செயல்ரீதியான உலகியல் செயற்பாடுகள் மறந்துபோய் கற்பனை ரீதியிலான வாழ்க்கையை அமைத்துக்கொண்டு அக்கற்பனை வாழ்வுக்குத் தேவையானவற்றை யும் தகவல் பக்கங்களிலேயே தேடிக்கொள்ள முயல்கிறார்கள்.

இன்ரநெற்றுக்கு 'அடிமையானவர்கள்' சிலர் தமது நிலைபற்றிக் கருத்துத் தெரிவித்துள்ளனர். அவற்றிலிருந்து சில—

பிரபல அமெரிக்கப் பத்திரிகையாளரான மய்யா கலாவிட்ஷ் என்பவர் கருத்துக் கூறுகையில், ''ஒன்பது வருடங்களுக்கு மேலாக இன்ரநெற்றை உபயோகித்து வருகிறேன். அதனுடனேயே குடித்தனம் நடத்துகிறேன் என்று சொன்னாலும் தவறில்லை. எனது வாழ்வின் பெரும் பகுதியை இன்ரநெற்றின் முன்னால்த்தான் கழிக்கிறேன்'' என்கிறார். இவர் இன்ரநெற் பாவனைக்குத் தான் அடிமையான வரலாற்றை ஒரு புத்தகமாகவே எழுதியிருக்கிறார்.

இங்கிலாந்தைச் சேர்ந்த கல்லூரி மாணவியான ப்ளோரா தெரிவிக்கையில் ''எனது நண்பர்களுடன் உரையாடுவதற்கு நான் இன்ரநெற்றையே பயன்படுத்துகிறேன். எனது காதலன் அருகிலுள்ள நகரத்தில்தான் வசிக்கிறார். என்றாலும் அவரை நேரில் சந்தித்துப் பேசுவதைவிட 'ஈ—மெயில்' மூலம் செய்தி அனுப்பிப் பதில் பெறுவதில்தான் ஒரு தனி அலாதியே இருக்கிறது. நாள் முழுவதும் 'நெற்' பார்த்துக்கொண்டே இருக்கலாம். பொழுது போவதே தெரியாது'' என்கிறார்.

இவை போன்று இன்னும் ஏராளமானோர் 'நெற்'றுக்குத் தாங்கள் அடிமையாகியிருப்பதை விலாவாரியாக விவரித்திருக்கிறார்கள். இன்ர நெற் என்னும் அழகான— ஆரோக்கியமான— மின்சினால் ஆபத்தான— வலைப் பின்னலில் படிப்படியாக நுழைந்து கொண்டிருக்கும் மனித சமுதாயம் ஒரேயடியாக வலைப் பின்னல்களினுள் சிக்கிக் கொண்டுவிடுமா என்பதே இன்று எம்முன் பூதாகரமாக எழுந்து நிற்கும் கேள்வி!

# சூரியப்புயல் இலங்கையை தாக்குமா?

இந்தியாவையும் அதனை அண்டியுள்ள இலங்கை போன்ற நாடுகளையும் சூரியப் புயல் தாக்குமா?

இது குறித்து விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

விண்வெளியில் உள்ள அனைத்துக் கோள்களும் சூரியனை மையமாக வைத்தே சுழலுகின்றன.

வெப்பம் மிகுந்த கோளான சூரியனில் அடிக்கடி புயல் ஏற்படுவதுண்டு.

சூரியனில் புயல் ஏற்படும் போது நெருப்புப்பந்து போல் காற்று சுழன்று வீசும். மேலும் இந்த திடீர்ப் புயல் காரணமாக வெடிப்புகள் ஏற்பட்டு தீப்பிளம்புகள் பூமி உட்பட பிற கிரகங்களின் மீது பாயும். அந்த நேரத்தில் அதிக சக்தி வாய்ந்த ஹைட்ரஜன் வாயுவும் கதிர் வீச்சும் வெளிப்படும்.

சூரியப்புயல் பூமியைத் தாக்கும்போது பெரிய அளவில் பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளது. சூரியப்புயல் பூமியை நோக்கிப் பாய்ந்து வரும்போது, வழியில் உள்ள செயற்கைக் கோள்களையும் தாக்கும். மேலும் தகவல் தொடர்புக்கருவிகள், மின்சார சேமிப்பு மற்றும் பரிமாண அமைப்புகள் போன்றவையும் பாதிக்கப்படும்.

இந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு சூரியனில் மிகப்பெரிய அளவில் புயல் ஏற்பட்டது. இதனால் பூமிக்கு ஆபத்து ஏற்படும் வாய்ப்பு அதிகமானது.

இதனால் இந்தியாவுக்குப் பாதிப்பு வருமா? என்பது குறித்து பெங்களூரில் உள்ள விண்வெளி இயற்பியல் விஞ்ஞானி பேராசிரியர் ஜக்தேவ்சிங் கூறியதாவது

''சூரியப்புயல் காரணமாக இந்தியா மற்றும் அதைச் சுற்றி உள்ள நாடுகளுக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது

''சூரியப்புயல் காரணமாக ஏற்படும் கதிர் வீச்சுகள் நம்மைத் தாக்கும் அபாயமும் இல்லை.

''வடக்கு ஐரோப்பா, வடக்கு அமெரிக்கா, கனடா, தெற்கு ஆஸ்திரேலியா மற்றும் அண்டார்டிக்கா ஆகிய பகுதிகளில்தான் சூரியப்புயல் ஏற்படும் ஆபத்து உண்டு.''

இவ்வாறு அவர் கூறினார்.

— ப்ராடி

# தலைநகரில் ஒடுக்கமான பாலத்தால் பெரும் அவலம்

## அமைச்சர் பௌஸிக்கு அறிவித்தும் பயன் இல்லையே என்று மக்கள் கவலை




ஆபீசுக்கு வந்ததும் கடிதக் குவியல் மிஸ்டர் க்றோவைத் திக்குமுக்காடச் செய்துவிட்டது. பெரும்பாலானவை பாராட்டுக் கடிதங்கள்.

பிரதேசங்களிலுள்ள குறைபாடு களைச் சுட்டிக்காட்டியும் எத்தனையோ கடிதங்கள் வந்திருந்தன.

இவற்றில் கிராண்ட்பாஸ், ஸ்டேஸ் வீதி பாலம் தொடர்பான கடிதம் மிஸ்டர் க்றோவின் ஓரக்கண் பார்வையை வெகுவாக ஈர்த்தது. ஓய்வு பெற்ற கல்லூரி அதிபர் ஒருவரின் கடிதம் அது. அதனுடன் அவர் பாலத்தின் அவலநிலை பற்றி நெடுஞ்சாலைகள் அமைச்சர் பௌசிக்கு அனுப்பிய ஒரு கடிதத்துக்கான பதிலும் இணைக்கப்பட்டிருந்தது.

மிஸ்டர் க்றோ உடனே ஆசிரியரை அணுகி விஷயத்தைப் பவ்வியமாக எடுத்து ரைத்தார். உடனே உத்தரவு பிறந்தது. "சென்று வா விவரங்களை நேரில் அறிந்து வா" என்பதுதான் ஆசிரியரின் உத்தரவு. "கரும்பு தின்னக் கைக்கூலி வேண்டுமா?" கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த இடத்துக்குப் பறந்தார் மிஸ்டர் க்றோ.



பாலத்தின் நுழைவாயில் வலது பக்கமாக ஆபத்தை விளைவிக்கக்கூடிய அதல பாதாளம் வட்டமிடப்பட்டுள்ளது

அருமையாக விஸ்தரிக்கப்பட்ட பேஸ்லைன் பாதை வழியாகப் புதிய மேம்பாலத்தைக் கடந்து ஊறுகொடவத் தைச் சந்தியி லிருந்து கிராண்ட்பாஸ் செல்லும் இடப் பக்கமாகத் திரும்பிப் பாலத்தை வந்தடைந்தார் மிஸ்டர் க்றோ.

இந்தப் பாலத்தின் நிலை பற்றித்தான் ஓய்வுபெற்ற அதிபர் தனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

அவர் கூறிய குறைபாடுகள் அனைத்தும் அங்கு காணப்பட்டன.

ஊறுகொடவத்தை சந்தியிலிருந்து வேகமாகத் திரும்பி கிராண்ட்பாஸ் வழியாக புறக்கோட்டை, மட்டக்குளி, துறைமுகம் போன்ற இடங்களுக்கு இப்பாலத்தினூடாகவே பஸ்கள், கார்கள், வேன்கள், சைக்கிள்கள் மட்டுமென்ன லொறிகளும் கொள்கலன்களும் கூடச் செல்கின்றன.

கரணம் தப்பினால் மரணம். ஏதாவது ஒரு வாகனம் பாலத்தின் மேல் ஏறு முன் பாதை யை விட்டு விலகினால் பள்ளத்தில் விழ வேண்டியதுதான். பள்ளத்தில் மக்கள் வாழும் பல குடிசை வீடுகள் புறாக்கூடுகளைப் போன்று காணப்படுகின்றன.

அது போக, கிராண்ட்பாஸ் பகுதியிலிருந்து வரும் வாகனங்களும் ஊறுகொடவத்தைச் சந்தியிலிருந்து திரும்பி கிராண்ட்பாஸ் நோக்கி வரும் வாகனங்களும் வேகத்தைச் சற்று அதிகரித்தாலும் அவ்வளவுதான்.

பாலத்தின் மேல் பாதசாரிகள் நடந்து செல்வதற்குக் கிட்டத்தட்ட ஒரு அடி அல்லது இரண்டு அடி அகலமுள்ள நடைபாதைதான் இருக்கிறது. வேகமாக வரும் வாகனங்கள் ஆட்களை மோதி அவலத்தை ஏற்படுத்துவது தவிர்க்க முடியாதது.

களனிகங்கையிலிருந்து கழிவுகள் அனைத்தும் இப்பாலத்தின் கீழுள்ள ஆற்றின் வழியாகவே கடந்து செல்கின்றன. ஆற்றைச் சுற்றிக் குடிசைவீடுகள். ஆயிரக்கணக்கான மக்கள் அவற்றில் வாழ்கிறார்கள். பாலத்தின் அகலம் ஏறத்தாழ 20 அடியிருக்கும். பிரித்தானியர் காலத்திலேயே இது கட்டப் பட்டது. பழைமை வாய்ந்த இப்பாலம் இன்று பயங்கர விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய மரணப்பாலமாய் மாறிவிட்டது.

துவிச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள்களில் இப்பாலத்தை அண்மித்தால் அவர்கள் பாதையின் விளிம்புக்கே செல்ல வேண்டிய நிலை ஏற்படும். பாதசாரிகளுக் கும் இதே நிலை தான்: கீழே பயங்கரமான பள்ளம் எதையும் விழுங்கி ஏப்பம்விடும் நிலையில் வாய்பிளந்து நிற்கிறது.

இவையனைத்தையும் நோட்டமிட்ட மிஸ்டர் க்றோ போட்டோ கிராப்பரைப் பார்த்தார். அவர் குறிப்பறிந்து மளமளவென எல்லாவற்றையும் கிளிக் செய்தார்.

உடனே அங்கு மக்கள் கூடி விட்டார்கள். அவர்களுக்கு மிஸ்டர் க்றோ விஷயத்தைப் பக்குவமாக எடுத்துக் கூறினார். அவர்களும் "உண்மைதான் இந்தப் பள்ளம் எப்போதாவது உயிர்ப்பலி எடுக்கும். அதற்கு முன் ஏதாவது செய்தாக வேண்டும் என்றார்கள்.

ஒரு வருடத்துக்கு முன்னர் இந்தப் பள்ளத்தில் கார் ஒன்று விழுந்தது. தெய்வாதீனமாக அதிலிருந்தோர் காயங்களோடு உயிர்தப்பினர். இந்த விவரங்களையும் அவர்கள் தெரிவித்தார்கள்.

கனரக வாகனங்களை அன்றாடம் தாங்கி நிற்கும் ஸ்டேஸ் வீதிப் பாலம் கட்டாயம் விஸ்தரிக்கப்பட வேண்டும். அது மட்டுமல்ல அபாயத்தை ஏற்படுத்தும் பள்ளத்தாக்கு சரிசெய்யப்படவேண்டும். உடனடியாக இவை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். காரணம் பேஸ்லைன் வீதி மேம்பாலம் வழியாக வேகமாக வரும் வாகனங்கள் திரும்பி ஸ்டேஸ் வீதி வழியேதான் பெரும்பாலும் வரவேண்டியிருக்கிறது. எனவே இந்தப் பாதையும் பாலமும் உடனடியாகத் திருத்தப்பட வேண்டியது காலத்தின் கட்டாயத்தேவையாகும்.



இடது பக்க நுழைவாயிலிலும் அதே நிலை, வாகனங்கள் குறுகிய பாதையின் ஓரத்துக்குச் சென்றால் அவ்வளவுதான்!

பொதுநல நோக்கோடு தகவல் தந்த ஓய்வு பெற்ற அதிபர் கே. மாணிக்க வாசகரைச் சந்தித்து நன்றி கூறிவிட்டு நேராக ஆபீசுக்கு பறந்தார் மிஸ்டர் க்றோ.

—படங்கள்: த. வேலுசாமி





அதிக சக்தியைத் தந்து வயிற்றுப் போக்கை நிறுத்தும்

பாரம்பரியமாக வைத்தியர்கள் அறிவுறுத்தும் அரறூட் கஞ்சி குழந்தைகள் வயதானவர்கள் எவ்வோருக்கும் போஷாக்குமிக்க உணவு— போலிகளைத் தவிர்ப்பதற்கு பிரவுண்சன் அரறூட் மாவு என்று கேட்டு வாங்குங்கள்.

Brownson Arrowroot
பிரவுண்சன் அரறூட் மாவு

BROWNSON INDUSTRIES
139, பாங்ஷால் வீதி, கொழும்பு -11.
T.P: 327197, Fax: 458507



நியூ திவ்யா ஜுவலர்ஸ்
கலை நயத்துடன் தங்கம், வைரம், நவரத்னம் பதித்த அழகிய டிசைன்களில் நகைகளை உங்கள் மனம் கவர் விதத்தில் தெரிவு செய்ய வெள்ளவத்தையில் ஒரே இடம்
NEW DHIVIYA JEWELLERS
42-C, Galle Road, Wellawatte, Colombo - 06.
Tel: 508501, 505065
Specialist in 22kt. Gold Jewellery

மிருனாஸ் சுப்பர்



வீட்டிற்கு தேவையான சகல விதமான மளிகைப் பொருட்கள், இறைச்சி வகைகள், ஐஸ்கிரீம், சொக்லெட், பால்மா, சமையலுக்கான அனைத்து தேவைகளுக்கும்
நம்பிக்கையுடன் நாடுங்கள்



MIRUNA'S SUPER
342, Aluthmawatha Road, Colombo-15.
Tel: 525147 Fax: 075-364298
E-mail: miruna@sri.lk



நியூ திவ்யா ஜுவலர்ஸ்
கலை நயத்துடன் தங்கம், வைரம், நவரத்னம் பதித்த அழகிய டிசைன்களில் நகைகளை உங்கள் மனம் கவர் விதத்தில் தெரிவு செய்ய வெள்ளவத்தையில் ஒரே இடம்
NEW DHIVIYA JEWELLERS
42-C, Galle Road, Wellawatte, Colombo - 06.
Tel: 508501, 505065
Specialist in 22kt. Gold Jewellery